திரிகடுகமும் சிறுபஞ்சமூலமும்

(பழைய உரையுடன்)

சென்னைப் பல்கலைக்கழகம்
தமிழ்-ஆராய்ச்சித்துறைத் தலைவர்
ராவ் ஸாகிப் S. வையாபுரிப்பிள்ளை, B.A., B.L.,
பதிப்பித்தன

சென்னைப் பல்கலைக் கழகம்
1944

Madras University Tamil Series—No. 15

GENERAL EDITOR :

RAO SAHIB S. VÂIYAPURI PILLAI, B.A., B.L.

TIRIKADUKAM AND ŚIRUPANCAMULAM

Title pages and Foreword, Printed by G. S. Press, Madras.

TIRIKADUKAM

AND

ŚIR̲UPAÑCAMŪLAM

EDITED BY

RAO SAHIB S. VAIYAPURI PILLAI, B.A., B.L.,
Reader in Tamil,
University of Madras.

UNIVERSITY OF MADRAS

1944

PREFACE

Tirikaḍukam and Śiṟupañcamūlam now edited with their old commentaries belong to the class of literature known as Kīḻkkaṇakku. The commentary on the former appears now in print for the first time; while that on Śiṟupañcamūlam appeared as long ago as 1875. Since the works are the common pabulum of the school-world, several recent authors have published them with their own commentaries. But, so far, they have not been critically edited.

I have availed myself of the present opportunity to discuss the date of the Kīḻkkaṇakku works in general. Among other evidences, *word-study is here employed in settling problems of* chronology, and this is a new line of inquiry, so far as Tamil Literature is concerned. By its very nature, this line of evidence cannot lead to precise dates; but it is helpful in fixing definite limits. I have tried to show that the Kīḻkkaṇakku group must have been composed between A.D. 450 and 750. Future investigation might necessitate a revision of the upper limit. But it seems very probable that they were composed round about A.D. 650.

The great religious revival which began with the seventh century A.D. had far-reaching effect both on the Tamil Language and its Literature. It was a popular movement which spread rapidly throughout the Tamil Land and stirred the Tamil society to its *depths. The Nāyanārs and Āḻwārs were the accredited leaders of* this revival and they sought to rouse the loyalty and enthusiasm of *the people by their soul-stirring songs. For this purpose, they* employed a vivid style of speech, rich with current idiom of the people, intimate and compelling in its appeal. Besides, they set their hymns to music, and this too required a simple, living diction for its effect. Colourful words in current use, however new they might be to literature, found ready acceptance with them. Popular idiom and syntax were adapted without hesitation. In short, the hymnal literature signalised the triumph of popular speech over the 'cultured dialect' of the day. In the history of Tamil Literature, and of the Tamil Language, as also of the South Indian music, the whole movement occupies a place of unique importance.

With this popular movement synchronised the early ethical works grouped under Kīḻkkaṇakku. Vaḷḷuvar who prized clarity and precision above all, was ready, on occasions, to compromise the classic dignity of his distichs by the adoption of popular forms like 'āṉāl' which served his ends. Indeed, every work in this group of literature contains similar popular forms current about the beginning of the 7th Century A.D. Examples are given in the Tamil introduction and in the excursus at the end of this book.

The *nature* and *significance of the current*, popular forms must be clearly understood. They were the result of a long process of development from the speech of the Sangam period and the development was largely due to the common people who employed it in everyday life. Mr. L. Pearsall Smith rightly observes,* 'As a matter of fact, education, culture and enlightenment, although they help progress in other ways, are intensely conservative in matters of speech and while for their own purposes the educated classes have to connive at changes in the vocabulary, any grammatical advance is opposed by them with all the powers they possess....the progress in English is due not to the increase of education, but to its practical disappearance among those who used the national speech.' This is true of Tamil, as of every other language. These changes in the language were fundamental, and they were noticeable not only in word-forms but in vocabulary as well. Sanskrit words were freely borrowed, and ideas from Sanskrit works freely adopted. In fact a new epoch had dawned. We have passed beyond the limits of Old Tamil, and stepped into the region of Middle Tamil. The Kīḻkkaṇakku works were among the first to appear in this developed speech. But the linguistic changes which inaugurated the new epoch are yet to be studied in detail.

The Kīḻkkaṇakku *works are important in another way also*. The history of ethical thought, the social conditions which determined its nature and course, and the analysis of the several strands which have made up its composite texture are of vital importance to a study of our medieval culture and civilization. And this study opens up a new vista of research to scholars. It may be that some of the ideas in Kīḻkkaṇakku works are echoes from

*English Language—Home University Library Series—P. 17-18.

Sanskrit smrithis. But making full allowance for this, we would still find in this literature several ethical conceptions, original and distinctive.

Such a study, however, is foreign to my purpose. I am here concerned with the linguistic and the textual problems which these works offer, and I have dealt with some of them in my Tamil introduction. In the preparation of this edition, several cadjan manuscripts have been collated, and this has resulted in a considerable improvement both of the texts and the commentaries.

My thanks are due to the Syndicate of the Madras University for their kindness in sanctioning the publication.

University of Madras,
20-10-1943.

S. VAIYAPURI PILLAI,
Reader in Tamil.

ADDENDA

1. While discussing the origin of the name 'Ēlādi' (p. 27, Tamil Introduction) I suggested that it referred to the 'Ēlādi Cūrṇam' consisting of six ingredients. This is borne out by the old Commentary on St. 19 of that work. The Commentary runs as follows:—

எலாதி யென்பது ஆறுகவும் இப்பாட்டு எழுவகையாக எண்ணியது எலாதிக்குக் கண்ட சர்க்கரையுங் கூட்டி எழாமாதலின் எனக் கொள்க.

2. On p. 28 of Introduction, I stated that the original sense of the name 'Ātan' could not be ascertained. St. 175, read with St. 389, of 'Puṟa-nānūṟu, gives us a clue. A chieftain named Mudiyan has the title Ātan Nungan. He is compared to the Sun as he never swerves from his duty of protecting his subjects. May it be that 'Ātan' is a Tamilised form of 'Āditya' or Ātapa'?

3. In St. 63 of 'Siṟupañcamūlam' the expression 'Karam-pōla-k-kaḷḷanōy kāṇum' occurs. I took it to mean 'like Karma causing diseases insidiously (in an unseen manner)'. I find, however, a term 'Kara-viṣa or Kritrima-viṣa' in Aṣṭānga Ḥridaya (uttarastāna 35, 48-59). This is artificial poison administered in secret and working insidiously. The expression 'Karam' most probably refers to this.

4. On page 14 of the excursus, I concluded that 'Tiṇai moḻi-y-aimpadu' (and so its author Kaṇṇañ Cēntanār) must be ascribed to a date posterior to Appar, the Saivaite Saint. Mm. Dr. V. Swaminatha Iyer, however, thinks that this Cēntanār's father Sāttandaiyār is identical with a Sangam poet of the same name. (vide s. v. Sāttandaiyār in Pāṭinōr-varalāṟu of Puṟanānūṟu).

If this were true, Kaṇṇañ Cēntanār would naturally figure among Sangam Poets; but he does not. The Linguistic evidence adduced in the excursus is in full agreement with this fact of non-inclusion and its validity is once more attested. There is absolutely nothing to support the view of the Doctor, except similarity of names.

உள்ளுறை

			பக்கம்
PREFACE			
முன்னுரை		...	1—63
I	பதினெண் கீழ்க்கணக்கில் அடங்கிய நூல்கள்	...	1— 6
II	கீழ்க்கணக்கு என்பதன் பொருள்	...	7— 8
III	கீழ்க்கணக்கு நூல்களின் காலம்	...	9—12
IV	காலவரையறைக்குரிய சான்றுகள்	...	13—24
V	திரிகடுகம் சிறுபஞ்சமூலம் இவற்றின் பெயர்க் காரணம்		25—27
VI	திரிகடுகம் :	...	28—45
	ஆசிரியர்		
	நூலின் அமைப்பு		
	முன் பின் நூல்களோடு தொடர்பு		
	நீதிப்பொருளை வற்புறுத்தும் முறைகள்		
	சில சொல்வழக்காறுகள்		
	நூலின் பழைய உரையும் புத்துரையும்		
	பதிப்பிற் குதவிய பிரதிகள்		
VII	சிறுபஞ்ச மூலம் :	...	45—63
	ஆசிரியர்		
	நூலும் பஞ்ச தந்திரமும்		
	நூலின் அமைப்பு		
	நீதிப் பொருளை வற்புறுத்தும் முறைகள்		
	முன் பின் நூல்களோடு தொடர்பு		
	சில சொல்வழக்காறுகள்		
	நூலின் பழைய உரையும் புத்துரையும்		
	பதிப்பிற் குதவிய பிரதிகள்		
திரிகடுகம் பழைய உரையுடன்		...	1—23
செய்யுள் முதற்குறிப்பகராதி		...	25—26
நூற்பொருளகராதி		...	27—36
சொல்லகராதி		...	37—54
பொதுவுண்மை யகராதி		...	55—56
பாடபேதங்கள்		...	58
பிழை திருத்தம்		...	59
சிறுபஞ்சமூலம் பழைய உரையுடன்		...	1—24
செய்யுள் முதற்குறிப்பகராதி		...	25—26
நூற்பொருளகராதி		...	27—45
சொல்லகராதி		...	46—68
முதுமொழி யகராதி		...	69
பாடபேதங்கள்		...	70—72
பிழை திருத்தம்		...	73
இப்பதிப்பில் காட்டிய மேற்கோள் நூல்கள்		...	74
ஒரு குறிப்பு		...	75
பிற்சேர்வு		...	1—18

முன்னுரை

I

இப்போது வெளியிடப்பெறும் திரிகடுகம், சிறுபஞ்சமூலம் என்ற நூல்களின் மூலபாடங்கள் பலராலும் அச்சிடப்பட்டனவே. ஆனால் இவை திருந்திய பாடத்தோடும் தத்தம்பழைய உரையோடும் இப்போதுதான் முதன்முறை வெளிவருகின்றன.

இந்த இரண்டு நூல்களும் பதினெண்கீழ்க்கணக்கு என்னும் தொகுதியைச் சார்ந்தவை. பதினெண் கீழ்க்கணக்கு என்னும் வழக்கு மயிலைநாதராலும் (நன். உரை 387), பேராசிரியராலும் (தொல்-பொருள். செய். 470, 547 உரை) குறிக்கப்பட்டுள்ளது. எனவே கி. பி. 13, 14-ம் நூற்றாண்டளவில் இவ்வழக்குப் பிரசித்தமா யிருந்தமை புலனாம்.

இத்தொகுதியில் அடங்கிய நூல்கள் இன்ன என்பதுபற்றிச் சுமார் 50 வருஷகாலம் விவாதம் நடைபெற்றுவந்திருக்கிறது. முதன்முதலாக இதனை ஆராயத்தொடங்கியவர் ஸ்ரீ சி. வை. தாமோதரம்பிள்ளை யவர்களே [1].

---

1. 1887-ல் கலித்தொகைப் பதிப்புரையில் (பக். 17),

> நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
> பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
> இன்னிலைசொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
> கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு

என்ற செய்யுளைக் கொடுத்து, அதன்கீழ் "இவற்றுள் கோவை என்றது ஆசாரக்கோவையை. முப்பால் என்றது திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, பஞ்சமூலம் ஆதிய போன்று நாலடி வெண்பாவா னியன்று அக்காலத்திலேயே வழங்கிய மூன்று சிறுத் தருமநூல்களை யென்றும், இன்னிலைசொல் என்றது இன்னிலை, இன்சொல் என்னும் பெயரிய இரண்டு நூல்களின் பெயரே யென்றும் உத்தேசிக்கின்றேன்.. சிலர் ஐந்திணையை ஐந்தொகை யென்று பாடமோதுவர்... 'இன்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே' என்றும் பாட முண்டு... சிலர் முப்பாலை...சங்கத்தாரைப் பங்கப்படுத்தி அழித்து விட்ட தெய்வப்புலமைத் திருவள்ளுவநாயனாரது பொய்யாமொழித் திருக்குறளென்று மயங்கித் தமோறுப" என்று எழுதிச் செல்லுகின்றார்கள்.

பின்னர் 1889—ல் இலக்கணவிளக்கப் பதிப்புரையில் "மா-ா-ா-ஸ்ரீ கோ. ஸ்ரீநிவாச ராகவாசாரியார் அவர்கள் தாம் எழுதிய நாலடியார் நூல்வரலாற்றில்,

கீழ்க் கணக்கு நூல்களைக்குறித்துப் பல தடைவிடைகளைப் பிள்ளையவர்கள் நிகழ்த்தியிருக்கிறார்கள். முதலாவது முப்பால் என்பது வள்ளுவரது திருக்குறளைக் குறிப்பதன்று எனவும், வேறொரு சிறிய நூலாக இருத்தல் வேண்டுமெனவும், அவர்களால் கருதப்பட்டுள்ளது. ஆனால் முப்பால் என்பது திருக்குறளினையே குறிப்பதாகும்.

திருவள்ளுவ மாலையில்[1] கல்லாடரும், சீத்தலைச் சாத்தனாரும், மருத்துவன் தாமோதரனாரும், நாகன் தேவனாரும், கோதமனாரும், முகைய லூர்ச் சிறுகருந்தும்பியாரும், ஆசிரியர் நல்லந்துவனாரும், கீரந்தையாரும், பாரதம் பாடிய பெருந்தேவனாரும், உருத்திர சன்ம கண்ணரும், உறையூர் முது கூற்றனாரும், களத்தூர் கிழாரும், அக்காரக்கனி நச்சுமனாரும், தேனீக்குடிக் கீரனாரும் திருக்குறளை முப்பாலென்றே வழங்கியுள்ளார்கள்.

இலக்கணவிளக்கப் பாட்டியலின் உரையில் தொகைச் செய்யுளின் இலக்கணங் கூறுமிடத்து (சூ. 57, உரை) 'பற்பல' என்றதனால் 'வள்ளுவர் முப்பால், நாலடி... முதலாயின வெல்லாம் ஆமென்றறிக' எனக் காணப்படுகின்றது. அன்றியும் திருக்குறளுக்குரிய பெயர்களைக் கூறும் பழைய செய்யுள் ஒன்று 'முப்பால்' என்பதனையும் உடன் சேர்த்து எண்ணுகிறது.

'நாலடி நான்மணி நானாற்பதைந்திணை முப்பால் கடுகங் கோவை பழமொழி' என்பவற்றுள் ஐந்திணை அகப்பொருட்டுறைத்தாய் ஐம்பது செய்யுளான் மாறன் பொறையனார் இயற்றியதோர் நூலாகக் கீழ்க்கணக்குத் தொகை பதினெட்டாய் தெவ்வாறே வென யான் கொண்ட கொள்கை மாற, ஐந்திணையென்றது திணைகளைப் பற்றிச் சொல்லும் ஐந்து நூல்கள் எனக்கூறி ஐந்திணையைம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது இந்நான்கும் அவ்வைந்திணையைச் சேர்ந்தனவென்றும், இவை போன்றது இன்னு மொன்று இருத்தல் வேண்டுமென்றும் சொற்றனர். கலித்தொகைப் பதிப்புரை எழுதிய பின்னர் மேற்கண்ட நான்கு நூல்கள் எனக்கும் அகப்பட்டன. ஐந்திணை விஷயத்தில் யான் கூறிய கூற்றுச் சரியன்றென்று ஒத்துக்கொள்வது மன்றி ஆசாரியார் அவர்களுக்கு என் வந்தனமும் கூறுகின்றேன்.'' என்று எழுதினர்.

மேலும், '' ஸ்ரீ திரு. த. கனகசுந்தரம் பிள்ளையவர்கள் தமக்கு அகப்பட்டதோர் மிகப்பழைய கீழ்க்கணக்குச் சுவடியில் 'நாலடி நான்மணி' என்னும் செய்யுள் அதிகம் சிதைவு பட்டுக் கிடப்பதில், ஐந்திணை யென்பதற்கு ஐந்திணையைம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது என்னும் நான்குமே உரையிற் குறிக்கப்பட்டிருக்கின்றன என்றும், கைந்நிலை யென்பது அப்பெயரான் உரையோடுள்ளதோர் தனி நூலாகக் கண்டிருக்கிறதென்றும் எழுதி அறிவித்தனர்.'' என்றும் அப் பதிப்புரையிலேயே கூறினார்கள்

1. இதன்கண் 9, 10, 11, 12, 15, 17, 18, 19, 30, 31, 39, 44, 46, 49 என்ற எண்களுள்ள செய்யுட்களைக்காண்க.

இச் செய்யுள் வருமாறு :—

சீரார் திருக்குறள் உத்தரவேதம் திருவள்ளுவர்
பேரார் பொய் யாமொழி வாயுறை வாழ்த்துப் பெருந்தெய்வநூல்
ஊரார் பொதுமறை முப்பால் தமிழ்மறை யொன்பதும்நற்
காராளர் கற்றுணர் செய்யுட்கு நாமங்கள் கார்க்குழலே

இவற்றால் திருக்குறளினையே முப்பாலென நம் முன்னோர்கள் வழங்கினார்களென்பது வெளிப்படை.

இத்திருக்குறள் பதினெண்கீழ்க் கணக்கு நூல்களுள் ஒன்றென்பதும் தொன்றுதொட்டுவரும் வழக்காகும். பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் (செய்யுளியல், சூ 547. உரை) பதினெண் கீழ்க்கணக்கில் இரண்டடிச் செய்யுள் உள்ளது என்று குறிப்பிட்டுத் திருக்குறளிலிருந்து உதாரணமும் காட்டுகின்றனர். 'மாஞ்சீர் கலியுட்புகா' என்னும் காரிகைச் செய்யுளின் (40) உரையில் 'திருவள்ளுவப்பயன், நாலடி நானூறு முதலாகிய கீழ்க்கணக்குள்ளும்' என மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

இக்காரணங்களால் திருக்குறள்பற்றி ஸ்ரீ சி. வை. தாமோதரம் பிள்ளையவர்கள் கொண்ட கருத்துப் பொருந்தாமை யுணரலாம்.

இரண்டாவது இன்னிலை, இன்சொல் என இரண்டு நூல்கள் உளவாகக்கருதி, இவை கீழ்க்கணக்கு நூல்களைச் சார்ந்தனவாதல் வேண்டுமென அவர்கள் உத்தேசித்தார்கள். ஆனால் பின்னர் வெளிப்பட்ட திணை நூல்களால் இக்கொள்கையை அவர்கள் தாமே கைவிட நேர்ந்தது.

இறுதியாக, கைந்நிலை என்பது பதினெண் கீழ்க்கணக்கைச் சார்ந்த ஒரு தனிநூல் என்பதும், உரையுடன் சுவடிகளில் காணப்படுகிற தென்பதும், நாலைந்திணை என எடுத்துத் திணைபற்றிய நான்கு நூல்களாகக் கொள்ளப்பட வேண்டும் என்பதும், இங்ஙனம் கொள்ளுமிடத்துப் பதினெட்டு நூல்களும் இன்னவென விளங்கிவிடுகிறது என்பதும் அவர்கள் நன்கு அறிய வைத்தார்கள். இதுவே உண்மையான துணிபாகும் என்பது 1903—ல் செந்தமிழ்ப் பத்திராசிரியரும், சேதுசம்ஸ்தான வித்வானும், பேராராய்ச்சியாளருமான ஸ்ரீ ரா. ராகவையங்கார் அவர்கள் பதிப்பித்து வெளியிட்ட திணைமாலை நூற்றைம்பது என்ற நூலின் முகவுரையால் நன்குவிளங்கும். டாக்டர் உ.வே. சாமிநாதையர் அவர்களும் தமது ஐங்குறுநூற்றுப்பதிப்பின் (1903) முகவுரையில் கைந்நிலை என்ற நூலினைக் குறித்ததனோடு அதன்கண் திணைகோத்துள்ள முறையைக் காட்டியு மிருக்கின்றார்கள். அம் முறையை நன்றாக ஊன்றிக் கவனித்தால் நாலைந்திணை எனக் கூட்டாது, ஐந்திணை என்றே கொண்டு திணைபற்றிய ஐந்து தனிப்பட்ட நூல்கள் எனக் கருதியுள்ளமை புலனும். இக் கருத்தே தோன்ற ஸ்ரீ ரா. ராகவையங்கார் அவர்களும்

'நன்னிலையதாகும் கணக்கு' என்ற ஓர் பாடத்தைக் காட்டி ' இப்பாடத்துக்கு ஐந்திணை யென்பது ஐந்து திணை நூல்கள் என்க. அவை ஐந்திணையைம்பது முதலிய நான்கும் கைந்நிலையுமாம்' என்று அடிக்குறிப்பாக எழுதியுள்ளார்கள். கடைசியாக, சகம் 1771-ல் (கி. பி. 1849) வேம்பத்தூர் முத்து வேங்கட சுப்பபாரதியாரால் இயற்றப்பட்ட பிரபந்ததீபிகை என்னும் நூலில்,

ஈரொன்பதின் கீழ்க்கணக்கினுட் படும்வகை யியம்பு நாலடி நானூறும்
இன்னுமை நாற்பது நான்மணிக்கடிகை சத மினிய நாற்பான் காரதே'
ஆருகளவழி நாற்ப தைந்திணையு மைம்பதும் ஐம்பதுட னிருபானுமாம்
அலகிலா சாரக்கோ வைசதம் திரிகடுக மையிருப தாகுமென்பர்
சீருறும் பழமொழிகள் நானூறு நூறதாஞ் சிறுபஞ்ச மூலம் நூறு
சேர்முது மொழிக்காஞ்சி யேலாதியெண்பதாம் சிறுகைந்நிலையறுபதாகும்
வாரிதிணைமாலை நூற்றைம்பதாம் திணைமொழி வழுத்தைம்பதாம் வள்ளுவ
மாலையீ ரொன்பதாய்ச் சாற்று பிரபந்தம் வழுத்துவர்கள் புலவோர்களே.

என்ற செய்யுளொன்று (44) காணப்படுகிறது. இதில் 'கைந்நிலை' என்பது பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றென்பதும், அதன்கண் அறுபது செய்யுட்கள் உள்ளன வென்பதும் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. கைந்நிலை என்ற நூல்தானும் 1931-ல் ஸ்ரீ இ. வை. அனந்தராமையர் அவர்களால் வெளியிடப்பட்டது. இப்பதிப்பின் இறுதியில்,

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகு கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியொ டேலாதி யென்பதூஉம்
கைந்நிலையு மாகுங் கணக்கு

என்ற செய்யுட் பாடாந்தரத்தையும் அவர்கள் கொடுத்திருக்கின்றார்கள்.

உண்மை இங்ஙன மிருப்ப, 'இன்னிலைசொல் காஞ்சியோடு' என்ற பாடத்தின் ஆதரவால் இன்னிலை யெனப் பெயரிய நூல் ஒன்று உளதாகல் வேண்டுமென்று ஸ்ரீ தாமோதரம் பிள்ளையவர்கள் ஊகமாகக்கருதியதனை மேற்கொண்டு காலஞ்சென்ற வித்வான் த. மு. சொர்ணம்பிள்ளை யவர்கள் ஏடுகாணும் முயற்சியில் ஈடுபட்டார்கள். இன்னிலை என்ற பெயருள்ள ஓர் ஏட்டுப்பிரதியை அவர்கள் பெற்று அதனை ஸ்ரீ வ. உ. சிதம்பரம்பிள்ளை யவர்களிடம் கொடுத்தார்கள். இவ்வரிய நூலை இயற்றியவர் பொய்கையார் என்றும், இதனைத் தொகுத்தவர் மதுரையாசிரியர் என்றும், கடவுள் வாழ்த்துச் செய்தவர் பாரதம்பாடிய பெருந்தேவனார் என்றும் இதன் பதிப்பாசிரியராகிய ஸ்ரீ வ. உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் எழுதியுள்ளார்கள். இயற்றியவர், தொகுத்தவர், கடவுள்வாழ்த்துச் செய்தவர் என்று

மூவரைக்கூறும் சிறப்புப் பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில்வேறொன்றற்கு மில்லாத தனிச்சிறப்பாகும்! இந்நூல் 1915-ல் பதிப்பிக்கப் பெற்றது. இந்நூற் செய்யுட்களை இளம்பூரணர் எடுத்தாண்டதாக ஐந்து இடங்கள் காட்டப்பட்டுள்ளன. இவை யனைத்தும் இளம்பூரணருரை ஏட்டுப்பிரதியிலும், அச்சுப் பிரதியிலும் காணப்படவில்லை. பொருளதிகாரத்தில் செய்யுளியல் தவிர ஏனைய இயல்களுக்குத் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஏட்டுப் பிரதி ஒன்றேயாம். இரண்டாவது ஒரு பிரதியில்லை என்பது இங்கே மனங்கொள்ளத் தக்கது. பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இந்நூலை எடுத்தாண்டதாக ஸ்ரீ பிள்ளையவர்கள் கூறுகிறார்கள். ஆனால் அவர்கள் காட்டும் இரண்டு இடங்களிலும் பூதத்தார் அவையடக்கு எனக் காணப்படுகிறதே யன்றிப் பொய்கையாரைப் பற்றியேனும், இன்னிலையைப் பற்றியேனும் ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. கடைசியாக, யாப்பருங்கல விருத்தியில் ஒரு செய்யுள் இன்னிலையின்கண்ணே உள்ளது எனப் பிள்ளையவர்கள் காட்டுகிறார்கள். ஆண்டும் அச் செய்யுள் ஔவையார் பாடியதாகக் கொள்ளக்கிடக்கின்றது. இன்னிலையில் உள்ள செய்யுட்கள் சில பண்டைத் தமிழிலக்கண நெறியினின்றும் வழுவினவாகக் காணப்படுகின்றன. உதாரணமாக 'வேலற் றரீஇய விரிசடைப் பெம்மான்' என்ற கடவுள் வாழ்த்துச் செய்யுளில் தரீஇய என்பது தந்த எனப் பெயரெச்சமாக வந்துள்ளது. இங்ஙனம் வருதல் தமிழ்மரபே யன்று. இவ்வாறே தட்பம் என்பது பாசம் என்ற பொருளிலும், உழண்டை என்ற புதுப்பதம் துன்பம் என்ற பொருளிலும், தண்ணீர் என்பது அருள் என்ற பொருளிலும், பூயல் என்ற புதுப் பதம் பொருந்துதல் என்ற பொருளிலும், நாப்பண் என்பது சுவர்க்கம் என்ற பொருளிலும், வட்டல் என்பது திரட்டுதல் என்ற பொருளிலும் வந்துள்ளமை தமிழறிஞர்களுக்கு வியப்பாகவே இருக்கும். கீழ்க்கணக்கு நூல்களில் இவை போன்ற பிரயோகங்கள் காணப்படவில்லை. தமிழ்மொழிக்கே இவ்வழக்குக்கள் புதியனவாம். இக்காரணங்களால் இன்னிலைஎன்பது இக்காலத்து யாரோ ஒருவர் புதுவதாக இயற்றிச் சங்கப்புலவர் ஒருவரது தலையில் சுமத்திய கற்பிதநூல் என்றே கொள்ளத்தக்கது. இப் பொய்ந்நூலை ஸ்ரீ செல்வக் கேசவராய முதலியார் அவர்கள்கூடத் தமது பழமொழிப் பதிப்பிலும், ஆசாரக்கோவைப் பதிப்பிலும் கீழ்க் கணக்கு நூல்களில் ஒன்றெனவைத்து எண்ணி யெழுதியது பெரு வியப்பே.

இந்நூலினை ஓர் உரையாசிரியரும் எடுத்தாளவில்லை யென்பது மேற் கூறியவற்றால் விளங்கும். இதற்கு மாறாக, கைந்நிலைச் செய்யுட்கள் சிலவற்றை [1] இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும், நாற்கவிராச நம்பியும் எடுத்தாண்டிருக்கின்றனர்.

1. தொல், களவியல் 21, இளம்; தொல், களவியல் 22 இளம், நச்.; தொல், கற்பியல், 9 இளம், நச்; அகப்பொருள் விளக்கம், வரைவியல் 6.

மேற் கூறியவற்றால் கைந்நிலை என்ற நூல்தான் கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டனுள் ஒன்று என்பது தெளிவாம். இதனை ஐந்திணை என்று சொல்வதனாற் கொள்வதா அல்லது 'கைந்நிலையுமாகுங் கணக்கு' என்ற இறுதி அடியினாற் கொள்வதா என்று நாம் நோக்குதல் வேண்டும். நாலைந்திணை யென்று கூட்டுவது வலிந்து பொருள் கொள்வதேயாகும். 'கைந்நிலையவாங் கீழ்க்கணக்கு' என்ற பாடத்தில் கைந்நிலைய என்பது கீழ்க்கணக்கு என்ப தற்கு அடையாதல் வேண்டும். 'நன்னிலையதாகுங் கணக்கு' என்ற பாடத் தில் கைந்நிலை என்பதே குறிப்பிடப் படவில்லை.

இன்னிலைய காஞ்சியோ டேலாதி யென்பதூஉங்
கைந்நிலையு மாகுங் கணக்கு

என்று முதலில் அளபெடையோடும், பின்னர் அளபெடை யின்றியும் வரும் உம்மை பயின்ற பாடத்தில் ஐயப்பாடு தோன்றுதற்கிடமுண்டு. எனவே ஐந்திணை என்பதனுள் கைந்நிலையை அடக்கிக் கூறுவதே பொருத்தமான தாகும். கீழ்க்கணக்கு நூல்களை வகைப்படுத்திக் கூறும் செய்யுளின் உண்மை வடிவம்,

'நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய காஞ்சியுடன் ஏலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு.'

என்பதாகலாம். 'ஐந்திணை' என்பதன்கண் ஐந்திணை யைம்பது, ஐந்திணை யெழுபது, திணைமொழி யைம்பது, திணைமாலை நூற்றைம்பது, கைந்நிலை என்ற ஐந்து நூல்களும் அடங்கும்.

II

இனி, கீழ்க்கணக்கு என்பதன் பொருள்தான் யாதெனச் சிந்தித்தல் வேண்டும்.

கீழ்க்கணக்கு நூல்களைத் தொல்காப்பியர் கூறும் அம்மை என்ற வனப்பினுள் உரைகாரர்கள் அடக்குவார்கள். இவ்வனப்பிற்கு

[1]சின்மென் மொழியாற் றாய பனுவலின்
அம்மை தானே அடிநிமிர் பின்றே (தொல். செய். 235)

என இலக்கணம் வகுக்கப்பெற்றுள்ளது. சில எழுத்துக்களான் வந்த எண்ணுச் சுருங்கிய சொற்களால், அடி நிமிர்பில்லாததாய்த் தாயபனுவலின் இலக்கணத்தோடு அமைந்தது அம்மையாகும். 'தாயபனுவல்' என்றது 'அறம் பொருளின்பமெனு மூன்றற்கும் இலக்கணம் கூறுவன போன்றும், இடையிடையே அன்றியும் தாவிச்செல்வது' எனப் பொருள் கொள்ளப்பட்டுள்ளது. இவ்வனப்பிற்கு உதாரணமாகப் பதினெண் கீழ்க்கணக்குத் தரப்பட்டுள்ளது. ஆனால் இச்சூத்திரம் கீழ்க்கணக்கு நூல்களின் யாப்பமைதியும் பொருளமைதியும் உணர்த்துகின்றதேயன்றி, அப்பெயர்க்குக் காரணம் கூறுவதன்று. இங்ஙனமே மிகப்பிற்பட்ட காலத்தெழுந்த பன்னிரு பாட்டியலில்,

அடிநிமிர் பில்லாச் செய்யுட் டொகுதி
அறம் பொருள் இன்ப மடுக்கி அவ்வத்
திறம்பட வருவது கீழ்க்கணக்காகும் (பன்னிரு. 348)

எனவருஞ் சூத்திரமும் யாப்பமைதியையும் பொருளமைதியையுமே உணர்த்துகின்றது.

அகவலுங் கலிப்பாவும் பரிபாடலும்
பதிற்றைந் தாதி பதிற்றைம்ப தீறா
மிருத்துடன் றொகுப்பன மேற்கணக்கெனவும்
வெள்ளைத் தொகையும் அவ்வகை யெண்பெறின்
எள்ளறு கீழ்க்கணக் கெனவும் கொளலே (பன்னிரு. 346)

என்ற சூத்திரத்தால் அடிநிமிர் பில்லாச் செய்யுளாவது வெண்பாவென அறிகின்றோம். இங்கே அடிநிமிர்ந்துவரும் அகவல் முதலியவற்றால்இயன்றது

---

1. இச்சூத்திர முதலியன இயற்றியவர் பெயர் குறிக்கப்படவில்லை. பிற பாட்டியல்களிலும் இச்செய்தி காணப்படுமொறில்லை. எழுத்தியல், சொல்லியல், இனவியல் என்னும் மூன்றியல்களிலும் இறுதியிற் சில சூத்திரங்கள் ஆசிரியர் பெயரின்றியே யுள்ளன. இவை பிற்காலச் சேர்ப்பாக இருக்கலாமா ?

மேற்கணக்கு எனவும், அடி நிமிர்வு இல்லாத வெண்பாவினால் வருவது கீழ்க் கணக்கெனவும் கூறப்படுவதால், கீழ்க்கணக்கு என்றதன் காரணம் ஒருவாறு புலனும். அடி நிமிர்தல் இல்லாமையாகிய கீழ்ப்பட்ட கணக்கில் வருவன கீழ்க்கணக்கு நூல்கள் எனக் கொள்ளப்பட்டன.

ஆனால் இங்கே குறித்த சூத்திரத்தில் காணப்படும் 'மேற்கணக்கு' ஓர் ஆசிரியராலும் எடுத்தாளப்படவில்லை. இதன் காரணம் அறியக்கூட வில்லை. ஒருகால் 'கீழ்க்கணக்கு' என்ற வழக்கினை மனத்துக் கொண்டு 'மேற்கணக்கு' என்ற குறியீட்டினைப் புதுவதாகப் படைத்துக்கொண்டு தொகைநூல்களையும், பத்துப் பாட்டினையும் இக்குறியீட்டால் வழங்கத் தலைப்பட்டனரென்று எண்ண இடமுண்டு. பன்னிரு பாட்டியலில் தவிர வேறு எந்நூலிலும் 'மேற்கணக்கு' என்பது காணப்படவில்லை.

'கீழ்க்கணக்கு' என்பது அங்ஙனமன்று. வேறுசில இடங்களிலும் இவ் வழக்குக் காணப்படுகின்றது. திருநாவுக்கரசு சுவாமிகள்

தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று
அழுது காமுற் றரற்றுகின் றாரையும்
பொழுது போக்கிப் புறக்கணிப் பாரையும்
எழுதுங் கீழ்க்கணக்கு இன்னம்ப ரீசனே (V. 21, 8)

என்று அருளிச் செய்திருக்கின்றார்கள். இதனால் 'கீழ்க்கணக்கு' என்பது ஒரு கணக்குவகையென்பது பெறப்படுகின்றது. 'கீழ்' என்ற அடைமொழியினாலே சிறுகணக்கு, கைக்கணக்கு என்பன போன்ற ஒரு பொருளில் இக்குறியீட்டுமொழி வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் எனத் தோன்றுகிறது. நாவுக்கரசு சுவாமிகள் கொண்டுள்ளது போன்ற ஒருகருத்து பட்டினத்துப்பிள்ளையார் அருளிச்செய்த கோயில்நான்மணிமாலையில்

... ... நின்
தமர்பெயர் எழுதிய வரிநெடும் புத்தகத்து
என்னையும் எழுத வேண்டுவன் (4, 21-23)

என்று வரும் அடிகளிலும் காணப்படுகின்றது. பண்டைக்காலத்தில் தமிழகத்தில் வழக்கமாக எழுதிவைக்கப் பெற்றுள்ள கணக்கு வகைகளுள் 'கீழ்க்கணக்கு' என்பதும் ஒன்றாக இருத்தல் வேண்டும். அதன் இயல்பு இப்பொழுது அறிதற்கரிதாகி விட்டது. இந்திய கணிதசாஸ்திர நூல்க ளில் கீழ்க்கணக்கு என்றதனோடு ஒத்த வழக்காறு யாதும் இருப்பதாகத் தெரியவில்லை.

III

இனி, பதினெண் கீழ்க்கணக்கின் காலத்தைக் குறித்து ஆராய்தல் வேண்டும்.

கீழ்க்கணக்கு நூல்கள் சங்கம் மருவிய நூல்கள் என்பது கர்ண பரம்பரை வரலாறு. இவ்வகை நூல்கள் சிலவற்றின் அச்சுப்பிரதியில் 'சங்கம் மருவிய பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று' எனக் காணப்படுகிறது. முதுமொழிக் காஞ்சியின் ஏட்டுப்பிரதி ஒன்றில் 'இஃது இடைச்சங்கத்தி லுண்டாகிய தமிழ் என்றறியவும்' என்று எழுதப்பட்டுள்ளது! ஒரு கீழ்க் கணக்குப் பழைய ஏட்டில்,

> மாப்புலவ ரெல்லாரும் மாக்கூடற் கண்ணிருந்து
> பாற்படுத்த தென்றமிழின் பானான்கின்—வாய்ப்புடைத்தாய்ப்
> பண்பாய்ந் துரைத்த பதினெட்டுக் கீழ்க்கணக்கும்
> வெண்பாவின் பாலுரைத்தார் மிக்கு

என்று வரும் வெண்பா வொன்று காணப்படுகின்றதென ஸ்ரீ ரா. ராகவையங்கார் அவர்கள் கூறுகிறார்கள். இச் செய்யுளில் புலவரெல்லாரும் கூடற் கண்ணிருந்து ஆய்ந்துரைத்த கீழ்க்கணக்கு என்று வருவதனை நோக்குமிடத்து, சங்கம் மருவிய நூல்கள் இவை என்பதற்கு ஆதாரம் உளதுபோல் தோன்றுகிறது. அன்றியும் திரிகடுகநூலின் இறுதியில்,

> உலகிற் கடுக முடலினோய் மாற்றும்
> அலகி லகநோ யகற்றும்—நிலைகொள்
> திரிகடுக மென்னுந் திகழ்தமிழ்ச் சங்கம்
> மருவுநல் லாதன் மருந்து

என்றொரு வெண்பாக் காணப்படுகிறது. இவ் வெண்பாவினையும், மேற்காட்டப்பட்டுள்ள வெண்பாவினையும் ஒருங்கு சேர்த்துக் கருதுங்கால் கூடற்கண் இருந்த புலவர்கள் தமிழ்ச் சங்கத்தினர் என்று கொள்ளக் கிடக்கிறது.

ஆனால் மதுரையிலேயே பல சங்கங்கள் இருந்தனவாக நாம் அறிகிறோம். எந்தச் சங்கத்தை மேற்காட்டிய செய்யுட்களும், பரம்பரை வரலாறுகளும் கருதுகின்றன என்பது நிச்சயமாகத் தெரியக்கூடவில்லை. சங்கச் செய்யுட்களை இயற்றிய புலவர்களுள் இருவர் பெயர்களே கீழ்க்கணக்கு நூல்களின் ஆசிரியர் பெயர்வரிசையில் காணப்படுகின்றன. அவ்விருவரும் கபிலர், பொய்கையார் என்பவர்களே. இவர்களுள் பாரியின் நண்பராகியும், சங்கச் செய்யுட்களில் (கலித்தொகையை நீக்கி) 206 செய்யுட்களை இயற்றியவராயும் உள்ள கபிலர் என்னும் பெயருடைய புலவர் இன்னா நாற்பது என்ற நூலை

இயற்றிய கபிலரின் வேறானவர் என்றே தோன்றுகிறது. பாரியின் நண்பருக்கு மதுவும், மாமிசமும் உண்ணுதல் உடன்பாடாகும்.

மட்டுவாய் திறப்பவும் மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங்கு ஈயும் பெருவளம் பழுநி
நட்டனை மன்னோ முன்னே

என்று ஒரு புறநானூற்றுச் செய்யுள் (113) அறிவிக்கின்றது. பிறிதோர் செய்யுள் (119) "பாரியின்நாடு செம்புற்றின்கண் ஈயலை இனிய மோரோடு கூட்டி அடப்பட்ட புளிங்கறியை யுடைத்து முன்பு; இனி அது கெடுங்கொல்லோ?" எனக் கபிலர் இரங்குவதாக உணர்த்துகின்றது. அச்செய்யுளின் அடிகள் வருமாறு:

செம்புற் றீயலின் இன்னளைப் புளித்து
மென்றினை யாணர்த்து நந்துங் கொல்லோ?

இன்னா நாற்பது என்ற நூலை இயற்றியவருக்குக் கள்ளும், ஊனும் உடன்பாடல்ல. அவற்றால் இன்னாமை மிக விளையும் என்று கூறுகின்றார்.

கள்ளுண்பான் கூறுங் கருமப் பொருளின்னா (34)

ஊனைத்தின் றூனைப் பெருக்குதல் முன்னின்னா (23)

என்பன இன்னா நாற்பது. இக்கொள்கை யுடையார் ஊனைத்தின்று வாழ்ந்தார் என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றவில்லை. அன்றியும் சங்கப்புலவராகிய கபிலர் அந்தணராவார். 'அந்தணன் புலவன் கொண்டு வந்தனனே' என்று இவரே கூறிய செய்யுள் (புறம் 201) தெரிவிக்கின்றது. இன்னா நாற்பதில் அந்தணர் மூன்று இடங்களில் குறிப்பிடப் படுகின்றார்கள். அம்மூன்றிடங்களிலும் அவர்களுடைய பெருமையை விளக்குவதாக ஒன்றும் காணப்படவில்லை. இதற்கு மாறாக அவர்களை இழித்துக்கூறுவது போலவே தோன்றுகிறது. இதனை நோக்குமிடத்தும், இன்னா நாற்பது என்ற நூலை இயற்றியவர் கபிலதேவர் என்று ஏட்டுப்பிரதிகளிற் காணப்படுவதனை நோக்குமிடத்தும், இவர் அந்தணர் அல்லர் என்று நினைக்க இடமுண்டு.

இனி, களவழி இயற்றிய பொய்கையாரை எடுத்துக்கொள்வோம். இவரும் சங்கப்புலவர்களுள் ஒருவராகிய பொய்கையாரின் வேறானவர் என்றே கருதற்பாலர். களவழி நூல் சோழன் செங்கணானுக்கும், சேரமான் கணைக்காலிரும்பொறைக்கும் நேர்ந்த போரினைப்பற்றி எழுந்தது. சோழனது வெற்றித்திறத்தை மிகுத்துக் கூறுவது. ஆனால் சங்கச் செய்யுட்களில் நற்றிணையில் ஒரு செய்யுட்கும், புறநானூற்றில் இரண்டு செய்யுட்களுக்கும் ஆசிரியராகிய பொய்கையார் சேரமான் கோக்கோதை மார்பனைப் பாடியவர்,

எனவே, இவர் களவழி பாடியவர் ஆகார் என்று நினைத்தல் தகும். இருவரும் ஒருவரேயெனக் கொள்ளுதற்குத்தக்க ஆதாரமின்மையும் இங்கே மனங் கொள்ளுதற்குரியது.

பதினெண் கீழ்க்கணக்கு இயற்றியவர்களைக் குறித்து உரைகாரர்கள் கூறும் ஒரு வாக்கியமும் மேலே முடிபை வலியுறுத்துவதாக உள்ளது. தொல்-செய்யுளியலில் 'நெடுவெண்பாட்டே முந்நான் கடித்தே' என்ற 158-ம் சூத்திர உரையிலே 'பதினெண் கீழ்க்கணக்கினுள்ளும், முத்தொள்ளாயிரத் துள்ளும் ஆறடியின் ஏறுமல் செய்யுள் செய்தார் பிற்சான்றோரும் எனக் கொள்க' என்று பேராசிரியர் எழுதுகின்றனர். ஆகவே பதினெண் கீழ்க்கணக்குச் செய்தவர்கள் பிற்காலத்துச் சான்றோர்கள் எனவிளங்குகிறது; சங்கத்துச் சான்றோர் அல்லர். பிற்சான்றோர் சங்ககாலத்திற்குப் பிற்பட்டவர் என்பது நச்சினார்க்கினியர் 'ஒன்றே மற்றும் செவிலிக் குரித்தே' (தொல்-செய்-175) என்ற சூத்திரத்தின் உரையிற் கூறுவனவற்றால் தெளியலாம். அவ்வுரையில் நெடுநல்வாடையில் சில அடிகளைக் கொடுத்து, இங்ஙனம் சான்றோர் பாட்டினுட் கூறினர்என்றும், 'பிற்சான்றோரும் செம்முகச் செவிலியர் பொய்ந்நொடி பகர என்றார்' என்றும் எழுதுகின்றார். இதனால் பிற்சான்றோர் பத்துப்பாட்டினை இயற்றிய சங்கத்துச் சான்றோருக்குப் பிற்பட்டவரென்பது மிகத்தெளிவாக அறியக்கிடக்கிறது. ஆகவே (பதினெண் கீழ்க்கணக்கு நூல்களை இயற்றியவர்கள் சங்ககாலத்திற்குப் பிற்பட வாழ்ந்த சான்றோர்களாவர். சங்கநூலிலுள்ள கருத்துக்கள் பலவற்றையும் இவர்கள் எடுத்தாண்டுள்ளார்கள்.) ஓரிடம் மட்டும் இங்கே காட்டி அமைகின்றேன்.

கடியலூர் உருத்திரங்கண்ணனார் பெரும்பாணாற்றுப்படையில்

> மனையுறை கோழியொடு ஞமலி துன்னாது
> வளைவாய்க் கிள்ளை மறைவிளி பயிற்றும்
> மறைகாப் பாளர் உறைபதி (299-301)

எனக் கூறுகின்றனர். இங்கே கோழியும் நாயும் அந்தணர் அகத்திலே வருதல் இல்லையென்று கூறப்படுகிறது. கபிலர் தமது இன்னா நாற்பது என்ற நூலில்,

> பார்ப்பாரில் கோழியும் நாயும் புகலின்னா (3)

என்று சொல்லியுள்ளார். முற்கூறியதனைத் தழுவிக் கபிலரது வாக்கியம் எழுந்தது எனக்கொள்ளுதல் தவறாகமாட்டாது.

ஆகவே கீழ்க்கணக்கு நூல்கள் இயற்றியவர்களுள் பெரும்பாலார் சங்கப்புலவர் வரிசையிற் காணப்படாமையானும், பெயரொற்றுமையுள்ள இருவர் தாமும் (கபிலர், பொய்கையார்) சங்கப்புலவரே எனற்குத் தக்க சான்றின்மையானும், இந்நூல்களை இயற்றியோர் பிற்காலத்துச் சான்றோர் என்னும் வழக்கினானும், சங்கச் செய்யுட்களின் கருத்துக்கள் கீழ்க்கணக்கு நூல்களில் பயின்றுவருதலானும், இக்கீழ்க்கணக்கு நூல்களின் ஆசிரியர்கள் சங்கப்புலவர்கள் ஆகார் என்பது திண்ணம். இவர்கள் இயற்றிய

நூல்களைச் சங்கம் மருவிய நூல்கள் என்று கூறுவது உண்மையாயின், இக் கூற்றுப் பிற்காலத்து நிறுவப்பெற்றதொரு தமிழ்ச் சங்கத்தினைக் குறித்த தாகல் வேண்டும்.

இம் முடிவினை வலியுறுத்துதற்கு வேறொரு சிறந்த சான்றும் இங்கே காட்டுதற்குளது. சங்கத்துச் செய்திகள் பலவற்றையும் கீழ்க்கணக்கு நூல்களைச் சார்ந்த பழமொழி பண்டைக்காலத்தில் நிகழ்ந்தனவாகக் குறிப் பிடுகிறது. உதாரணமாக, பேகன் மயிலுக்குப் போர்வை அளித்ததும், பாரி முல்லைக்குத் தேர் அளித்ததும் சங்ககாலச் செய்திகள். இவைகளைப் பழமொழி இயற்றிய முன்றுறையரையனார்

முல்லைக்குத் தேரும் மயிலுக்குப் போர்வையும்
தொல்லை யளித்தாரைக் கேட்டறிதும்—சொல்லின்
நெறிமடற் பூந்தாழை நீடுநீர்ச் சேர்ப்ப
அறிமடமும் சான்றோர்க் கணி (361)

என்ற செய்யுளால் உணர்த்துகிறார். பழைய உரைகாரர் 'தொல்லை யளித்தாரை' என்பதற்குப் பண்டு கொடுத்தாரை என உரை வகுக்கின்றார். இதனால் பழமொழி என்ற நூல் தானும் சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்ட காலத்துத் தோன்றியிருத்தல் வேண்டும் என்பது பெறப்படுகிறது. இதைப் போன்று வேறு சிற் சில சங்ககாலச்செய்திகளும் பழமொழியில் குறிக்கப் பட்டுள்ளமை இங்கே உணரத்தக்கது.

இனி, சங்ககாலத்து இன்றிப் பிற்பட்டெழுந்த சரித்திரச் செய்தியும் இப்பழமொழியில் காணப்படுகிறது. மனுநீதிகண்ட சோழன் சரித்திரம் சங்க நூல்களில் காணப்படவில்லை. இச் சரித்திரம் பழமொழியில்,

சால மறைத்தோம்பிச் சான்றவர் கைகரப்பக்
காலை கழிந்ததன் பின்றையும்—மேலைக்
கறவைக்கன் றூர்ந்தானைத் தந்தையு மூர்ந்தான்
முறைமைக்கு மூப்பிளமை யில் (93)

என்று வரும் செய்யுளில் சொல்லப்பட்டுள்ளது. ஈண்டும் 'மேலைக் கறவைக் கன்றூர்ந்தானைத் தந்தையும் ஊர்ந்தான்' என்று வந்துள்ளமை கவனித்தற்குரியது. மேலை என்பதற்கு உரைகாரர் 'முன்பொரு காலத்து' என்று எழுதினர். இதனால் சங்க காலத்திற்குப் பிற்பட்டெழுந்த சரித்திரம் கூட மிக முற்பட்ட காலத்துச் செய்தியாகப் பழமொழி அறிவிக்கின்றது. எனவே இந்நூல் முதலிய கீழ்க்கணக்கு நூல்கள் சங்ககாலத்திற்கு மிகமிகப் பிற்பட்ட காலத்தில் தோன்றின என்பது உறுதியாகின்றது.

நக்கீரர் இயற்றிய களவியலுரையில் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந் தார் பாடிய நூல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கீழ்க்கணக்கு நூல்கள் காணப்படாமையும் மேலை முடிபை வலியுறுத்துகின்றது.

இனி, கீழ்க்கணக்கு நூல்கள் இன்ன காலத்துத் தோன்றின என அறுதியிடுதற்குரிய சிலசான்றுகளை ஆராய்வோம். இந்நூல்களை எண்ணிட்டுக் கூறும் செய்யுளில் முதலாவது நிற்பது நாலடி. இதன்கண்ணுள்ள இரண்டு செய்யுட்கள் பெருமுத்தரையர் என்பவரைப் புகழ்ந்து பேசுகின்றன. அச் செய்யுட்கள் வருமாறு :

பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்
கருனைச்சோ றார்வர் கயவர்—கருனையைப்
பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை
நீரும் அமிழ்தாய் விடும் (200)

மல்லன்மா ஞாலத்து வாழ்ப வருளெல்லாஞ்
செல்வ ரெனினுங் கொடாதவர் நல்கூர்ந்தார்
நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார் (296)

இங்கே குறிப்பிடப் பெறும் முத்தரையர்[1] கொடையிற் சிறந்தவரா யிருந்தார் என்பதும், பெருஞ் செல்வராயிருந்தார் என்பதும் இச் செய்யுட்க ளால் விளங்குகின்றன. முத்தரையர் என்ற ஒரு குறுநிலமன்னர் பரம்பரை முற்காலத்திருந்தது. இப்பரம்பரையார்கள் சைன ஆசாரியர்களாலும் பாராட்டப் பெற்றவர்கள் என்பது செந்தலைச் சாசனத்தில் ஆசாரியர் அநிருத்தர் இவ்வம்சத்தவருள் ஒருவரைப் புகழ்ந்து பாடி யிருப்பதனால் விளங்கும். தங்கள் போர்த்திறமையினாலும், கொடை மேம்பாட்டினாலும் இவர்கள் கி. பி. 7-ம் நூற்றாண்டிலிருந்துதான் பிரபலமடைந்திருந்தார்கள் என்று சரித்திரம் உணர்த்துகிறது. இவ்வம்ச சரித்திரம் கி. பி. 7-ம் நூற்றாண்டின் இறுதியிலிருந்து, 9-ம் நூற்றாண்டு முடியக் கிடைக்கின்றது. 7-ம் நூற்றாண்டுக்குமுன் இவ்வம்சத்தைக்குறித்துச் சரித்திரபூர்வமாக யாதும் அறியோம். செந்தலைச் சாசனத்தால் பெரும்பிடுகு முத்தரையன் என்ற பெயரோடு இருவர் அறியப்படுகின்றார்கள். இவருள், முந்தியவன் (குவாவன் மாறன்) பாட்டன்; பிந்தியவன் (சுவரன்[2] மாறன்) பேரன். பாட்டனாகிய பெரும் பிடுகு முத்தரையன் நாலடியாரில் குறிக்கப்பட்டவ னாகலாம். பிடுகு[3] என்பது வேற்றுமொழி யாகலின் தமிழ்நூலில் ஒழிக்கப்பட்டது போலும். கி. பி. 7-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியில்

1. இப்பெயரை மு+தரையர் என்றும், முத்து+அரையர் என்றும் பிரித்துப் பொருள் கொள்வர்; இரண்டும் பிழையாம். மூத்த அரையர் என்பது குறுகிவந் துள்ளது; 'விழுப்பேரரையர்' முதலிய சாசனப் பெயர்களை நோக்குக.

2. சுவரன் என்பது 'பரமேசுவரன்' என்பதன் முதற்குறை. 'சுவரன்மாப் பூதன்' (தொல்-இளம்-பக்-369) என்றதும் காண்க. 3. இதற்கு 'இடி' என்று பொருள்.

அரசுபுரிந்துவந்த முதற் பரமேசுவரவர்ம பல்லவனுக்குப் பெரும்பிடுகு என்று ஒருபெயர் வழங்கிவந்தது. இந்தப் பல்லவன்கீழ்க் குறுநிலமன்னனாக இருந்த முத்தரையனும் இப்பெயரே சிறப்புப்பெயராகப் பெரும்பிடுகு முத்தரையனென வழங்கப்பட்டான் என்று கொள்ளுதல் சாலும். நாலடியாரின் பழையவுரை 'பெருமுத்தரையர் என்னுஞ் சிறப்புப்பெயர் பெற்ற செல்வர் பெரிதுங் காதலித்தது ஈயுங் கருனை' என்று கூறுவது இதனை வலியுறுத்துகிறது. (பெருமுத்தரையன் காலம் 7-ம் நூற்றாண்டின் இடைப்பகுதியாகவே, நாலடியாரும் உத்தேசமாக கி. பி. 650-ல் இயற்றப்பட்டிருக்கவேண்டும்.)

இனி, கீழ்க்கணக்கு நூல்களில் பிறவற்றின் காலங்களைத் துணிவதற்குச் சான்றுகள் உளவோ என ஆராய்வோம்.

முதலாவது வள்ளுவரது காலத்தை நோக்குவோம். இவரால் கடைச் சங்கம் அழிவுற்றது எனக் கர்ண பரம்பரை வரலாறு கூறும். ஆதலால் கடைச்சங்கத்தில் நூல்கள் தொகுக்கப்பெற்ற காலத்திற்கும் இவர் பிற்பட்டவர் என்பது தெளிவு. சங்கச் செய்யுட்களாகிய தொகைநூல்களைத் தொகுத்த காலப்பகுதி வேறு, அச் செய்யுட்களைப் புலவர்கள் இயற்றிய காலப்பகுதி வேறு என்பதைச் சிறிதளவும் நாம் மறக்கலாகாது. இச்செய்யுட்கள் கி. பி முதல் அல்லது இரண்டாம் நூற்றாண்டில் இயற்றப்பெற்றிருக்க வேண்டும் என்றும், இவைகள் நான்காம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது 5-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தொகுக்கப் பெற்றிருக்கவேண்டும் என்பதும் எனது குறுந்தொகை ஆராய்ச்சி யுரையில் (கரந்தைத் தமிழ்ச்சங்க வெள்ளிவிழா வெளியீடு. பக்-172-186) தெளிவித்திருக்கின்றேன். இக்கால வரையறை எவ்வகையால் நோக்கினும் பொருத்தம் உடையதாகவே காணப் படுகிறது. ஆகவே வள்ளுவர் கி. பி. 5-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்தவராதல் வேண்டும் எனக் கொள்ளுதல் ஏற்புடைத்தாகும். இது வேறு சில சான்றுகளானும் உறுதியடைகின்றது. (சங்கநூல்களில் அகநானூற்றைத் தொகுப்பித்தான் பாண்டியன் உக்கிரப்பெருவழுதி. தொகுப்பித்தான் என்ற அளவில் இவனது காலம் 5-ம் நூற்றாண்டின் தொடக்கமாதல் வேண்டும் எனக் கொள்ளலாம். இவன் வள்ளுவரது முப்பாலைப் புகழ்ந்து பாடியுள்ளான் என்று திருவள்ளுவமாலை உணர்த்துகின்றது. திருவள்ளுவமாலையின் உண்மையியல்பு எவ்வாறாயினும் ஆகுக. வள்ளுவர், உக்கிரப் பெருவழுதியின் காலத்தவர் என்று பிற்காலத்தவர் கருதக்கூடிய அளவில் இருவரும் நெருங்கிய காலத்தினராய் இருந்தனர் என்று நாம் கொள்ளுவதில் தவறொன்றும் இல்லை. எனவே 5-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வள்ளுவர் வாழ்ந்தனர் என்று கொள்ளுவது நேரிது.)

இவரது பெருநூலிலே பாக்கியம் (1141), பூசனை (18), மங்கலம் (60) முதலிய வட சொற்கள் காணப்படுகின்றன. மங்கலம் என்ற சொல் தொல்காப்பியத்திலும் உள்ளதாகும். பெருமங்கலம், வாண்மங்கலம்

(தொல். புறத், 36), மங்கலமொழி (தொல். பொருள். 50), மண்ணுமங்கலம் (தொல். புறத். 13, 36)! என்ற பிரயோகங்களைக் காண்க. ஆனால் பாக்கியம் என்ற சொல்லும் பூசனை என்ற சொல்லும் சங்கநூல்களில் வழங்கப்படாதன. இங்ஙனம் தனிமொழியேயன்றி ஆதிபகவன் என்ற இருமொழித் தொடரும் வள்ளுவரால் கையாளப்பட்டுள்ளது. இதுபோன்ற வடமொழி வழக்கும் சங்க இலக்கியங்களில் காணுமாறில்லை. ஒருவந்தம் (563,593) என்ற சொல் வள்ளுவரில் இரண்டு இடங்களில் உள்ளது. இச்சொல்லில் ஒரு என்பது தமிழ்; அந்தம் என்பது வடசொல். இவ்விரண்டும் இயைந்து ஒருசொன் னீர்மைப்பட்டு வடமொழியிலுள்ள ஏகாந்தம் என்பதற்குரிய கலவைச் சொல்லாக (hybrid) தமிழில் ஆளப்பட்டுள்ளது. இக்கலவை ஆட்சியும் சங்கநூல்களில் காணப்படாததொன்றாம். இங்குக் காட்டியன வெல்லாம் வடசொற்களை எடுத்தாளுதலில் வள்ளுவர் விரிந்த மனப்பான்மை யுடையவர் என்பதை நன்கு தெரிவிக்கின்றன. இம் மனப்பான்மையும் சங்ககாலத்தின்றிப் பிற்காலத்துத் தோன்றியதேயாம். இவற்றாலும் சங்க காலத்திற்குப் பிற்பட்டவர் வள்ளுவர் என்பது நன்கு உணரக்கிடக்கின்றது.

இத்துணிபு உண்மையாதல் வள்ளுவர் வழங்கியுள்ள ஒரு சில தமிழ்ச் சொற்களாலும் அறியலாகும்.

> இரப்பன் இரப்பாரை யெல்லாம் இரப்பிற்
> கரப்பா ரிரவன்மி னென்று (1067)

என்ற குறளில் இரப்பன் என்ற சொல்லும்,

> உள்ளுவன் மன்யான் மறப்பின் மறப்பறியேன்
> ஒள்ளமர்க் கண்ணாள் குணம் (1125)

> உள்ளுவன் மன்யா னுரைப்ப தவர்திறமாக்
> கள்ளம் பிறவோ பசப்பு (1184)

என்ற குறள்களில் உள்ளுவன் என்ற சொல்லும் காணப்படுகின்றன. ஈரிடத்தும் 'உள்ளுவல்' எனக்கொள்ளுதல் அமையுமேனும், 'அன்' ஈறு வள்ளுவர்க்கு உடம்பாடாதலின் உரைகாரர்'உள்ளுவன்'என்றே கொண்டனர். இவ்விரண்டும் எதிர்காலம்பற்றித் தன்மையொருமையில் வந்துள்ளன. இதற் குரிய விகுதியாக அல் என்பதே தொல்காப்பியனாரால் படிக்கப்பட்டுள்ளது (தொல். சொல். 200). உண்பல், தின்பல் என்பன உதாரணங்கள். பிற் காலத்தில் அல்லீறு அன்னீறாக வழங்கத் தலைப்பட்டது. இளம்பூரணர் 'கடதறவென்னும்' (தொல். சொல். 200) சூத்திர உரையில் 'இப் பொழுது இதனை உண்பன், தின்பன் என அன்னீறாக வழங்குப' என் றெழுதினர். நேமிநாதநூலாரும் 'அல்லும் தனித்தன்மையாம்' (சொல். 39) என்றே கூறியொழிந்தார். இதன் உரையில் "இக்காலத்து அல்வினை அன்னாய் நடக்கவும் பெறும்; என்னை 'அல்வினை அன்னாய்த் திரியவும்

பெறுமே'; உதாரணம் 'கூறுவன்' என்றார் அமிதசாகரர்" என்று காணப்படுகிறது. இக் கூற்றுக்களால் எதிர்காலம் குறித்துத் தன்மையொருமையில் அன்விகுதி பெறுதல் மிகப் பிற்பட்டகாலவழக்கு என்று தெரியலாம். ஆகவே இவ்வகை வழக்குக்கள் காணப்படுகின்ற திருக்குறளும் சங்ககாலத்திற்கு மிகப் பிற்பட்ட காலத்த தாகல்வேண்டும்.

இனி, வேறொருவகைச் சொற்களை நோக்குவோம். வள்ளுவர்

வகுத்தான் வகுத்த வகையல்லாற் கோடி
தொகுத்தார்க்குந் துய்த்த லரிது (377)

இல்லதென் இல்லவள் மாண்பானல் உள்ளதென்
இல்லவள் மாணக் கடை (53)

என்ற குறள்களில் 'அல்லால்[1], 'ஆனல்' என்ற வினையெச்சங்களை வழங்குகிறார். இவ்விரண்டு எச்சங்களும், சங்கநூல் வழக்கிற் காணப்படாதன. 'அல்லால்' திருக்குறளில் 12 இடங்களில் (7, 8, 16, 233, 235, 377, 406, 497, 515, 762, 1095, 1188) வருகின்றது. இதன் சொல்லமைப்பும் ஊன்றி நோக்கத்தக்கது. அல் என்ற வினைக்குறிப்படியாக ஆல் என்ற எச்சவீறு புணர்ந்து வந்ததென்றேனும், அல்லது அல்லாமை என்பது அல்லாமல் எனத்திரிந்து பின் மகரங்கெட்டு அல்லால் என நின்றது என்றேனும், கொள்ளுதல் வேண்டும். 'ஆல்' என வரும் ஓர் எச்ச-ஈறேனும் 'அல்லால்' என்பதுபோன்ற வழக்குக்களேனும் தொல்காப்பியத்திலாதல், சங்க நூல்களிலாதல் காணப்படுமாறில்லை. இவ்வழக்கு மிகப்பிற்பட்ட காலத்தில் தோன்றி இன்றளவும் நிலைத்து நிற்கின்றது.

'அன்னே யுன்னை யல்லால் இனி யாரை நினைக்கேனே'

என்று சுந்தரர் 9-ம் நூற்றாண்டி னிடையில் பாடியருளினர். 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாவுக்கரசர்,

'நீதியால் நின்னை யல்லால் நினையுமா நினைவிலேனே' (IV, 63, 1)
என அருளிச்செய்தனர். 6-ம் நூற்றாண்டில் காரைக்காலம்மையார்,

'திறத்தான் மடநெஞ்சே சென்றடைவ தல்லால் (47)
என்று அற்புதத் திருவந்தாதியில் கூறியருளினர். பிற்சங்கநூலெனத்தகும் கலித்தொகையில்,

'ஆயிழாய், நின்கண் பெறினல்லால் இன்னுயிர் வாழ்கல்லா
என்கண் எவனோ தவறு'. (88)

என வந்துள்ளது. இவ்வகை வழக்கு இன்னும் மூன்றிடங்களிலும் (15, 83, 102) புலப்படுகின்றது. இந்நூலிற் போலும் 'ஆனல்' என்பது

காணப்படவில்லை. முற்குறித்த சொல்வழக்கின் காலத்தோடு ஒட்டியே இக்கலித்தொகையின் காலமும் இருத்தல்வேண்டும். ஆகவே இது தோன்றியது 4-ம் நூற்றாண்டின் இடைப் பகுதி எனக்கொள்ளலாம். வள்ளுவர் 'அல்லால்' என்பதை மிகுதியாக எடுத்தாள்வதினாலும், சங்க நூல்களில் யாண்டுங் காணப்படாத 'ஆனல்' என்பதனை ஆளுதலினாலும் இவரை 5-ம் நூற்றாண்டினரென்று கொள்ளுதல் நேரிதாகலாம்.

எதிர்மறைவினையெச்சப் பொருளில்வரும் வேறு சில ஈறுகளை நோக்கினும் இம் முடிபே வலியுறுகின்றது. 'மல்' என்னும் ஈறு தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களில் இல்லை. உரைகாரர்களுள்ளும் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இவ் ஈற்றினைக் குறிக்கின்றனர். 'கூறாமை நோக்கிக் குறிப்பறிவான்' (குறள்-701), 'காணாமை யுண்ட கடுங்கள்ளை' (கலி. 115) முதலிய பிரயோகங்களை நோக்குமிடத்து எதிர்மறைப் பெயரீறாகிய 'மை' என்பது முதலில் எச்சப் பொருளில் வழங்கிற்றாதல் வெளிப்படை. இதுவே 'மல்' எனவும், மிகப் பிற்பட்ட காலத்து 'மே' எனவும் திரிந்து வழக்கிற் புகுந்தது. 'மல்' என்பது சங்கநூல்களிற் பிற்பட்ட கலித்தொகையில்[1] காணப்படுகிறது. இதனினும் பிற்பட்ட காலத்தவையாகிய தேவார திருவாசகம்[2] முதலியவற்றில் 'மே' காணப்படுகின்றது. திருக்குறளில் 'சூழாமல்' (1024) 'செய்யாமல்' (101,313) என்ற வழக்குக்கள் உள்ளன. இவையும் இந்நூல் கடைச்சங்கத்திற்குப் பிற்பட்ட காலத்தது என்பதை யுணர்த்துகின்றன.

இங்ஙனமே வேறு சிலவகை யீறுகளும் மேலை முடிபினையே வற்புறுத்துகின்றன. 'எனின்' 'எனில்' 'ஏல்' என்ற மூன்று ஈறுகளும் ஒன்றினின்று ஒன்று முறையே தோன்றியனவாம். இவற்றுள் 'எனின்', 'எனில்' என்பவை னகர-ஈறு லகர-ஈறாகத் திரிந்து வந்த ஒருபெருந்தொகுதிச் சொற்களின் பிரதிநிதியெனக் கொள்ளத்தக்கன. 'உணின்' 'உணில்' (குறள் 922) எனவும், 'எண்ணின்', 'எண்ணில்' எனவும், 'கூறின்' 'கூறில்' எனவும் வருவனவாதியவற்றைக் கருதினால், தமிழின் ஒலியியலில் ஒருகாலத்து இம்மாறுபாடு பெருவரவிற்றா யிருந்தமை அறியப்படும். 'எனில்' என்பது 'ஏல்' எனத்திரிந்தது ஒலி வரலாற்றோடு ஒத்ததேயாம். இரண்டுகுறிலுக்கு மாறாக ஒருநெடில் வந்து ஒலிதிரப்பிச் சொற்கள் பயின்றுள்ளமை யாண்டுங் காணப்படுவதேயாம். 'பகுதி' 'பாதி', 'பெயர்' 'பேர்' முதலியவற்றை நோக்குக. இந்த 'ஏல்' என்னும் எச்ச ஈற்றை முன்னிலையெதிர்மறையில் வரும் 'அல்' (மகனெனல்), 'ஆல்' (அழாஅல்), 'ஏல்' (செய்யேல்) என்ற வரிசையில் வரும் 'ஏல்' என்பதினின்றும் வேறுபிரித்துணர்தல்வேண்டும். எச்ச ஈறாகிய 'ஏல்' சங்கநூல்களில் யாண்டும் காணப்

1 கூறுமற் குறித்ததன்மேற் செல்லுங் கடுங்கூளி (கலித் 1.)

2 கற்றுங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்-சம்பந்தர்
சிறுநெறிகள் சேராமே திருவருளே சேரும் வண்ணம்-அச்சோ, 2.

படாதது; சொல்வரலாற்றில் பிற்படத்தோன்றியது. இவ் 'எல்' திருக்குறளில் காணப்படுகின்றது. உதாரணமாக,

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல்
மீக்கூறு மன்ன னிலம் (386)

என்ற குறளில் 'அல்லனேல்' என்பது வந்துள்ளது. இங்ஙனமே 'இன்றேல்' (556, 573, 575, 996, 1014, 1144), 'உண்டேல்' (368, 1075, 1151), 'செய்வானேல்' (655) 'வல்லையேல்' (1118) முதலிய சொற்களும் திருக்குறளில் வழங்கி யுள்ளன. இவ்வழக்குக்களும் இந்நூல் சங்க காலத்திற்குப் பிற்பட்ட தென்பதை நன்குணர்த்துகின்றன.

பிற்காலத்தெழுந்த பிறிதோர் ஈற்றினை மட்டும் இங்கே கூறி அமைகின்றேன். தொல்காப்பியர்

கள்ளொடு சிவணும் அவ்வியற் பெயரே
கொள்வழி யுடைய பலவறி சொற்கே (சொல்-69)

என்று கூறுகின்றனர். இதனால் அஃறிணையியற்பெயர் 'கள்' விகுதிபெற்றுப் பன்மைப்பொருளை யுணர்த்து மென்பது பெறப்படுகின்றது. உதாரணம்: நாய்கள், குதிரைகள். உயர்திணைக்கு இவ்விதி விதிக்கப்படவில்லை. உயர்திணைக்கண் 'கள்' வரும் வழக்குச் சங்க நூல்களிற் காணப்படவுமில்லை. 11-ம் நூற்றுண்டினதாகிய வீரசோழியம் 'கூறியசொற்பின்' (33) என்று தொடங்கும் காரிகையில் பலர்பாற்கண் 'கள்' வருதல் சிறப்பின்றென அறிவுறுத்துகிறது. நேமிநாதத்தில்

கள்ளொடு வந்தா லிருதிணைக்கும் பன்மைப்பால்
ஒள்ளிழாய் தோன்றலு முண்டு (சொல். 6)

எனப் பொதுப்படச் சூத்திரம் காணப்படுகிறது. இந்நூல் சங்க காலத்திற்கு மிகப் பிற்பட்டநூல். இதன் உரைகாரர் 'உயர்திணை ஒருமைப் பெயரும் ஒரோவழிக் கள்ளொடு வந்தால் பன்மைப்பால் தோன்றுவனவும் உள' என்று கூறுகிறுர். எனவே உயர்திணைப் பன்மையில் 'கள்' வருதல் தம்காலத்து அருகித்தோன்றிய வழக்கென்பது அவர் கருத்தாகல் வேண்டும். நன்னூலில்

களந்த கிளைமுத லுற்றரவ் வீற்றவும்
கள்ளெ னீற்றி னேற்பவும் பிறவும்
பல்லோர் பெயரின் பகுதி யாகும் (சூ-277)

என யாதொரு நியதியுமின்றி உயர்திணைப் பன்மையிற் 'கள்' வருதல் உணர்த்தப்படுகிறது.

இப் பலர்பால் விகுதியைத் திருக்குறள் எடுத்தாளுகின்றது. உதாரணமாக,

வரைவிலா மாணிழையார் மென்றோள் புரையிலாப்
பூரியர்க ளாழு மளறு (919)

என்பது வரைவின்மகளிர் என்னும் அதிகாரத்தில் வந்துள்ள ஒரு குறள். இங்கே 'கீழ்மக்கள்' என்று பொருள்படும் 'பூரியர்' என்ற சொல் 'கள்' விகுதி புணர்த்து வழங்கப்பட்டுள்ளது. இங்ஙனமே

'துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்கள் தவம் (263)

என மற்றையவர் என்பது 'கள்' விகுதி புணர்த்து ஆளப்பட்டுள்ளது. ஆகவே சங்க காலத்தில்லாது பிற்பட்ட காலத்துப் புகுந்த இவ்வழக்கு வள்ளுவர் திருக்குறளிற் காணப்படுதலாலே, திருக்குறளும் சங்க காலத்துக்குப் பிற்பட்ட நூல் என்பது தெளிவாம். நாவுக்கரசு 'செல்வர்கள்' 'அமரர்கள்' (v. 65) என ஆட்சி புரிந்துள்ளார். காரைக்காலம்மையார் 'உற்றார்கள்' என ஆண்டனர் (திருவிரட்டைமணி 20). 5-ம் நூற்றாண்டின் முன்னர் இவ்வழக்குக் காணுதலரிது. எனவே சுமார் கி. பி. 450-ல் திருக்குறள் தோன்றிய தெனக் கொள்ளுவோமாயின், அது உண்மையொடுபட்டதாகவே இருக்கலாமெனத் தோன்றுகிறது.

இதுகாறுங் கூறியவற்றால் நாலடியாரின் காலமாகிய கி. பி. 650 கீழ்க்கணக்கு நூல்களின் நடுக்காலமாகவும், திருக்குறளின் காலமாகிய கி. பி. 450 அந்நூல்களின் முன்னெல்லையாகவும் கொள்ளத்தக்கன. பின்னெல்லையை உணர்த்தற்கு ஏதேனும் சான்றுகள் உளவோவென நோக்குவோம். காலஞ்சென்ற திரு. செல்வக்கேசவராய முதலியார் பதிப்பித்துள்ள ஆசாரக்கோவையின் முன்னுரையில் அந்நூற்பொருள்கள் 'பெரும்பான்மையாய் வடமொழியிலுள்ள சுக்ரஸ்மிருதியிலிருந்து தொகுத்தவை என வடநூற்புலவர் கூறுகின்றனர்' என்றெழுதினர். இலக்கணவிளக்கப் பாட்டியலில் 141-ம் சூத்திரவுரையில் மொழிபெயர்த்தலுக்கு உதாரணமாக ஆசாரக்கோவை கொடுக்கப்பட்டுள்ளது. இந்நூலையியற்றிய பெருவாயின் முள்ளியார் தாமும் 'ஆரிடத்துத் தானறிந்த மாத்திரையான்........ஆசாரக்கோவை' யெனத் தொகுத்த செய்தியை உணர்த்துகின்றார். எனவே இந்நூல் வடமொழி நூலின் வழித்தோன்றியது என்பதில் சிறிதும் ஐயப்பாடில்லை.

ஆனால் 'ஆரிடத்து' என ஆசிரியர் பொதுப்படக் கூறுவதாலும், 'தொகுத்தான்' என விவரித்தலாலும், ஸ்மிருதிகள் பலவற்றிலிருந்து ஆசாரக்கோவைப் பொருள்கள் தொகுக்கப்பெற்றனவென்று கொள்ளுதலே தக்கது. சுக்ரஸ்மிருதி எனப்படும் உசனஸ் ஸம்ஹிதைக்கும் ஆசாரக்கோவைக்கும் கருத்தொற்றுமைகள் பல காணப்படுகின்றன. உதாரணமாக ஒருசில காட்டுகின்றேன்.

உஶந꞉ஸம்ஹிதா	ஆசாரக்கோவை
1. ப்ராங்முகோந்நாநி புஞ்ஜீத। I. 62; III. 93.	1. உண்ணுங்கால் நோக்கும் திசை கிழக்கு. (20)
2. ஆயுஷ்யம் ப்ராங்முகோ புங்க்தே யஶஸ்யம் தக்ஷிணாமுக꞉। ஶ்ரியம் ப்ரத்யங்முகோ புங்க்தே ருதம் புங்க்தே உதங்முக꞉॥ III. 94.	2. ஒழிந்த திசையும் வழிமுறையான் நல்ல. (22)
3. ப்ரக்ஷால்ய பாணிபாதௌ ச * * * ஶுஷ்கம் பரிவர்த꞉ க்ருத்வா ததூர்த்வாப்யாய போஜயேத்। I. 63 - 4.	3. நீராடிக் கால்கழுவி வாய்பூசி மண்டலஞ்செய் துண்டாரே யுண்டா ரெனப்படுவார் அல்லாதார் உண்டார்போல் வாய்பூசிச் செல்வர் அதுவெடுத்துக் கொண்டார் அரக்கர் குறித்து. (18)
4. ஶூத்ராணாமபி ஸர்வேஷாம் பூஜ்யா꞉ பஞ்ச விஶேஷத꞉। தேஷாமாத்யாஸ்த்ரயஶ்ஶ்ரேஷ்டா꞉ தேஷாம் மாதா ஸுபூஜிதா॥ யோ ஹி வாஸயதி ஜிவா (?) யேந ஸ[வி]த்யோபதிஶ்யதே। ஜ்யேஷ்டோ ப்ராதா ச பர்தா ச பஞ்சைதே குரவஸ்த்யா॥ I. 30 - 31.	4. அரசன் உவாத்தியான் தாய் தந்தை தம்முன் நிகரில் குரவ ரிவ் வைவர் இவரிவரைத் தேவரைப் போலத் தொழு தெழுக என்பதே யாவரும் கண்ட நெறி. (16)
5. நக்நோ ந ப்ரவிஶேஜ்ஜலம்	5. உடுத்தலால் நீராடார். (11)
6. நிர்வர்தேத வாதபமேந * * * வித்யார்தநத்யாயாந்யத்ராபி॥ III. 62. அநத்யாய꞉ * * * ராஜ்ஞோ ராஹோஶ்ச ஸூதகே। III. 65 - 67. நாதீயீத * * * அமாவாஸ்யாம் சதுர்தஶ்யாம் பௌர்ணமாஸ்யஷ்டமீஷு ச। III. 70.	6. அட்டமியும் ஏனையுவாவும் பதினன்கும் அப்பூமி காப்பார்க் குறுகண்ணும் மிக்க நிலத்துளக்கு விண்ணதிர்ப்பு வாலாமை பார்ப்பார் இலங்குநூல் ஓதாதநாள். (47)

7. ச்சாயாகூபநதீகோஷ்ட
சைத்யாம்ப:பதிபஸ்மஸு ।
அக்நௌ சைவ ஸ்மஶாநே ச
விண்மூத்ரே ந ஸமாசரேத் ।
ந மார்கே ந க்ருஷ்டே வா
ந கோஷ்டே நைவ ஶாத்வலே ।
ந திஷ்டந்வா ந நிர்வஸ்த்ரோ
ந ச வல்மீகபர்வதே ॥
ந ஜீர்ணதேவாயதநே
ந வல்மீகே கதாசந ।
ந ஸஸத்த்வேஷு கர்தேஷு
ந ச கச்சந் ஸமாசரேத் ॥
II. 36 - 38.

7. புற்பைங்கூழ் ஆப்பி சுடலைவழி தீர்த்தம்
தேவகுல நிழலானிலை வெண்பலி யென்று
ஈரைந்தின் கண்ணும் உமிழ்வோ டிருபுலனும்
சோரார் உணர்வுடையார். (32)

8. நியம்ய ப்ரயதோ வாணீம்
ஸம்வீதாங்கோऽவகுண்டித: ।
குர்யாச் சக்ருந்மூத்ரே
ராத்ரௌ சேத் தக்ஷிணாமுக: ॥
II. 34.

8. பகற்றெற்கு நோக்கா ரிரா வடக்கு நோக்கார்
பகற்பெய்யார் தீயினுள் நீர். (33)

இங்குக் காட்டியவற்றுள் பலவும் மனு முதலிய பழைய தர்மசாஸ்திரங்களிலும் காணப்படுவனவே. கீழ்வருவது மனுவில் உள்ளது.

9. மாத்ரா ஸ்வஸ்ரா துஹித்ரா வா
ந விவிக்தாஸநோ பவேத் ।
பலவாநிந்த்ரியக்ராமோ
வித்வாம்ஸமபி கர்ஷதி ॥
Manu. II. 215.

9. ஈன்றாள் மகள்தன் உடன்பிறந்தா ளாயினும்
சான்றோர் தமித்தா உறையற்க ஐம்புலனும்
தாங்கற் கரிதாக லான். (65)

ஆசாரக்கோவையில் வந்துள்ள 'உண்ணுங்கால் நோக்குந்திசை கிழக்கு' என்பது ஆபஸ்தம்ப தர்ம சூத்திரத்திலும் (I, 11, 31, 1) வசிஷ்ட தர்ம சூத்திரத்திலும் வந்துள்ள கருத்தேயாகும். இவ்விரண்டு சூத்திரங்களும் கி. மு. 300-க்கு முன் தோன்றியன என்பர். 'ஒழிந்த திசையும் வழி முறையால் நல்ல' என்பது கி. பி. 200-க்கு முன் தோன்றியதாகக் கருதப் படும் மனு தர்மசாஸ்திரத்தில் (II, 52) வந்துள்ளது. எனவே இவை சுக்ரஸ்மிருதியினின்றும் கொள்ளப்பட்டன வெனல் பொருந்தாது. ஆசாரக்கோவையிலுள்ள பல கருத்துக்கள் சுக்ர ஸ்மிருதியிற் காணப்படவில்லை. உதாரணமாக 'ஆசாரம் வீடு பெற்றார்' இவரெனக் கூறும் இறுதிச் செய்யுளைக் கூறலாம். இங்ஙனமே சுக்ர ஸ்மிருதியிலுள்ள கருத்துக்கள் பல ஆசாரக்கோவையிற் காணவில்லை. 3-ம் அத்தியாயத்தின் பிற்பகுதியிலுள்ள சிராத்த நியமங்களும், அதன்பின் இறுதியிலுள்ள 9-ம் அத்தியாயத்தில் வரும் கழுவாய் நியமங்களும் உதாரணங்களாம். பிற தர்மசூத்திரங்

களிலும் தர்ம சாஸ்திரங்களிலும் காணப்படாது, சுக்ரஸ்மிருதியில் மட்டும் காணப்படும் கருத்துக்கள் பெரும்பாலும் இல்லையென்றே சொல்லலாம். எனவே ஆசாரக்கோவையின் காலத்தை நிர்ணயிப்பதற்குச் சுக்ரஸ்மிருதி ஒருதலையாகப் பயன்படுதலில்லை. எனினும் பல கருத்தொற்றுமைகள் இருத்தலாலும் ஒரு சில்லிடங்கள் இந்த ஸ்மிருதியின் மொழி பெயர்ப்பாகலா மென்னும்படி அமைந்திருத்தலாலும், ஆசாரக்கோவையைத் தொகுப்ப தற்குக் கொண்ட மூலநூல்களுள் இதுவும் ஒன்றாக இருக்கலாம். இந்த ஸ்மிருதி கி. பி. 600-க்குப்பிற்பட்டதென்பது தர்மசாஸ்திரத்தை ஆராய்ந்த வர்கள் கண்டமுடிவு.

பிற்பட்ட ஸ்மிருதிகளிலிருந்து சில கருத்துக்கள் ஆசாரக்கோவையில் கொள்ளப்பட்டுள்ளன. 'நிறையுவா மெல்கோலுந் தின்னார்' (ஆசாரக் கோவை 17) என்பது அவற்றுள் ஒன்று. இது சுக்ரஸ்மிருதியிற் காணப்பட வில்லை. லகுஹாரீதஸ்மிருதியில்[1] உள்ளது. இந்த ஸ்மிருதியின் காலமும் கி. பி. 600-க்குப் பிற்பட்டதே. 'மண்டலஞ் செய்துண்ணல்' (ஆசாரக்கோவை 19) என்பது மற்றொன்று. இது சுக்ரஸ்மிருதியில் (1,64) காணப்படுகிறது; ஆனால் இச்செய்யுளின் இறுதியடியிற் காணப்படும் 'கொண்டாரரக்கர் குறித்து' என்னுங் கருத்து இதன்கண் இல்லை. இரண்டும் ஒருங்கே காணப்படுவது லகுசாதாதபத்திலும் லகு அத்திரிஸ்மிருதியிலும்[2] தான். இவ்விரண்டும் கி. பி. 600-க்குப் பிற்பட்டனவே. வடமொழியில் இந்த ஸ்மிருதிகள் கி. பி. 600-க்குப் பின்தோன்றியவை யாயின், இவை தமிழ் நாட்டிற்பரவி, மொழி பெயர்க்கவேண்டும் அவசியம் ஏற்பட்டு, மொழி பெயர்க்கப்படுவதற்குச் சுமார் 150 ஆண்டுகள் சென்றிருக்கலாம். ஆகவே சுமார் கி. பி. 750 ல் ஆசாரக்கோவை இயற்றப்பட்டிருக்கவேண்டும். ஏலாதி முதலியனவும் இக்குறிப்பிட்ட காலத்தில் தோன்றியன வாகலாம். இந் நூலில் 'துவாதச புத்திரர்கள்' எனப் பிரபலமாய் வடமொழியில் வழங்கிய வர்களின் பெயர்கள் முறையே கொடுக்கப்பட்டுள்ளன.

மாண்டவர் மாண்ட அறிவினால் மக்களைப்
பூண்டவர் போற்றிப் புரக்குங்கால்—பூண்ட
உரதனே கேத்திரசன் கானீனன் கூடன்
கிருதன் பவுனர்ப் பவன். (30)

மத்த மயிலன்ன சாயலாய் மன்னிய சீர்த்
தத்தன் சகோடன் சவுத்திரன்—புத்திரி
புத்திரன் பொய்யில் கிரிதன் அபவித்தன்
இத்திறத்த எஞ்சினார் பேர். (31)

இப்பெயர்கள் ஆரியசமுதாயத்தின் பழக்கவழக்கங்களை அடிப்படை யாகக் கொண்டன; அப்பழக்க வழக்கங்களின் மீது கட்டப்பெற்ற பிதிரார்ஜித

1. Pandurang Vaman Kane 'History of Dharma Sastra' Vol II Pt I, 656. 2. ibid. P. II. 760. சைவ சமய நெறியிலும் (பொது 275) காண்க.

வுரிமை நியதியை நோக்கமாகக் கொண்டன. இதனை இந்துக்களின் சட்ட சரித்திரத்திற்பயிற்சியுள்ளார் நன்குணர்வர். ஆரியர்க்கே தனியாக அமைந்த உரிமை நியதியைத் தமிழ்நாட்டினர் ஏற்றுக்கொள்ளும் அளவில் ஆரியநாகரிகக்கலப்பு மிகுதிப்பட்ட பின்னரே இந்தச் செய்யுள் இயற்றப்பெற்றதாதல் வேண்டும். இக்காலத்திற்கும் ஆரியவழக்கு அருகிக்காணப்படும் சங்க காலத்திற்கும் வெகு தொலைவு. ஒன்றற்கொன்று நெடுங்காலம் இடைப்பட்டதாகல்வேண்டும். எனவே இச் செய்யுளையுடைய ஏலாதி சங்ககாலத்திற்கு மிகமிகப் பிற்பட்டு 8-வது நூற்றாண்டளவில் தோன்றிய தெனக்கொள்ளுதல் பொருத்தமே.

மேற்கூறியவற்றின் முடிபாகக் கீழ்க்கணக்கு நூல்கள் கி. பி. 5-ம் நூற்றாண்டு முதல் 8-ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியில்[1] இயற்றப்பெற்றன என்று கொள்ளலாம். உன்னை (திணைமொழி, 36; திணைமாலை, 152), போது (=காலம். திணைமாலை, 153) முதலிய பிற்கால வழக்குக்களும் இம்முடிவை வலியுறுத்துகின்றன. கால அடைவில் இந்நூல்கள் தோன்றிய முறையை ஒருவாறாக அறுதியிட்டுக் கீழே காட்டியிருக்கின்றேன்.

கி. பி. 450—550	களவழி முப்பால் நான்மணிக் கடிகை முதுமொழிக்காஞ்சி
கி. பி. 550—650	கார்நாற்பது இன்னா நாற்பது இனியவை நாற்பது பழமொழி நாலடி
கி. பி. 650—750	திரிகடுகம் ஐந்திணை ஐம்பது ஐந்திணை எழுபது திணைமொழிஐம்பது கைந்நிலை திணைமாலை நூற்றைம்பது சிறுபஞ்சமூலம் ஏலாதி ஆசாரக்கோவை

இவை உத்தேசமான கால-அடைவும் முறையுமாகுமென்றே கொள்ளுதல் வேண்டும். எனினும் ஒருவாறு இவை அமைவுடையவாதல் சிறிது ஊன்றி நோக்கினால் அறியலாகும். கீழ்க்கணக்கு நூல்களை முற்ற ஆராய்ந்து, சான்றுகள் பலவற்றையும் நுணுகி நோக்கிய பின்னரே நிலைபெற்றதொரு முடிவினைக் கொள்ளுதல் கூடும். அங்ஙனம் ஒரு முடிபு பெறும்வரை, இக்கால அடைவும் முறையும் பயன் படுவனவாகலாம். கீழ்வரும் பட்டிகையில் கீழ்க்கணக்கு நூல்களின் விவரங்கள் பலவும் தொகுத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

1. இவை வச்சிரநந்தி கி. பி. 470-ல் நிறுவிய ஜைன சங்கத்தின் ஆதரவில் இயற்றப்பெறத்தொடங்கின என்றல் தகும். 'தெற்றவழக்கொடு' என்னும் வீரசோழியக் காரிகை (145) யுரையில் 'கீழ்க்கணக்கு' என்ற வழக்குக் காணப்படுதலால், 11-ம் நூற்றாண்டில் இவ்வழக்கு உளதாதல் அறியலாம். இக்காலத்துக்கு முன் இவ்வழக்குக் காணப்பெறாமையும் இங்குக் குறித்த காலவரையறையை ஆதரிக்கின்றது.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள்

எண்	நூல்	ஆசிரியர்	சமயம்	காலம் கி. பி.	மேற்கோள்	செய்யுளெண்
1	நாலடி	சைன முனிவர் *	சைனர்	650	இளம்.யாப் வி.வீரசோ.நேமி.மயிலை	400
2	நான்மணிக்கடிகை	விளம்பி நாகனார்	வைஷ்ணவர்	500	யாப் வி. வீரசோ.நேமி.மயிலை சிலப்.	100
3	இன்னா நாற்பது	கபிலர்	வைதிகசமயி	600	வீரசோ.	40
4	இனிய நாற்பது	பூதஞ்சேந்தனார்	வைதிகசமயி	600	வீரசோ.	40
5	கார் நாற்பது	மதுரைக் கண்ணங் கூத்தனார்	வைஷ்ணவர்	575	வீரசோ.	40
6	களவழி நாற்பது	பொய்கையார்	வைஷ்ணவர்	450	இளம. வீரசோ. மயிலை	40
7	ஐந்திணையைம்பது	மாறன் பொறையனார்	வைதிக சமயி	700	இளம் மயிலை	50
8	ஐந்திணை யெழுபது	மூவாதியார்	?	700	இளம. மயிலை	70
9	திணைமொழி யைம்பது	சாத்தந்தையார் மகனார் கண்ணம்பூதனார்	?	725	இளம.	50
10	திணைமாலை நூற்றைம்பது	மதுரைத் தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார்	சைனர்	750	இளம்.	150
11	கைந்நிலை	மாறோக்கத்து முள்ளிநாட்டு நல்லூர்க் காவிதியார் மகனார் புல்லங்காடனார்	?	750	இளம். நம்பியகப், உரை	60
12	முப்பால்	திருவள்ளுவர்	சைனர்	450	இளம்.யாப்.வி.வீரசோ.நேமி.மயிலை	1330
13	திரிகடுகம்	நல்லாதனார்	வைஷ்ணவர்	675	இளம். வீரசோ. மயிலை	100
14	ஆசாரக்கோவை	பெருவாயின் முள்ளியார்	சைவர்	750		100
15	பழமொழி	மூன்றுறை யரையனார்	சைனர்	600	இளம். மயிலை. சிலப்	400
16	சிறுபஞ்சமூலம்	மாக்காரியாசான்	சைனர்	750		100
17	முதுமொழிக்காஞ்சி *	மதுரைக் கூடலூர் கிழார்	?	550	யாப். வி வீரசோ. மயிலை	100
18	ஏலாதி	மதுரைத்தமிழாசிரியர் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார்	சைனர்	750		80
						3250

* நாலடியின் ஆசிரியரைக்குறித்து, எனது முருகாற்றுப்படைப்பதிப்பின் முன்னுரையை (செந்தமிழ்ப் பிரசுரம்) நோக்குக.

கீழ்க்கணக்கு நூல்களுள் நீதி ஆசாரங்கள் பற்றியன பதினொன்றும், திணையொழுக்கம் பற்றியன ஐந்தும், காலம் பற்றியது[1] ஒன்றும், இடம் பற்றியது ஒன்றும் உள்ளன. நீதி ஆசாரங்கள் பற்றியனவற்றுள், முப்பால், நாலடி என்ற இரண்டும் உறுதிப்பொருள்களைப் பால் இயல் அதிகாரங்களாக வகுத்துக் கூறுகின்றன; இன்னாநாற்பது, இனியவைநாற்பது, முதுமொழிக் காஞ்சி என்ற மூன்றும் இன்னாமை முதலிய இயல்பு நோக்கிச் செய்யுட் பொருள்களை வகுத்து உரைக்கின்றன. பழமொழி முற்காலத்துத் தமிழ் நாட்டில் வழங்கிய பழமொழிகள் பலவற்றைச் செய்யுட்களின் ஈற்றில் வைத்து அவற்றை உதாரணம் முதலியவற்றால் விளக்குகிறது. நான்மணிக் கடிகை அறியவேண்டும் உறுதிப்பொருள்களில் நந்நான்கினை ஒவ்வொரு செய்யுளிலும் அமைத்துத் தெரிவிக்கின்றது. ஆசாரக்கோவை கையாளவேண்டும் ஆசாரங்களைத் தொகுத்து உணர்த்துகின்றது. திரிகடுகம், சிறுபஞ்சமூலம், ஏலாதி இவை மூன்றும் நோய்நீக்கி உடல்-நலம் பேணும் மருந்துச் சரக்கின் பெயர்களை மேற்கொண்டு, உயிர்க்கு நலமாய பொருள்களை முறையே மூன்று, ஐந்து, ஐந்தின்மேற்பட்டனவாக அமைத்து மொழிகின்றன.

திரிகடுகம் என்பது சுக்கு, மிளகு, திப்பிலி என்ற மூன்றனையும் குறிக்கும். இது

'திரிகடுகம் சுக்கு மிளகு திப்பிலி'

என்று வரும் திவாகர நிகண்டினால் (XII, 31) அறியலாகும். வடமொழி நூல்களிலும் இது காணப்படுகிறது. உதாரணமாக

பிப்பலீ மரிச ஶ்ருங்கவேராணீதி த்ரிகடுகம்
(ஸூத்ரஸ்தானம், அத். 38,58)

என்று சுச்ருதத்தில் வந்துள்ளது. இங்ஙனமே அஷ்டாங்க ஹ்ருதயத்திலும் (அத் 6,162-3) திரிகடுகம் விளக்கப்பட்டுள்ளது. இவ்வடநூலில் 'இது (திரிகடுகம்) உடம்பு ஸ்தூலித்துப் போதல், அக்கினிமாந்தம், காசம், யானைக்கால், பீனசம் இவற்றை நிவர்த்தி செய்யும்' என இதன் குணங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

சிறுபஞ்சமூலமாவன சிறுவழுதுணைவேர், நெருஞ்சிவேர், சிறுமல்லிவேர், பெருமல்லிவேர், கண்டங்கத்திரிவேர் என்பனவாம். மூலம் என்பது வேர். மிகப்பிற்பட்ட நூலாகிய பதார்த்தகுண சிந்தாமணியிலுள்ள

சிறிய வழுதுணைவேர் சின்னெருஞ்சி மூலம்
சிறுமலி கண்டங் கத்திரிவேர்—நறிய

1. இதனைத் திணையொழுக்கம்பற்றியதாகக் கொள்ளலும் தகும்.

பெரியமலி யோரைந்தும் பேசுபண்ணேய் தீர்க்கும்
அரியசிறு பஞ்ச மூலம் (495)

என்ற செய்யுளால் இதனை அறியலாம். மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாகிய பொருட்டொகை நிகண்டிலும்

சிறுபஞ்ச மூலம் கண்டங் கத்திரி
சிறுவழுதுணை சிறுமல்லி பெருமல்லி
நெருஞ்சி யிவற்றின் வேராகும்மே (867)

என்று சிறு பஞ்சமூலப் பொருள்கள் உணர்த்தப் படுகின்றன. திவாகரம் முதலிய பழைய நூல்களில் இச்சாக்குப் பெயர் கொடுக்கப்படவில்லை. இப்பெயரினை நோக்கிய அளவில் பெரும்பஞ்சமூலம் ஒன்று உண்டென்பது எளிதில் ஊகித்தல் கூடும். முற்குறித்த பதார்த்தகுண சிந்தாமணியில்,

பாதிரிவேர் வாகை பருங்குமிழ் மாலூரம்
ஓதுதழு தாழையிவ்வேர் ஓரைந்தும்—போதிம
ருஞ்சிலை நுதற்றிருவே யோது பெரும்பஞ்சமூ
லஞ்சிலநோ யேகுமிதி லாய் (496)

என்ற ஓர் செய்யுள் உள்ளது. மாலூரம் என்பது வில்வம். இச்செய்யுட் கருத்தே தோன்றுமாறு பொருட்டொகை நிகண்டும்

பெரும்பஞ்ச மூலம் வில்வம் பெருங்குமிழ்
தழுதாழை பாதிரி வாகையின் வேர்களே (868)

எனக் கூறுகின்றது. இவ்விருவகைப் பஞ்சமூலங்களும் வடமொழி நூல்களில் உள்ளனவே. இவற்றை முறையே லகுபஞ்சமூலம்[1] *எனவும் மகத்பஞ்சமூலம்*[2] *எனவும், தமிழ் நூல்களிற் காணும் பெயர்களுக் கேற்பவே, அந்நூல்களும் குறிப்பிடுகின்றன. இவைதவிர, மத்திம பஞ்சமூலம் என ஒன்றும் வகுத்துரைக்கப்படுகின்றது. ஜீவன பஞ்சமூலம், த்ருணபஞ்சமூலம், வல்லீ பஞ்சமூலம் என்ற பஞ்சமூலங்களும் வடநூல்களிற் காணப் படுகின்றன. லகுபஞ்சமூலத்தை அடையின்றியே ‘பஞ்சமூலம்’ என்றும் ‘கனீய பஞ்சமூலம்’ என்றும் ‘ஸ்வல்ப பஞ்சமூலம்’ என்றும் பெயரிட்டு*

---

1. 𑌶𑌾𑌲𑌿𑌪𑌰𑍍𑌣𑍀 𑌪𑍃𑌶𑍍𑌨𑌿𑌪𑌰𑍍𑌣𑍀 𑌬𑍃𑌹𑌤𑍀 𑌕𑌣𑍍𑌟𑌕𑌾𑌰𑌿𑌕𑌾 ।
𑌤𑌥𑌾 𑌗𑍋𑌕𑍍𑌷𑍁𑌰𑌕𑌶𑍍𑌚𑍇𑌤𑌿 𑌸𑍍𑌵𑌲𑍍𑌪𑌂 𑌪𑌞𑍍𑌚𑌮𑍂𑌲𑌕𑌮𑍍 ॥
(*தன்வந்தரி நிகண்டு, ஆனந்தாச்ரமப் பதிப்பு.* பக். 301.)

2. 𑌬𑌿𑌲𑍍𑌵𑌾𑌗𑍍𑌨𑌿𑌮𑌨𑍍𑌥𑌟𑌿𑌣𑍍𑌟𑍁𑌕𑌪𑌾𑌟𑌲𑌾𑌃 𑌕𑌾𑌶𑍍𑌮𑌰𑍀𑌚𑍇𑌤𑌿 𑌮𑌹𑌤𑍍 (*சுச்ருதம், சூத்ரஸ்தானம், அத்.* 38,69)

வடநூலாசிரியர் வழங்குகின்றனர். இதனுள் அடங்கும் பொருள்களை

தத்ர த்ரிகண்டகப்ருஹதீத்வயப்ருதக்பர்ணீவிதாரிகந்தா இதி
கநீய:

என்ற சுலோகத்தால் (சுச்ருதம், சூத்ரஸ்தானம், அத் 38,66) அறியலாம். இதன் குணத்தைக்குறித்து 'சுவையும் விபாகமும் மதுரமானவை; அதிக உஷ்ண வீரியமாவது அதிக சீத வீரியமாவது இல்லாமல் நடுத்தரமான குணம் உடையது; மூவகைத் தோஷங்களையும் போக்கவல்லது' என்று அஷ்டாங்க ஹ்ருதயம் (அத் 6,166-7) உணர்த்துகின்றது.

ஏலாதி என்பது குறித்துத் தமிழ் நூல்களில் விளக்கமாக அறியக்கூடவில்லை. வடமொழியில் ஏலாதிகிருதம், ஏலாதி சூர்ணம், ஏலாதிகணம் என மூன்றுவகை ஏலாதிகள் சொல்லப்பட்டுள்ளன. ஏலாதி கிருதத்தைக் குறித்து அஷ்டாங்க ஹ்ருதயத்தில் சிகித்ஸாஸ்தானம் 5-வது அத்யாயத்திலும் (சுலோ. 28-32), சூர்ணத்தைக் குறித்து அவ்வத்யாயத்தில் 54-வது சுலோகத்திலும் காணலாம். ஏலாதிகணம் அந்நூலில் சூத்திரஸ்தானம் 15-வது அத்யாயத்தில் (சுலோ. 43-44) விளக்கப்பட்டுள்ளது. ஏலாதி கணத்தில் 26 சரக்குக்களும், ஏலாதி கிருதத்தில் 14 சரக்குக்களும், ஏலாதி சூர்ணத்தில் 6 சரக்குக்களும் அமைந்தனவாகக் கூறப்பட்டுள்ளன. ஏலாதி என்று பெயர்கொண்ட தமிழ் நீதிநூலில் பெரும்பாலும் ஆறு பொருள்களே கூறப்பட்டுள்ளன வாதலால், ஏலாதி சூர்ணம் என்பதுவே இந் நீதிநூற் பெயர்க்குப் பொருத்தம் உடையதாகத் தோன்றுகிறது. ஏலம் ஒருபங்கு, இலவங்கப்பட்டை இரண்டுபங்கு, நாககேசரம் மூன்று பங்கு, மிளகு நாலு பங்கு, திப்பிலி ஐந்து பங்கு, சுக்குஆறுபங்கு, இந்தஅளவுப்படி இச்சரக்குக்களைக் கூட்டிச் சூர்ணம் செய்யவேண்டும் என்று அஷ்டாங்க ஹ்ருதயம் கூறும்.

திரிகடுகம் முதலிய மூன்று பெயர்களும் வடமொழிப் பெயர்கள் என்பதில் ஐயமில்லை. இவை முதலியவற்றை விரித்துணர்த்தும் பழந்தமிழ் நூல்கள் முற்காலத்தில் வழங்கி யிருத்தல் கூடும். ஆனால் அந்நூல்கள் கி. பி. 4 அல்லது 5-ம் நூற்றாண்டில் தோன்றியதாகச் கருதப்படும் சுச்ருதத்திற்கு முற்பட்டனவா என்பது பெரிதும் ஐயப்பாட்டிற்கு இடனாயுள்ளது. இப்போது கிடைக்கும் பதார்த்தகுண சிந்தாமணி முதலிய நூல்கள் 200 அல்லது 300 ஆண்டுகளுக்குள் தோன்றியவையே. ஆகவே திரிகடுகம் முதலிய பெயர்கள் வடமொழியில் ஆயுர்வேத நூல்வழக்கைப் பின்பற்றியனவாக இருத்தல் வேண்டும்.

திரிகடுகம் இயற்றியவர் நல்லாதனார் என்று பெயர் சிறந்த புலவர். ஆதன் என்ற பெயர் சங்ககாலத்து வழக்கில் பயின்று வந்துள்ள பெயரேயாம். இப்பெயர் பற்றித் தொல்காப்பியனார் ஒரு சூத்திரம் வகுத்துள்ளார்.

'ஆதனும் பூதனுங் கூறிய இயல்பொடு
பெயரொற் றகரம் துவரக் கெடுமே' (எழுத். புள்ளி. 53)

என்பது அச்சூத்திரம். ஆதன் தந்தை என்ற இரண்டு இயற்பெயர்ச் சொற்களும் சந்தியில் ஆந்தை எனவரும் என்பது அதிற் கூறப்படுகிறது. ஆந்தை யென்னும் இயற்பெயரும் சங்ககாலத்து வழங்கி வந்ததேயாம். பிசிராந்தை, சிறைக்குடி யாந்தை முதலியவற்றை நோக்குக.

பதிற்றுப்பத்து முதலிய தொகை நூல்களிலும்[1] இப்பெயர் வழக்கு வந்துள்ளது. இவ்வழக்குக்களை நோக்கினால் இவை பெரும்பாலும் சேர மரபினருக்குரிய பெயர்கள் என்பது விளங்கும்.

ஆதன் அழிசி, ஆதன் ஓரி, ஆதன் நுங்கன், நெடுவேளாதன், வில்லியாதன், என்பன சேரர்களோடு தொடர்புடைய குறுநிலமன்னரது பெயர்களென்று எண்ணத்தகும்.

முடங்கிக்கிடந்த நெடுஞ்சேரலாதன், குண்டுகட் பாலியாதனார் என்ற இரண்டும் புலவர் பெயர்கள். இப்புலவர்களுள் முன்னவன் சேரவம்சத்தைச் சேர்ந்தவனாதல் வேண்டும். பிற்கூறியவனைக் குறித்து யாதும் அறியக்கூடவில்லை. இவர்களோடு நல்லாதனாரையுஞ் சேர்க்கப் புலவர்கள் மூவர் 'ஆதன்' என்ற பெயர்கொண்டு பண்டைத் தமிழகத்தில் விளங்கினாரெனப் புலனாகின்றது.

இப்பெயர்க்குரிய சொற்பொருள் யாதெனத் தெரியவில்லை. ஆனால் இதன் பொருள் எவ்வகையாலோ மாறிவிட்டது. கி. பி. 7-ம் நூற்றாண்டினரென்று தெளியப்பட்ட நாவுக்கரசர்

ஆற்றிற் கெடுத்துக் குளத்தினிற் றேடிய ஆதரைப்போல் (IV, 97,6)
என்று இகழ்ந்து பாடினர். சம்பந்தரும்

---

1. ஆடு கோட்பாட்டுச் சேரலாதன் (6-ம் பத்து, பதிகம்), ஆதன் அவினி (ஐங். 1-10), ஆதன் அழிசி (புறம், 71), ஆதன் எழினி (அகம். 216), ஆதன் ஓரி (புறம், 153), ஆதன் நுங்கன் (புறம். 175,389). இமைய வரம்பன் நெடுஞ் சேரலாதன் (2-ம் பத்து பதிகம்), ஓய்மான் வில்லியாதன்) புறம், 376,379), குடக்கோ நெடுஞ்சேரலாதன் (6-ம் பத்து பதிகம்), குண்டுகட் பாலியாதனார் (நற். 220, புறம் 387), செல்வக் கடுங்கோ வாழியாதன் (7-ம் பத்து பதிகம்), சேரமான் பெருஞ் சேரலாதன் (புறம், 65), நெடுவேளாதன் (புறம், 338) பெருஞ் சோற்றுதியஞ் சேரலாதன் (புறம், 2), முடங்கிக் கிடந்த நெடுஞ் சேரலாதன் (அகம். 30).

ஆதர் அமணொடு சாக்கியர் தாஞ்சொல்லும்
பேதைமை கேட்டுப் பிணக்குறுவீர் வம்மின் (III பக். 124-10)

எனப்பழித்துக் கூறினர். சுந்தரர்

ஆதன்பொரு ளானேன் அறிவில்லேன் அருளாளா (I. 5)

எனத்தம்மையே நொந்து கொள்ளுகின்றனர். சிறுபஞ்ச மூலத்தில்

முன்பொருள் செய்யாதார் ஆதரே (20)

என வருகின்றது. இங்கே பழைய வுரைகாரர் 'ஒன்று மறியாது ஒரு பற்றின்றித் திரியும் ஆதரோ டொப்பர்' எனவிளக்கி யுள்ளார். ஆதன் என்பதன் பொருள் விளங்காது போனமையாலும், அச்சொற்கு இழிவுப் பொருள் பிற்காலத்தில் தோன்றினமையாலும், இயற்பெயராக அது வழங்குதற்குரிய தகுதியை இழந்துவிட்டதெனத் தோன்றுகிறது. திரிகடுகம் இயற்றியவர்தாம் இப்பெயரைக் கடைசியாகத் தாங்கியவர் என்று கூடக் கருத இடமுண்டு. ஏனெனின், இவர் காலத்திற்குப் பின் இப்பெயருடையராக ஓர் ஆசிரியரும் தமிழிலக்கிய வுலகிற் காணப்படவில்லை.

நல்லாதனர் என்ற பெயரில் நல் என்ற அடைமொழி கவனித்தற்குரியது. இந்த அடைமொழி சங்க காலத்தும் மிகுதியாகப் பயின்று வந்ததேயாம். நல்லச்சுதனர், நல்லந்துவனர், நல்லழிசியார், நல்லுருத்திரனர், நன்னாகனர் முதலிய பெயர்களைக் காண்க. இவை முற்காலத்துப் பெயரிடும் மரபுகளுள் ஒன்றனைத் தெளிவாகக் காட்டுகின்றன. இயற்பெயர்க்குமுன் நல் என்னும் சொல் மங்கலப் பொருட்டாகச் சேர்த்து வழங்குதல் பண்டை மரபாக இருந்தது. இக்காலத்தும் நல்ல கண்ணு, நல்ல குற்றாலம், நல்லதம்பி, நல்லையா, நல்லமுத்து முதலிய பெயர்களில் இவ்வழக்கினைக் காணலாம். இவ்வழக்கோ டொப்ப வடமொழிப் பெயர்களிலும் 'ஸு' என்று மங்கல வாசியைச் சேர்த்துக் கூறுதல் வழக்காயிருந்தது. ஆபஸ்தம்ப க்ருஹ்ய சூத்திரம்' நிலைபேறுடைமை காரணமாக 'ஸு' என்னும் உபஸர்க்கத்தைப் பெயர்களோடு இயைத்து வழங்குதல் வேண்டுமென்று கூறுகின்றது. ஸு ஜாதா, ஸு தர்சனன், ஸுகேசன் என்ற பெயர்கள் இவ்வழக்கைப் புலப்படுத்துகின்றன. ஆகவே பெயரிடும் மரபிலே ஆரிய வழக்கும் தமிழ் வழக்கும் ஒத்தியல்கின்றமை காணலாம். இங்ஙனமுள்ள ஒற்றுமைகளுக்குரிய காரணங்களை ஆராய்தல் மிக்க பயனுடையதாகும்.

திரிகடுகத்தின் ஆசிரியரான நல்லாதனர் வைணவ சமயத்தைச் சார்ந்தவ ரென்பது அந்நூலில்

---

1. P. V. Kane II, Pt. 1. 244.

கண்ணகன் ஞாலம் அளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம்—நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி

என்று வரும் கடவுள் வாழ்த்துச் செய்யுளால் அறியலாகும். இதுவரை வெளிவாராத செய்யுளொன்றினல் இவர் 'திருத்து' என்ற ஊரினரென்பதும் விளங்குகின்றது. இவ்வூர் திருநெல்வேலித் தாலுகாவில் உள்ளது. செய்யுள் வருமாறு:—

[1] செல்வத் திருத்துளார் செம்மல் செருவடுதோள்
நல்லாத னென்னும் பெயரானே—பல்லார்
பரிவொடு நோயவியப் பன்னி யாராய்ந்து
திரிகடுகஞ் செய்த மகன்

வேறொரு விஷயமும் இச் செய்யுளால் உணரக்கிடக்கின்றது. நல்லாதனார் 'செருவடுதோள்' உடையாரெனச் சிறப்பிக்கப்படுகிறார். எனவே இவர் புலமையின் மிக்கவராதலோடு போர்த்திறமையிலும் மிக்காராயிருந்தாரெனல் வெளிப்படை. ஒருகால், ஆதன் என்ற பெயரினர் பண்டைக் காலத்து அரசமக்களாய் விளங்கியது போலவே, இவரும் அரசமரபினரா யிருத்தல் கூடும். இஃது எவ்வாறாயினும், பலவேறு வாழ்க்கைத் துறையில் ஈடுபட்டு அனுபவ முதிர்ச்சி எய்தி அதனால் விளைந்த பயனை உலகத்தார் அடைதல் வேண்டுமென்ற கருத்தோடு நூலாசிரியராக மாறிய அறிஞர் குழாத்துள் நல்லாதனார் எண்ணிடப்பெறுவர்.

இவர் இயற்றிய நூலுக்குத் தனிப்பட்ட பெருமையொன்றுண்டு. இதன் செய்யுட்களுள் ஒவ்வொன்றிலும் காணும் மூன்று பொருள்களையும் ஒருதலைப்பின் கீழ் அடக்கி இந்நூல் கூறுகின்றது. உதாரணமாக ஈகை, நல்லொழுக்கம், மனவடக்கம் இம்மூன்றும் 'நல்வினையார்க்கும் கயிறு' (24) எனப் படுகின்றது. உடன்கூறிய பொருள்கள் மூன்றனுள் ஒவ்வொன்றனையும் தனிப்படச் சிந்தித்து, அதன்மேலும் அவைமூன்றும் ஒரு சிறந்த பொது வுண்மையில் அமையுமாற்றையுங் கருதி, இந்நூல் இயற்றப் பட்டுள்ளது. இப் பொது வுண்மைகள் பிற்சேர்வில் அகராதி வரிசையில் கொடுக்கப்பட்டுள்ளன.

இங்ஙனமன்று ஏனை நூல்களின் அமைப்பு. சிறபஞ்சமூலச் செய்யுட்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து பொருள்கள் கூறப்படுகின்றன. ஆனால் அப் பொருள்கள் பெரும்பாலும் தனித்தனியுரிய சிறப்போடு அமைந்து விடுகின்றன; அல்லது ஏதோ ஒரு வகையில் தத்தமக்குள்ளே இயைபுடையவாய் அமைந்து விடுகின்றன; அல்லது ஒன்றன் கூறுகளாக அமைந்து

1. 2 திருத்துழாய்ச்; 4 செருவிருதோள்; 5-7 வல்லவ ரென்னும் பெயரென்ன; 10-11 நோய் நீங்கிப் பண்ணியா; 10 நோய்வீயப்.

விடுகின்றன. உதாரணமாக, பொருளுடையான் கண்ணது போகம்; அறன் அருளுடையான் கண்ணது; அருளுடையான் பழி செய்யான்; பாவம் சேரான்; புறமொழியுய்யான்: என்ற செய்யுட்கருத்தை கூர்ந்து கவனித்து மேலதன் உண்மையைத் தெரிந்து கொள்ளலாம். நான்மணிக் கடிகையும் ஏலாதியும் பெரும்பாலும் இங்ஙனமே அமைந்தன.

இந்நூல் வள்ளுவரை ஒருசில இடங்களில் பின்பற்றிச் செல்லுகின்றது.

> தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
> பெய்யெனப் பெய்யு மழை (55)

என்ற அருமைத்திருக்குறள் தண்டமிழ்ச் சாத்தனுர் (மணி 22,59-60) உளத்தைக் கவர்ந்தது போலவே, இந்நூலாசிரியரது உளத்தையும் கவர்ந்து விட்டது. இந்நூலுள்ளும் 'பெய்யெனப் பெய்யு மழை' என்பது (97) பயின்று வந்துள்ளது.

> பருவத்தோ டொட்ட வொழுகல் திருவினைத்
> தீராமை யார்க்குங் கயிறு (482)

என்ற குறளின் இரண்டாம் அடி இந்நூலிலுள்ள 'நல்வினையார்க்குங் கயிறு' (24) என்ற அடியை எடுத்துதவிய தென்னலாம்.

> கண்ணுக் கணிகலங் கண்ணோட்ட மஃதின்றேற்
> புண்ணென் றுணரப் படும் (575)

என்றது இந்நூலுள்

> 'கண்ணுக் கணிகலங் கண்ணோட்டம்' (53)

என்று வருவதற்கு அடியாக இருக்கின்றது. திருக்குறட் கருத்துக்களும் தொடர்களும் இந்நூலுள் பல இடங்களிலும் காணலாம்.

இங்ஙனமே இனியவை நாற்பது என்னும் நூலுக்கும் திரிகடுகத்திற்கும் உள்ள தொடர்பு மிகுதியாகக் காணப்படுகிறது. உதாரணமாக,

(1) ஏவியது மாறு இளங்கிளைமை முன்னினிதே (இனி. 4)
ஏவியது மாற்றும் இளங்கிளையும் (திரி. 50)

(2) காவோ டறக்குளந் தொட்டல் மிகவினிதே (இனி. 24)
காவோ டறக்குளந் தொட்டானும் (திரி. 71)

(3) தானங் கொடுப்பான் தகையாண்மை முன்னினிதே
மானம் படவரின் வாழாமை முன்னினிதே (இனி. 28)

தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தாற்
குற்றங் கடிந்த வொழுக்கமும் (திரி. 24)

(4) வெல்வது வேண்டி வெகுளாதான் நோன்பினிதே
* * *
இல்லது காமுற்றிரங்கி யிடர்ப்படார் (இனி. 25)

வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானும் (திரி. 29)

(5) ஆற்றுனை யாற்றென் றலையாமை முன்னினிதே
கூற்றம் வரவுண்மை சிந்தித்து வாழ்வினிதே (இனி. 29)

ஆற்றுனை யாற்றென் றலைப்பானும் அன்பின்றி
* * கூற்றம்
வரவுண்மை சிந்தியா தானும் (திரி. 46)

(6) பிச்சைபுக் குண்பான் பிளிறாமை முன்னினிதே
துச்சிலிருந்து துயர்கூரா மாண்பினிதே (இனி. 40)

பிச்சைபுக் குண்பான் பிளிற்றலும் துச்சிருந்தான்
நாளுங் கலாங் காமுறுதலும் (திரி. 58)

எனவருவன கருத்துஞ் சொல்லும் ஒற்றுமை யுடையன. ஆதலின் ஒன்றினின்று ஒன்று கொள்ளப்பட்டனவாம்.

நன்றிப் பயன்றூக்கி வாழ்தல் நனியினிதே
மன்றிற் கொடும்பா டுரையாத மாண்பினிதே
அன்றறிவார் யாரென் றடைக்கலம் வெளவாத
நன்றியி னன்கினிய தில் (இனி. 31)

என்ற செய்யுள்

நன்றிப் பயன்றூக்கா நாணிலியும் சான்றோர்முன்
மன்றிற் கொடும்பா டுரைப்பானும்—நன்றின்றி
வைத்த அடைக்கலங் கொள்வானு மிம்மூவர்
எச்ச மிழந்து வாழ்வார் (திரி. 63)

என்ற செய்யுட்கு ஆதாரமாயுள்ளது.

இன்னுநாற்பது என்ற நூலுக்கும் திரிகடுகத்திற்கும் ஒருசில்லிடங்களில் ஒற்றுமை காணப்படுகின்றது. ஓர் உதாரணம் தருகின்றேன்,

இன்னா, நிறையில்லான் கொண்ட தவம் (இன்னா. 24)

என்பதும்

நிறையில்லான் கொண்ட தவமும்

* * *

தூற்றின்கண் தூவிய வித்து (திரி. 81)

என்பதும் தம்முள் ஒத்திருக்கின்றன.

நான்மணிக்கடிகைக்கும் திரிகடுகத்திற்கும் இங்ஙனமே ஒருசில இடங்களில் ஒற்றுமையுள்ளது.

அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை (நான்மணி. 22)

என்பதும்

மூத்தோரை யில்லா அவைக்களனும் (திரி. 11)

என்பதும் ஒன்றை யொன்று தழுவியன.

பெண்மை, நலத்துக் கணியென்ப நாணம் (நான்மணி. 11)

என்பதும்

பெண்ணுக் கணிகலம் நாணுடைமை (திரி. 51)

என்பதும் ஒற்றுமைப் பட்டுத் தோன்றுகின்றன.

நாலடியாரினின்றும் ஒப்புமையுள்ள இரண்டிடங்கள் காட்டுகின்றேன்.

கற்றனவும் கண்ணகன்ற சாயலு மிற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் தானுரைப்பின்
மைத்துனர் பல்கி மருந்திற் றணியாத
பித்தனென் றெள்ளப் படும் (340)

என்ற நாலடிச் செய்யுளின் கருத்து

தொல்லவையுட் டோன்றுங் குடிமையுந் தொக்கிருந்த
நல்லவையுள் மேம்பட்ட கல்வியும்—வெல்சமத்து
வேந்துவப்ப அட்டார்த்த வென்றியும் இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறுப் பொருள் (9)

என்று திரிகடுகத்துள் வந்துள்ளமை காணலாம்.

உள்ளத் துணர்வுடையா னோதிய நூலற்றால்
வள்ளன்மை பூண்டான்க ணொண்பொருள் (386)

என்ற நாலடிச் செய்யுள்

வள்ளன்மை பூண்டான்கட் செல்வமும் உள்ளத்
துணர்வுடையா னோதிய நூலும்

* * *

பொத்தின்றிக் காழ்த்த மரம் (76)

என்ற திரிகடுகத்திற்கு மூலமாமெனத் தோன்றுகிறது.

பழமொழி என்ற நூலிலிருந்து ஒப்புமைப்பகுதிகள் இரண்டு காட்டுகின்றேன். இந்நூலில்

சொல்லாமை நோக்கிக் குறிப்பறியும் பண்பிற்றம்
இல்லாள் (255)

என்றதன் கருத்து

கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி (97)

எனவரும் திரிகடுகச் செய்யுளில் வந்துள்ளது.

உமிக்குற்றுக் கைவருந்து மாறு (378)

என்ற பழமொழி

உமிக்குற்றுக் கைவருந்துவார் (29)

எனத் திரிகடுகத்தில் வருகின்றது.

நூல்வழக்கிற் பயின்ற பழமொழியை எடுத்தாண்டது போலவே, தங்காலத்து உலக வழக்கில் பரவியிருந்த சில பழமொழிகளையும் திரிகடுகம் எடுத்தாண்டுள்ளது. அவை

தந்நெய்யிற் றும்பொரியு மாறு (66)
துஞ்சுமன் கண்ட கனு (8)
தூண்டிலி னுட்பொதிந்த தேரை (25)
தூற்றின்கண் தூவிய வித்து (81)

என்பனவாம். இவை முற்காலத்து வழங்கியனவென்று கருதலாம். இப்பழமொழிகள் இறந்தொழியாதபடி பாதுகாத்ததோடு ஒரு சில உலகவசனங்களையும் திரிகடுகம் நமக்குத் தந்துள்ளது. உதாரணமாக 'கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி' என்பது தமிழ்மக்கள் நாவில் பரக்கப் பயின்றுவருவதாம். திங்கள் மும்மாரி (99) என்பது மாதமும்மாரியென உலகவழக்கிற் பயில்கின்றது.

இங்ஙனமாக முற்பட்டெழுந்த நீதிநூல்கள் பலவற்றையும் திரிகடுகம் பயன்படுத்தியிருக்கின்றது. இதுபோலவே பின்னெழுந்த நூல்கட்கும் இந்நூலாசிரியர் சொற்பொருள்களை உதவியிருக்கின்றனர். ஓரிடம் காட்டி அமைகின்றேன்.

... ... இல்லஞ்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமையான் வருங் கேடு (4)

என்று திரிகடுகம் கூறுகிறது. இக்கருத்துத் தொடரும் ஆசாரக்கோவையில்

... ... இல்லஞ்
சிறியாரைக் கொண்டு புகாஅர் (68)

என வந்துள்ளது.

இங்குக் காட்டிய பழமொழிகளானும் செய்யுட்களின் ஈற்றிலுள்ள பொதுவுண்மைகளாலும் செய்யுட் பொருளுக்கு அழுத்தமும் வேகமும் உண்டாகின்றன. யாவரும் இதனை எளிதில் உணரலாம். செய்யுட்பொருளை வற்புறுத்துதற்கு இங்ஙனம் கூறல் சிறந்த ஒரு முறையாகும். இந்நோக்கம் முற்றுதற்கு வேறுசில வழிகளையும் இந்நூல் கையாளுகின்றது. முதலாவதாக, வற்புறுத்துச் சொல்லக்கருதிய பொருள்களை உடன் பாட்டு முகத்தால் ஓரிடத்தும் எதிர்மறை முகத்தாற் பிறிதோரிடத்தும் கூறுதல். இதற்கு ஓர் உதாரணம் தருகின்றேன். 'கல்லார்க் கினனு வொழுகல்........கேடு' (3) என்ற கருத்து 'கற்றாரைக் கைவிட்டு வாழ்தல்........நல்லுலகஞ் சேராதவாறு' (100) என மீண்டும் ஓரிடத்து மறுதலையான் உணர்த்தப்படுகிறது. இரண்டாவதாக, வற்புறுத்தவேண்டும் பொருளின் தகுதி நோக்கிக் கூறியது கூறல் என்பதனையும் பொருட் படுத்தாது துணிந்து இரண்டு மூன்றிடங்களில் கூறுதல். உதாரணமாக 'பலநாடி நல்லவை கற்றல்' (28) என்பது மீண்டும் 'பல்லவையுள் நல்லவை கற்றல்' (32) என்று வற்புறுத்தப்படுகிறது. மூன்றாவதாக, ஒரு பொருளை ஓரிடத்துக் கூறி, அப்பொருளின் பின் செயற்பாலதைக் கூறுமுகத்தால் அப்பொருளினையே வற்புறுத்துதல். 'தாளினொரு பொருளாக்கல்' (32) என்பது 'தாளினுற்றந்த விழுப்பொருள்...காப்பிகழலாகாப் பொருள்' (48) எனப் பிற் செயவேண்டுங் காப்பினால் மீண்டும் வற்புறுத்தப்படுகிறது. இது போன்றே 'மகளிர்...காப்பிகழலாகாப்பொருள்' (48) என்பது 'பெண்பாலைக் காப்பிகழும் பேதையும்' (95) என்று அவ்விகழ்ச்சி பேதையின் செயல் எனக் கூறுமுகத்தால் வற்புறுத்தப்படுகின்றது.

வற்புறுத்தும் வழிகளில் முக்கியமான ஒன்றனைத் தனிப்பட எடுத்துக்காட்டுதல் தகும். உயர்திணையையும் அஃறிணையையும் விரவிக்கூறுமுறையே இங்குக் கருதப்பட்டது. இம்முறையைக் குறித்துத் தொல்காப்பியர்

பலவயி னானு மெண்ணுத்திணை விரவுப் பெயர்
அஃறிணை முடிபின செய்யுளுள்ளே (சொல், 51, சேனு)

என விதித்துள்ளார். திணைவிரவி யெண்ணப்பட்ட பெயர்கள் செய்யுளகத்துப் பெரும்பான்மையும் அஃறிணைச் சொற் கொண்டு முடியும் என்பது இதன் பொருள். சிறுபான்மை உயர்திணைச் சொற் கொண்டு முடியும் என்று உரைகாரர்கள் கொண்டனரேயன்றித் தொல்காப்பியர் வெளிப்படையாகக் கூறவில்லை.

இம்முடிபிற்குரிய காரணங்களையும் அவர் கூறவில்லை. தமிழ் இலக்கியங்களில் இவ்வாறு முடிந்து வருதலும் அருகியே காணப்படும். மிகப் பழைய நூல்களிலிருந்து ஓர் உதாரணமே காட்டப்பட்டுள்ளது. அதுவருமாறு :

கறைமிடற் றண்ணல் காமர் சென்னிப்
பிறைநுதல் விளங்கும் ஒருகண் போல
வேந்து மேம்பட்ட பூந்தார் மாற
கடுஞ்சினத்த கொல்களிறும்
கதழ்பரிய கலிமாவும்
நெடுங்கொடிய நிமிர்தேரும்
நெஞ்சுடைய புகல்மறவருமென
நான்குடன் மாண்ட தாயினும் மாண்ட
அறநெறி முதற்றே அரசின் கொற்றம்.

இப்புறநானூற்றுச் செய்யுளில் (55) நால்வகைப் படையும் எண்ணிக் கூறப்படுகின்றது. இச்செய்யுளில் ஓசை யின்பம் மனத்தை அள்ளுகின்றது; ஆனால் செய்யுட்கருத்தில் உணர்ச்சி வேகத்திற்கு இடமில்லை. நால்வகைப் படையையும் 'நான்கு' எனக் குறிப்பிடுவதே தக்கதன்றிப் பிறவாறு கூறுதல் தகாது. உணர்ச்சி வேகம் உள்ள இடங்களில் உயர்திணை அல்லது அஃறிணைமுடிபு ஒரு தனிப்பட்ட பொருண்மையுடைய தாகின்றது. திரிகடுகம் முதலிய பிற்காலநூல்கள் ஒரு சிலவற்றில் இவ்வுணர்ச்சி வேகமும் அதற்கேற்ற திணைமுடிபும் காணப்படுகின்றன.

பழியஞ்சான் வாழும் பசுவும் அழிவினாற்
கொண்ட அருந்தவம் விட்டானும் கொண்டிருந்து
இல்லஞ்சி வாழும் எருதும் இவர்மூவர்
நெல்லுண்டல் நெஞ்சிற்கோர் நோய் (திரி. 80)

இச் செய்யுளில் பசு, எருது என்பன இழித்துக் கூறுதற் பொருட்டால் வந்தன. இவற்றை 'இவர்' எனக்குறித்தல் நோக்கத்தக்கது. மக்களையிவை குறிக்குமாறு வழங்கும் வழக்கு இளிவரவுணர்ச்சியின் எல்லையைத் தொட்டுநின்று அவர்களை உட்கூசி யொடுங்கும்படி செய்கின்றது.

இளிவரவுக் குறிப்பின்றி உண்மையாகவே சிறப்பினைக் குறித்து நின்று, சிந்தை மகிழ்ச்சியைப் புலப்படுக்கும் செய்யுளும் இந்நெறியை மேற்கொண்டுள்ளது. உதாரணமாக 'வள்ளன்மை பூண்டான்' (திரி. 76) என்ற செய்யுளைக் கூறலாம். இழிப்புணர்ச்சியினை நேரே குறிக்கும் செய்யுளும் இந்நெறியைக் கையாண்டுள்ளது. உதாரணமாக, 'கொழுநனை யில்லாள்' (திரி. 67) 'வாய் நன்கமையா' (85) என்ற செய்யுட்களைக் காண்க.

கோலஞ்சி வாழுங் குடியும் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்பும் இம்மூன்றும்
படைவேந்தன் பற்று விடல் (திரி. 34)

இச் செய்யுளில் உணர்ச்சி வலிமைக்கு இடமில்லை. அரசன் இன்னோரைப் பற்றுவிடுதல் தகாதெனை எண்ணிக் கூறு மாத்திரையான் வந்ததேயாகும். அதனால், கூறப்பட்ட பொருள் மூன்றனுள் இரண்டு அஃறிணையாயிருத்தலின் அவ் அஃறிணை முடிபினையே முடிபாகக் கொண்டு இச்செய்யுள் வந்தது.

எனினும் பொதுப்படக்காணும் வாக்கிய அமைதிக்கு இது மாறுயுள்ள தன்மையே இங்குக் கருதத் தக்கது. சொல்லும் பொருளை வற்புறுத்துதற்கு இங்ஙனம் மாறுயமைத்துக் கூறும் நெறியும் ஒன்றும். திரிகடுகத்தில் 'கொல்வது தானஞ்சான்' (88), 'கற்றுரைக் கைவிட்டு' (100) என்ற செய்யுட்களும் இந்நெறியிற் செல்வன.

மேற் கூறிய காரணங்களுள் சிலவற்றை நன்னூலார் எடுத்து விளக்கினர்.

திணைபால் பொருள்பல விரவின சிறப்பினும்
மிகவினு மிழிபினு மொருமுடி பினவே (377, மயிலை)

திணைகள் தம்முள் விரவிநின்றவிடத்து சிறப்பு, மிகுதி, இழிவு என்ற காரணங்கள் பற்றி யாதானுமொரு திணைகொண்டு முடியும் என்பது இதன் கருத்து.

தொல்காப்பியரோடு ஒரு சிறிது மாறுபட்டுப் பவணந்தியார் அமைத்த இலக்கண விதிக்கு இலக்கியமா யமைந்து, சொற்பொருளுக்கு வேகமும் அழுத்தமும் கொடுத்தமுறை மேலே கூறப்பட்டது. இனி இலக்கணநெறிக்கு மாறுனவும், இன்று வரை வழக்கு ஒப்பாதவுமான சில பிரயோகங்களைக் குறித்துச் சில சொல்ல விரும்புகிறேன். 'கிருஷ்ணன் வந்தான், ராமனும் வந்தான்' என்பது உலகவழக்கு. இங்கு உம்மை பின் (அதாவது இறுதியில்) கூறப்படுவதனோடு இயைந்து வந்தமை காணலாம். முன்கூறியதனோடு இயைந்து வருதல் வழக்கன்று. இங்குக் கூறிய உலக வழக்கினையே தொல்காப்பியரும்

எஞ்சுபொருட் கிளவி செஞ்சொ லாயிற்
பிற்படக் கிளவார் முற்படக் கிளத்தல் (சொல். 284, சேனு)

எனக்கூறி அமைத்தனர். இச் சூத்திரத்தில் 'பின் முன்' என்பன காலம் பற்றியன வாகும். பவணந்தியாரும்

செவ்வெண் ஈற்றதாம் எச்ச வும்மை (நன். மயிலை 426)

எனச்சூத்திரம் செய்து முற்காட்டிய வழக்கினையே தெரிய வைத்தனர். இவ்வழக்கு இன்றுவரை நிலைத்து நிற்கின்றது. ஆனால் திரிகடுகத்தில்

உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும் தோல்வற்றிச்
சாயினுஞ் சான்ருண்மை குன்ருமை இம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில் (28)

என வருகின்றது. இங்கே 'உண்டலும் விடுதலும் குன்ருமை' என முன்னிரண்டிடங்களில் உம்மையோடும் ஈற்றில் உம்மை யின்றியும் வந்துள்ளமை காணலாம், இங்ஙனமே 'மூந்நீர்த்திரையின்' (36), 'பேஎய்ப் பிறப்பில்' (61), 'பிணிதன்னை' (89) எனத் தொடங்கும் மூன்று செய்யுட்களுள்ளும் வருகின்றது. வழக்கோடு மாறுபடுதற்குக் காரணம்வேண்டும். ஈற்றில் கொடுக்கப்பட்ட சொல்லையடுத்து மூன்று என்னும் தொகை உம்மை பெற்றுவருதல் ஒரு காரணமாதல் கூடும். எனினும் இதனைச் செவ்விய வழக்கெனக் கூறுதற்கில்லை. வேறொரு செய்யுள் இன்னும் அதிகமாய் இடர்விளைக்கின்றது.

நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா
வெண்மொழி வேண்டினும் சொல்லாமை நன்மொழியைச்
சிற்றின மல்லார்கட் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன் (33)

இங்கே முதலும் கடையும் உம்மை பெற்று நடுவில்வரும் சொல் உம்மை யின்றி வந்துள்ளமை நோக்கத்தக்கது. ஈண்டுக்காட்டிய இடங்களிலெல்லாம் 'உம்மை தொக்கது' எனக் கூறிவிடுதல் எளிது. இவ்விலக்கணக் குறிப்பினுல் யாதும் விளக்கமெய்தவில்லை. பொருளின் தெளிவு ஒன்றையே சிறப்பாகக் கருதி, வழக்கினையும் துணிந்து புறக்கணித்தார் இந்நூலாசிரியர் என்று கொள்ளுதலே தகுதி. சுட்டிக் கூறியதற்கமைந்த எவ்வகைப் பெயருமின்றி, தனித்தனி வாக்கியமாக மூன்றுகூறி, 'இம்மூன்றும்' என முடிந்த செய்யுட்களும் இந்நூலகத்துச் சில உள்ளன.

நிறைநெஞ் சுடையானை நல்குர வஞ்சும்
அறனை நினைப்பானை அல்பொரு ளஞ்சும்
மறவனை யெவ்வுயிரு வஞ்சுமிம் மூன்றும்
திறவதிற் றீர்ந்த பொருள் (73)

என்பது அவற்றுள் ஒன்று. இரண்டு பெயர்களை இரண்டு வினையெச்சங்களாற் பெறவைத்து மூன்ருவதனை நேர்படக்கூறி அமைந்தது பின்வருஞ் செய்யுள் :

முந்தை யெழுத்தின் வரவுணர்ந்து பிற்பாடு
தந்தையும் தாயும் வழிபட்டு - வந்த
ஒழுக்கம் பெருநெறி சேர்த லிம் மூன்றும்
விழுப்ப நெறிதூரா வாறு (57)

முதலிரண்டு பொருள்களை இரண்டு வாக்கியங்களாற் கூறி, மூன்ற வதனைப் பெயராகக் கூறியது கீழ்ச் செய்யுள் :

தூய்மை யுடைமை துணிவாம் தொழிலகற்றும்
வாய்மை யுடைமை வனப்பாகும் - தீமை
மனத்தினும் வாயினும் சொல்லாமை மூன்றும்
தவத்திற் றருக்கினர் கோள் (79)

மூன்றனையும் வாக்கியமாக அமைத்துக் கூறும் முறையால் பொருள் உணர்தற் கரிதாய் முடிந்த இடமும் ஒன்றுளது :

உப்பின் பெருங்குப்பை நீர்படின் இல்லாகும்
நட்பின் கொழுமுளை பொய்வழங்கின் இல்லாகும்
செப்ப முடையார் மழை யனையர் இம்மூன்றும்
செப்ப நெறிதூரா வாறு (84)

இங்ஙனமாக, வடமொழிப் பெயர் கொண்ட இந்நூல் திருக்குறள் முதலிய மூந்து நூல்களை அடியொற்றிச் சென்று, சில நூதன நெறிகளைக் கையாண்டு, இலக்கணவிதி ஒன்றற்கு இலக்கியமாய் நின்று, ஒரோ விடங்களில் வழக்கொடு மாறுபடவுந் துணிந்து, ஒரு தனிப்பட்ட முறைமையிலே அமைந்து நடை பெறுகின்றது.

திரிகடுகத்திலுள்ள சில சொல் வழக்காறுகளும் ஈண்டுக் கவனித்தற் குரியன. சங்க நூல்களில் யாண்டும் இல்லாதனவும், பின்னூல்களில் உள்ளனவுமாகிய சில சொற்கள் இந்நூலி னகத்துக் காணப்படுகின்றன. அலவலை (35,100), இலிங்கி (18), தட்டித்து (58), திப்பியம் (44), துக்கம் (61), துச்சிருந்தார் (58), தொழும்பு (56), பிரமாணம் (38), வாசி (32), வீரியத்து (77)என்பன அச்சொற்கள். ஒரு சிலசொற்கள் சங்ககாலத் திறுதியில் எழுந்த நூல்களில் காணப்படுகின்றன. உதாரணமாக கணிகை, கொடும்பாடு என்ற சொற்களைக் கூறலாம். இவை யிரண்டும் ஒவ்வோரிடத்துப் பரிபாடலில் வந்துள்ளன.

மாயப்பொய் கூட்டி மயக்கும் விலைக்கணிகை
பெண்மைப் பொதுமைப் பிணையிலி (பரி. 20, 49-50).

என்ற இடத்துக் கணிகை வந்துள்ளது.

கடும்பொடுங் கடும்பொடும் பரவுதும்
கொடும்பாடறியற்க எம்மறிவெனவே (பரி. 2, 75-76).

என்ற இடத்துக் கொடும்பாடு வந்துள்ளது.

கணிகை யென்ற பொருளில் பரத்தை, பொருட் பெண்டிர் முதலிய சொற்களையே தொல்காப்பியரும் வள்ளுவரும் முறையே வழங்கினர். கொடும்பாடு என்னுஞ்சொல் சங்ககாலத்தின்றி, தேவாரகாலத்திலும் அருகிக்காணப்பட்டு, பிற்பட்ட காலத்தில் வழக்கொழிந்து போயிற்று. இச் சொல்லிலே வரும் 'பாடு' என்பது முதலில் தொழிற்பெயர் விகுதியாய் நின்று, பின் கொடுமை முதலிய பண்புப் பெயர்களுடனும் இயைந்து, பொருளை வேறுபடுத்தது எனக்கொள்ளுதலே சாலும். இங்ஙனம் 'பாடு' விகுதியாய் வருதலே பிற்காலவழக்கு என ஐயுறுதற்கு இடனுண்டு.

இச் சொல் வந்துள்ள பரிபாடல் பல காரணங்களால் சங்ககாலத்தின் இறுதியில் தோன்றியதெனக் கொள்ளுதற் குரியது. அக்காரணங்களுள் ஒன்றாய் இப்பிற்காலவழக்குச் சொற்களும் அமைந்து விடுகின்றனவே யன்றி, சங்ககாலத்து இச்சொற்கள் வழங்கியன வெனற்குச் சான்றாய் அமையுமாறில்லை.

துச்சிருந்து என்பது திரிகடுகத்தில் (58) வந்துள்ளது. துச்சில் என்பது முழுவடிவம். இதுவே 'துச்சு' எனக் கடைக்குறைந்து திரிகடுகத்தில் வந்ததாகல் வேண்டும். 'துச்சில்' என்ற சொல் அகத்திலும் (203), பட்டினப்பாலையிலும் (48) வருகின்றது. திருக்குறளிலும்

புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சி லிருந்த உயிர்க்கு (340)

என வந்துள்ளது. பரிமேலழகர் 'ஒதுக்கிருந்தே போந்த உயிர்க்கு' எனப் பொருள் கூறினர். திரிகடுகவுரையும் இப்பொருளே தருகின்றது. கடைக்குறைந்த வழக்குப் பிற்காலத்ததாகல்வேண்டும்.

திருவொடும் இன்னாது துச்சு (123)

எனப் பழமொழியிலும் வந்துள்ளது.

இங்குக் காட்டிய சொற்களெல்லாம் திரிகடுகத்தின் காலத்தை யுணர்த்துதற்குரிய கருவிகளா யுள்ளமை தெளிவு.

இனி இந்நூலின் உரையினைக்குறித்துச் சில கூறுதல் வேண்டும். இப்போது அச்சில் வழங்கும் உரைகளுள், திருக்கோட்டியூர் இராமாநுசாச்சாரியாரால் இயற்றப்பட்டு ஆறுமுக நாவலரது வித்தியானுபாலன யந்திர சாலையிற் பதிப்பிக்கப்பெற்ற உரையே மிகுதியாகப் பயிலப்பட்டுவருவதாம். ஆச்சாரியாருரைதானும் சென்னை அரசாங்க நூல்நிலையத்தில் ஏட்டுப் பிரதியிலுள்ள ஒருரையைத் தழுவி எழுதப்பட்டது. அச்சிலுள்ள இவ்வுரையினையீண்டு வெளியிடும் பழைய வுரையுடன் ஒப்பிட்டு நோக்கல் அவசியம்.

'மன்றிற் கொடும்பாடுரைப்பானும்' (63) என்பது, 'சபையிலே நின்று கொடிய சொற்களைச் சொல்லுகின்றவனும்' என்று ஆச்சாரியரால் பொருள் விளக்கப்பட்டுள்ளது. ஆனால் பழைய வுரையில் 'மன்றத்தின்கண் நின்று மூன்றுகோடிப் பாங்குரைப்பானும்' என்று கூறப்பட்டுள்ளது. இவ்வுரையே தக்கதென்பது எளிதின் அறியலாம். 'பெண்டிர் தொடுத்தாண் டவைப் போர் புகலும்' (72) என்பதில் தொடுத்து என்பதற்கு 'வழக்குத் தொடுத்து' என்று ஆச்சாரியர் கூறினர். இது பிற்பட்டதோர் வழக்காறு. பழையவுரை 'வளைத்து' எனப்பொருள் கூறும்.

> அலர்தாங் கமையலென் என்றானைப் பற்றிஎன்
> நலந்தா ராயோவெனத் தொடுப்பேன் போலவும் (கலித். 128)

என்ற விடத்து நச்சினார்க்கினியரும் 'வளைத்துக் கொள்வேன்' என்றே பொருளெழுதினர். இதுவே பழைய மரபு வழிப்பட்ட பொருளாகும். 'ஆர்வுற்ற' என்றது நூலில் இரண்டிடங்களில் (66, 98) வருகின்றது. 'அனுபவித்தவைகளிலே' யெனவும் 'விரும்பப்பட்டவைகளிலே' யெனவும் வேறுவேறு பொருள் கொண்டனர் ஆச்சாரியர். பழையவுரை ஆர்வம் உற்ற எனக்கொண்டு இரண்டிடங்களினும் அமைக்கின்றது. 'விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும்' (12) என்றதற்கு, 'தன்னை அழையாதவன் ஆட்டுவிக்கும் கூத்தைத் தான் சென்று காணுதலும்' என ஆச்சாரியருரை கூறும். பழையவுரை 'பாடமாட்டாதான் ஆடுங்கூத்தைக் காண்டலும்' எனப் பொருள் கூறும். விளித்தல் என்பது பாடுதல் என்னும் பொருட்டாதலை 'வேங்கை கொய்யுநர் பஞ்சுரம் விளிப்பினும்' என்ற ஐங்குறு நூற்றுச் செய்யுளால் (311) அறியலாம். இதுவே தக்க பொருளெனத் தோற்றுகின்றது. அலவலை [1] என்ற சொல் 'சிறைநின் றலவலை யல்லாக் குடியும்' (35) எனவும் 'முட்டின்றி அல்லவை செய்யும் அலவலையும்' (100) எனவும் இரண்டிடங்களில் வந்துள்ளது. இப்பதத்திற்குத் திவ்யப் பிரபந்த வியாக்கியானங்களுட்கண்ட பொருள் 'பஹுஜல்பாக'ன் என்றதாகும். உதாரணமாக 'அலவலை வந்து அப்பூச்சி காட்டுகின்றான்' (பெரியாழ் 2-1-2) என்றதன் வியாக்கியானங்களைக் காண்க. சிறுபஞ்சமூல வுரையும் (53) இப்பொருளையே உட்கொண்டு பிறரை யேசுவதாகிய ஒழுக்கம் என விளக்கிற்று. 'அலவலை யுடையை யென்றி தோழீ' (கலித். 122) என்ற விடத்து 'அலமருதலை யுடையை' யென்றனர் நச்சினார்க்கினியர். ஆனால் திரிகடுகத்தின் பழைய வுரை (100) 'நாணில்லாதான்' எனப்பொருள் கூறுகின்றது. இப்பொருளே மிகப் பழைய தாகுமெனக் கருதுதல் தகும். 'அல்லவையுள் தோன்றி அலவலைத்து வாழ்பவர்' என்ற பழமொழிச் செய்யுளின் (326) பழைய

1. அலவலை என்ற சொல் 'அலவலை நீர்த்தா லத்தை நின்னலர்' என்று பெருங்கதையினும் (உஞ்சை 36,286) 'அலவலைச் செய்திக் கஞ்சினன்' என்று மணிமேகலையினும் (17,51) வந்துள்ளது. ஆனால் இரண்டு நூல்கட்கும் பழையவுரை யின்மையால்

வுரையில் 'அலவலைத்து' என்பதற்கு 'நாணமில்லாத செய்கையைச் செய்து' என்று பொருளுரைக்கப்பட்டிருக்கின்றது. இப்பழைய பொருளினைக் கைவிடுத்து, 'புலம்பல்', 'விடாப் பேச்சுக்காரன்' என்று ஆச்சாரியர் உரை வகுத்திருக்கின்றார். இவ்வுரை திவ்யப் பிரபந்த வியாக்கியானப் பொருளின் மீது புதுவதாகக் கட்டப்பெற்ற தொன்றாம். பழைய பொருளே பொருத்த மாகும்.

ஆச்சாரியர் செய்யுட் பொருள் முழுவதையுமே பிழைபடக் கூறிய இடமும் ஒன்றுண்டு.

> தூய்மை யுடைமை துணிவாந் தொழிலகற்றும்
> வாய்மை யுடைமை வனப்பாகும்—தீமை
> மனத்தினும் வாயினுஞ் சொல்லாமை மூன்றுந்
> தவத்திற் றருக்கினார் கோள் (79)

இச் செய்யுளில் 'துணிவாந்தொழிலகற்றும் வாய்மை' எனவும், செய்யாமை என்றொரு சொல் வருவித்து 'வனப்பாகும் செய்யாமை' எனவும், கூட்டிப்பொருள் கொண்டனர். இது செய்யுட்கிடப்பிற்கு ஒத்த உரையன்று;

பொருள் ஆராய்ந்துகொள்ளத்பாலதாயுள்ளது. ஈரிடத்தும் நாணின்மை யென்பது பொருத்தமே. இச்சொல் வினையடியாய் நின்றது பழமொழிச் செய்யுளில் (326). மைவிகுதி பெற்று அலவலைமை என்று வழங்கியதும் உண்டு. 'பலபல நாழஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன் றன்னை அலவலைமை தீர்த்த அழகன்' என்பது பெரியாழ்வார் திருமொழி (4,3,5). இதுவே அலவல் எனவும் அலவை எனவும் வழங்கியுள்ளது. 'அவமறைந் தொழுகும் அலவற் பெண்டிர்' என்பது சிலப்பதிகாரம் (5,129). அடியார்க்கு நல்லார் இங்ஙனம் அலவல் எனப்பாடங்கொண்டு இதனை விகாரம் என்று குறிப்பர். இவர் அலவல் என்பதனை விளக்காது விடுத்தமையால், இவர் காலத்தில் இச்சொல் உலகவழக்கில் இருந்ததாதல் வேண்டும். இவர்கருத்தில் அலவை என்பது திருந்திய வடிவமாதலும் வேண்டும். 'அலவைப் பெண்டிர்' எனவே அரும்பதவுரைகாரர் பாடங்கொண்டனர். அலவை, அலவலை என்பன தம்முள் ஒற்றுமையுடையன வென்பது இரண்டற்கும் 'தோற்றிற்றுச் சொல்லுவான்' என ஒரு பொருளே திவ்யப்ரபந்த வியாக்கியாதாக்கள் கொள்ளுவதால் விளங்கும். 'மருந்தாகு மென்றங்கோர் மாய அலவை சொற் கொண்டுநீர்' (திருவாய் மொழி 4,6,4) என்றதன் வியாக்கியானங்களைக் காண்க. இங்கே வலவை என்றும் பிரித்தற்கு இடமுண்டு. அலவையும் வலவையும் ஒன்றோடொன்று தொடர்புடையனவெனக் கருதுதலும் பொருந்தும். வலவை (சிலப் 5,74) என்ற சொற்கும் நாணிலி எனவே அரும்பதஉரைகாரரும் அடியார்க்கு நல்லாரும் பொருள்கொண்டனர். 'வலவைக ளல்லாதார்' (நாலடி 268) என்றவிடத்தும் நாணிலிகள் அல்லாதார் என்றே பழையவுரையிற் காணப்படுகிறது. அலவலை முதலிய சொற்களெல்லாம் மனஞ்சுழலுதல் என்று பொருள்படும் அலவு என்ற வினையடியாகப் பிறந்து அச்சுழற்சியால் விளையுஞ் சொற் செயல்களைக் குறிப்பனவாயினபோலும். கலித்தொகை 122-ம் செய்யுளின் அடிக்குறிப்பாக (பக். 767) ஸ்ரீ இ. வை. அனந்தராமையர் எழுதியவற்றையும் நோக்குக.

நலிந்து கொண்ட பொருள் என்பது தேற்றம். துணியப்பட்ட நற்செய்கையை விரிக்கின்ற சத்தியமுடையவனுயிருக்கை யென்றது போலிப்பொருளாம். பழையவுரையிற்காணும் பொருள் மிகவும் ஏற்புடைத்தாம்.

பாடத்தைத்தவறாகக் கொண்டு உரையில் வழுவிய ஓரிடத்தைக் காட்ட விரும்புகிறேன். திரிகடுகத்தில் 'ஏவியது மாற்றும் இளங்கிளையும்' (50) என்ற உண்மைப்பாடம் 'ஏவாது மாற்றும் இளங்கிளையும்' என ஆச்சாரியராற் கொள்ளப்பட்டது. இப்பாடத்திற்கு ஏவாத காரியங்களையும் செய்கின்றவன் என்று பொருளுரைக்கப்பட்டது. இவ்வகைச் சுற்றத்தானை யாவரும் போற்றிக் கொள்வர். இவனை 'இம்மைக்குறுதியில்லான்' என்று திரிகடுகம் கூறுமாறு கூறுதல் அமையாது. உண்மையான பாடத்தையும் ஈண்டு வெளியிடும் பழையவுரையையும் நோக்கினுல் இம்மைக்கு உறுதியிலாமையின் பொருத்தம் நன்கு விளங்கும். இங்ஙனமாக இப்பழையவுரை பலவகையினும் சிறந்ததாதல் நன்குணரலாம்.

நூலின் மூலபாடங்கள் இப்பழையவுரையால் திருந்த வேண்டுவனவும் உள. 'மண்ணின்மேல் வான்புகழ் நட்டானும்' (17) என்றதன் உரையில் 'மாட்சிமைப்பட்ட புகழை நிறுத்திஞனும்' எனக்காணப்படுகின்றது. இதற்குரிய பாடம் 'மாண்புகழ்' என்பதாதல் வேண்டும். 'கற்புடையாட் பூப்பின்கட்சாராத்தலைமகனும்' (18) என்றதற்கு, 'கற்புடைய தன்மனைவி பூத்த காலத்து' என்று பழைய உரைகொடுக்கப்பட்டுள்ளது. இவ்வுரைக்கு ஏற்ப 'கற்புடையாள்' என்று பாடமிருத்தல் வேண்டும். 'மேல்தூய்மை யில்லாத வெல்களிறும்' (47) என்றதன் உரை 'நன்மையில்லாதகளிறும்' எனவுள்ளது. இதற்கிசைந்த பாடமாகிய 'வெங்களிறும்' என்பது சிலபிரதிகளிற் காணப்படுகிறது. 'ஈர்ந்தகல் லின்னுர் கயவர்' (52) என்பதற்கு 'கல்லையீர்ந்தாற்போல இன்னுராயிருப்பார் கயவர்' என்பது உரை. இப்பொருள் பயக்கவேண்டுமாயின் 'ஈர்ந்தகலினின்னுர் கயவர்' என்பது பாடமாதல் வேண்டும். 'தீமை மனத்தினும் வாயினும் சொல்லாமை' (79) என்றவிடத்து, 'தீச்சொற்களை மனத்தோடாதலின்மையும் வாயினும் சொல்லாதொழிதல்' என்று உரை தரப்பட்டுள்ளது. இதற்குத்தக, 'தீமை மனத்தின்மை வாயினும் சொல்லாமை' என்பது பாடமாதல் வேண்டும். ஏட்டுப்பிரதிகளிற் கண்டாலன்றிப் பாடங்களைத் திருத்துதல் தக்கதன்று என்னும் கொள்கையுடையேன். ஆதலால் மேற்குறித்தனவற்றைத் திருத்தத் துணிந்திலேன்.

ஈண்டு வெளியிடும் பதிப்பிற் குதவிய திரிகடுகப் பிரதிகள் நான்கு. இவை யனைத்தும் ஏட்டுப்பிரதிகளே. இரண்டு பிரதிகள் மதுரைத் தமிழ்ச் சங்கத்திற் குரியன; 239,360 என்ற எண்களைக்கொண்டன. இவற்றை ஒப்புநோக்கிப் பாடபேதங்களைக் குறித்தனுப்பியுதவிய நண்பர் 'செந்தமிழ்' உதவிப் பத்திராசிரியராகிய ஸ்ரீ T. K. இராமாநுஜ அய்யங்காரவர்கள். இவர்கள் தமிழ்ப்புலமையிற் சிறந்து விளங்குபவர்களாதலாலே இப்பிரதி

களை யான் நேரிற் பார்வையிடும் அவசியம் ஏற்படவில்லை. நேரிற் பார்வை யிட்டவை என் கைவசமுள்ள ஏட்டுப்பிரதி யொன்றும், சென்னை அரசாங்க நூல் நிலையத்துப் பிரதி யொன்றுமாம். புறத்திரட்டில் இந்நூலி லிருந்து 53 செய்யுட்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன. இச்செய்யுட்களும் ஒப்புநோக்கப் பட்டன.

‘திரிகடுகம் ஐயிருபதாகு மென்பர்’ என்று பிரபந்ததீபிகை கூறுமாறு இந்நூலில் 100 செய்யுட்களே உளவென்பது தொன்று தொட்டு வந்துள்ள கொள்கை. ஏட்டுப்பிரதிகளில் கடவுள் வாழ்த்துச் செய்யுளை உள்ளிட்டு 102 செய்யுட்கள் உள்ளன. புறத்திரட்டில் வரும் ‘பொருளிலொருவற் கிளமை யும்’ (1228) என்ற செய்யுள் ஒரு பிரதியிலும் காணப்படவில்லை. இப் பதிப்பினகத்து இதனை இறுதிச் செய்யுளாகச் சேர்த்திருக்கிறது. ‘கரப்பவர் சீர்மைத்தாய்’ (102) என்ற செய்யுள் பிரதிகள் சிலவற்றிலும் புறத்திரட்டி லும் (1222) உள்ளது. நாவலரது வித்தியாநுபாலன யந்திரசாலைப் பதிப் பில் காப்பு நீக்கி 100 செய்யுட்கள் உள்ளன. இதன் இறுதிச் செய்யுள் ‘பத்திமை சான்ற படையும்’ என்பது. என் கைவசமுள்ள பிரதியிலும் இவ் வாறே காணப்படுகிறது.

இத் திரிகடுகத்தைக் கற்றுவந்த ஒருசிலர் தாமும் சில செய்யுட்களை நூற்பிரதியிற் சேர்த்துள்ளார்கள். கீழ்வருஞ் செய்யுட்கள் இரண்டும் இங் ஙனம் சேர்த்துள்ளவையே.

1. சாநெறிப் பாரா வுழவனுந் தன்மனையில்
மானமொன் றில்லா மனையாளும் - சேனை
யுடன்கொண்டு மீளா வரசுமிம் மூன்றும்
கடன்கொண்டார் நெஞ்சிற் கணு.

2. ஏர்க்குற்றம் பாரா வுழவனும் இன்னடிசில்
பாத்திட்டு ஊட்டாத பைந்தொடியும் - ஊர்க்கு
வருங்குற்றம் பாராத மன்னனு மிம் மூவர்
இருந்திட்டென் போயென் னிவர்.

ஒருவர் ‘முச்சொல்லலங்காரம்’ என்னுஞ் சிறுநூலி லிருந்து கீழ்வருஞ் செய்யுளைச் சேர்த்தெழுதிவைத்தனர் :

ஆடு டாடிய காடும் அரசன்
நாவு டாடிய ஊரும் அடிக்கடி
தாய்வீ டோடிய பெண்ணுமிம் மூன்றும்
பேயு டாடிய களம்.

ஒரு பிரதி[1]யிற் கலைமகள் துதியொன்று எழுதப்பட் டிருந்தது :

கடிமலர்கள் கொய்திட்டுக் கையிரண்டும் கூப்பி
அடிபணிய வேண்டிற் றளிக்கும் - நொடிவரையின்
வண்டார் கருங்கூந்தல் வஞ்சியிடைக் கிஞ்சுகவாய்
வெண்டா மரைமேல் விளக்கு.

VII

சிறுபஞ்சமூலம் இயற்றியவர் காரியாசான் என்ற புலவர். சங்கப்புலவருள் ஒருவரது பெயர் காரிகிழார் எனக்காணப்படுகின்றது. ஒருகால் இரண்டு பெயர்களும் ஒருவரையே சுட்டிய தாகலாமெனச் சிலர் கருதலாம். காரியாசான் சைனராவர் என்பது சிறுபஞ்ச மூலத்தின் காப்புச் செய்யுளால் அறியலாகும். காரிகிழார் சைவராவார் என்பது அவர் இயற்றிய புறநானூற்றுச் செய்யுளில்

பணியிய ரத்தைநின் குடையே முனிவர்
முக்கட் செல்வர் நகர்வலஞ் செயற்கே
இறைஞ்சுக பெருமநின் சென்னி சிறந்த
நான்மறை முனிவ ரேந்துகை யெதிரே (6)

என வருவது கொண்டு உய்த்தறியலாம். இதனால் இருபெயர்களும் வேறுவேறு ஆசிரியர்களைக் குறிப்பனவாதல் தெள்ளிது. காரிகிழார் என்ற பெயரினை நோக்கிய அளவில், காரி என்பது ஒரூர் என்பதில் ஐயமில்லை. ஆனால் காரியாசான் என்ற இடத்து, இக் கருத்துப் பொருந்துவதன்று. கணக்கதிகாரம் என்ற நூலை இயற்றியவரும் காரி[2] யென்னும் பெயரினரே. இவரது ஊர் கொறுக்கை எனப்படுகின்றது. காரிநாயனார் (திருத் தொண்டர் திருவந்தாதி 59) திருக்கடவூரில் அந்தணர் குலத்தில் உதித்தவர்[3] எனக்

---

1. இப் பிரதியின் இறுதியில் 'திரிகடுக வெண்பா முகிந்தது முற்றும். 1016ஆ கார்த்திகைமீ 13உ முகிந்து முற்றும். குமரன் துணை கலியாணி அம்பிகை துணை ஆவுடையம்பாள் துணை உ. உலகம்மன்துணை. முப்புடாதியம்மன் துணை. உ. சங்கரலிங்கம் துணை. சரவணபவன் துணை' என்று காணப்படுகின்றது.

2. எண்ணி வினையா லிருங்கணக் கையெல்லாம்
மண்ணுலகில் யார்க்கும் வழங்கினான் - ஒண்ணுதலாய்
பாரை முழுதும் பரித்த புகழ்க் கொறுக்கை
காரி கணக்கனவன் காண்.

3. பெரிய புராணம், காரிநாயனார் புராணம்.

கூறப்படுகின்றார்; காரியூரினர் அல்லர். ஈண்டெல்லாம் காரி[1] என்பதனைக் கருநிறம்பற்றித் தோன்றிய காரண இடுகுறிப் பெயராகக் கருதுதல் வேண்டும். நிறம்பற்றி இப்பெயர் தோன்றுதல் உண்டென்பது

பாணிற வண்ணன்போற் பழிதீர்ந்த வெள்ளையும்
பொருமுரண் மேம்பட்ட பொலம்புனை புகழ்நேமித்
திருமறு மார்பன்போற் றிறல் சான்ற காரியும்

எனவரும் கலித்தொகையால் (104) உணரலாம். இங்கே கரியநிறமுள்ள எருது குறிக்கப்படுகின்றது. சைவருட் 'காரி' என்றது வழங்கியது போலவே, வைணவருள்ளும் இப்பெயர் வழங்கியுள்ளது. நம்மாழ்வாரைக் 'காரிமாறன்' என்பர். மதுரகவியாழ்வாரும்

கண்டுகொண் டென்னைக் காரி மாறப்பிரான்
பண்டை வல்வினை பாற்றி யருளினான் (திவ்.பிர. கண்ணிநுண்.7)

என்று அருளினர். இங்கே காரியென்றது நம்மாழ்வாரது தந்தையாரை. இப்பெயரும் நிறம்பற்றி யெழுந்த காரண இடுகுறியே. 'மாக்காரியாசான்' என இந்நூலாசிரியர் வழங்கப்பட்டிருக்கிறார். மா என்ற அடை காரியாசான் என்ற இருபெயரொட்டுப் பண்புத்தொகையை விசேடித்தது எனக் கொள்ளுதலே தகுதி. ஊர்ப்பெயர் இடையிட்டுவந்ததெனல் அத்துணைப் பொருத்தமின்று. மேலைத்தொடர் வருகின்ற செய்யுள் சிறுபஞ்சமூலத்தின் இறுதியிற் காணப்படுவது; நூல் தோன்றியகாலத்தே பாயிரமாக இயற்றப்பட்ட செய்யுளெனக் கொள்ளத்தக்கது.

மல்லிவர்தோள் மாக்காயன்[2] மாணாக்கன் மாநிலத்துப்
பல்லவர் நோய்நீக்கும் பாங்கினாற்—கல்லா
மறுபஞ்சந் தீர்மழைக்கை மாக்காரி யாசான்
சிறுபஞ்ச மூலஞ் செய் தான்

என்பது அச்செய்யுள். இதனால் இப்பெயர் காரண இடுகுறிப்பெயர் என்றலே அமைவுடைத்து.

மேலைச் செய்யுளால் வேறுசில குறிப்புக்களும் நமக்குப் புலனாகின்றன. காரியாசான் கொடையிற் சிறந்து விளங்கியவர். இவரது ஆசிரியர்

---

1. ஒரு வள்ளலும் (சிறுபாண் 92-95), ஒரு குறுநிலமன்னனும் (புறம் 121), ஓர் ஊரும் (புறம் 6), ஓர் ஆறும் (புறம் 47), ஒரு குதிரையும் (சிறுபாண் 110), ஓர் எருதும் (கலித் தொகை 104), காரி என்ற பெயரால் வழங்கியமை சங்கநூல்களால் உணரலாம். இப்பெயரை வைரவக் கடவுளுக்கும் ஐயனார்க்கும் திவாகரம் வழங்குகிறது. பரிபாடல் (3, 81) வாசுதேவனுக்கும் இப்பெயர் உரியதாகக் கொள்ளும்.

2. மாக்காயன் என்ற பெயர் ஜைன நூல்களில் வேறிடத்திலும் வந்துள்ளது. (Antagada Dasao VI)

மாக்காயனுர் ஆவர். மாக்காயனுரது மாணுக்கர் எனவே, இவரும் ஏலாதி, திணைமாலை நூற்றைம்பது என்ற இரண்டு கீழ்க்கணக்கு நூல்களையும் இயற்றிய கணிமேதாவியாரும் ஒருசாலை மாணுக்கர் என்பது தெளியக் கிடக்கின்றது. ஆகவே இந்நூல்களும் சிறுபஞ்சமூலமும் ஒரு காலத்துத் தோன்றிய நூல்களாகும். காரியாசான் மதுரை நகரினர் என்பதும் ஒருவாறு ஊகிக்கலாம்.

இவர் கவிதையுணர்ச்சியிற் சிறந்தவர் என்பது அவர் கூறுவது கொண்டேயுணரலாம். பெரும்புலவனுவானுக்குப் பலநூற்கேள்வி இன்றி யமையாதது என வற்புறுத்துகிறுர்; அவன் சிந்தையின் பெருமையினுலே அவனது பாட்டுச் சிறப்புறுவதாகும் எனக் கூறுகின்றுர். அவன் செந்தமிழும் நன்கு அறிந்தவனுக இருக்கவேண்டுமெனஅறிவுறுத்துகின்றுர். அறியாதவன் கவியியற்றுதல் நகைக்கிடமாகும் என்றனர்.

> ... செந்தமிழ் தேற்றுன் கவி செயலும்
> நாவகமேய் நாடின் நகை. (12)

> கேட்பவன் கேடில் பெரும்புலவன்-பாட்டவன்
> சிந்தையா னுகும் சிறத்தல் (33)

என்ற செய்யுட் பகுதிகளைக்காண்க. இக்கருத்துக்கள் கீழ்க்கணக்கு நூல்களில் வேறென்றிலும் வந்தனவாகத் தெரியவில்லை.

சிறுபஞ்சமூலம் பஞ்சதந்திரக்கதை ஒன்றினை எடுத்தாண்டுள்ளது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாம். 102-ம் செய்யுளில்

> ... ... உறுதவமேற் கங்கைக்
> கரைப்பூசை போறல் கடை

என வந்துள்ளது. 'மிக்க தவத்தை மேற்கொண்ட காலத்துப் பிறவுயிரைக் கொன்றுதின்கை காரணமாக மாயத்தால் தவவேடம் கொண்ட பூசையை ஒத்தல் கீழ்மைத்து' என்பது உரை. இதிற்குறிப்பிட்ட கதை பஞ்சதந்திரத்தில் மூன்றுந்தந்திரத்துள்[1] காணப்படுகின்றது. புறவுக்கும் முயலுக்கும் இடைநிகழ்ந்த வழக்கினைப் பூனைதீர்த்த கதையே இங்குக் கூறப் படுவது. இக்கதை இடைச்செருகல் அன்று; பஞ்சதந்திரத்தின் மூலரூபத்தி

---

1. ஆப்தே பதிப்பில் (1909) 3-ம் தந்திரத்து 2-ம் கதையாகவும், தந்த்ராக்யாயிகத்தில் (Harvard Oriental Series, Vol. XIV) 4-ம் கதையாகவும், புனர்நிர்மிதப் பஞ்சதந்திரத்தில் (Reconstructed Text: American Oriental Series Vol. III) 4-ம் கதையாகவும், பூர்ணபத்ரர் என்ற ஜைனயதியின் பஞ்சாக்யானகத்தில் (Harvard Oriental Series Vol. XI) 3-ம் கதையாகவும், ஹெல்ஹார்ன் பதிப்பில் (Bombay Sanskrit Series No. 4) 2-ம் கதையாகவும் உள்ளது.

லேயே உள்ளதென்பது ஆராய்ச்சியாளர் கருத்து. பூனை கங்கைக் கரையிலே யுள்ளது என்பது பூர்ணபத்ரரது பஞ்சாக்யானகத்திற் காணப்படுகிறதே யன்றி வேறொன்றிலும் காணப்படவில்லை. இவ்வாசிரியர் தமது நூலை இயற்றிய காலம் கி. பி. 1199 ஆகும். இவர் மேற்கொண்ட பஞ்சதந்திரப் படி சுமார் கி. பி. 900-ல் தோன்றி யிருக்கலாமென்பர் (F. Edgerton: புனர்நிர்மித பஞ்சதந்திரம் vol. 2 பக் 27). ஆனால் இன்னும் பழைமையான பஞ்சதந்திரப் படியை இவர் மேற்கொண்டிருக்கலாம் எனத் தோன்றுகிறது. ஏனெனின் பஞ்ச தந்திரத்தின் ஒரு படியான தந்த்ராக்யாயிகம் சுமார் கி. பி. 300-ல் தோன்றி யிருக்கலாம் என்பர் லான்மன்[1]. இவ் வடமொழித் தந்த்ராக்யா யிகத்தில் கங்கைக்கரைப் பூனை என்ற கருத்துக் காணப்பெறுமையால், அதனைப் பின்பற்றி எழுந்த பிறிதொருபடி பூர்ணபத்ரர் மேற்கொண்டதாக இருத்தல் வேண்டும். தந்த்ராக்யாயிகம் மேற்கொண்ட இவ்விரண்டாம்படியின் காலம் சுமார் 6-ம் நூற்றாண்டு ஆகலாம். இது தமிழிலும் மொழி பெயர்க்கப் பட்டு வழங்கிவந்தது. 'பாட்டிடை வைத்த குறிப்பினானும்' என்ற தொல் காப்பியச் செய்யுளியற் சூத்திரத்திற்கு (173), பேராசிரியர் எழுதிய வுரையில் 'சிறுகுரீஇ யுரையும் தந்திரவாக்கியமும் போல்வன வெனக் கொள்க' என வருதலால் அறியலாம். இங்கே தந்திரவாக்கியம் என்பது தந்த்ராக்யாயிகம் என்பதே யாதல் வேண்டும். இங்ஙனம் கொள்வோமாயின், சிறுபஞ்சமூலத்தில் காணப்படும் 'கங்கைக்கரைப் பூசை' என்னும் தொடருக் குத் தக்க அமைதி ஏற்பட்டுவிடுகிறது.

பூர்ணபத்ரர் மேற்கொண்ட தந்த்ராக்யாயிகப் படியோடு சிறுபஞ்சமூலம் தொடர்புடைய தென்பது வேறொரு சான்றாலும் அறியப்படும்.

காடுபோற் கட்கினிய இல்லம் பிறர்பொருள்
ஓடுபோல் தாரம் பிறந்த தாய்

என்பது 83-வது செய்யுள். இதன் கருத்து இப்போது வெளிவந்துள்ள தந்த்ராக்யாயிகத்திற் காணப்படுகிறது.

𑌮𑌾𑌤𑍃𑌵𑌤𑍍𑌪𑌰𑌦𑌾𑌰𑌾𑌂𑌶𑍍𑌚 𑌪𑌰𑌦𑍍𑌰𑌵𑍍𑌯𑌾𑌣𑌿 𑌲𑍋𑌷𑍍𑌟𑌵𑌤𑍍 ।
𑌆𑌤𑍍𑌮𑌵𑌤𑍍𑌸𑌰𑍍𑌵𑌭𑍂𑌤𑌾𑌨𑌿 𑌯𑌃 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 𑌸 𑌪𑌶𑍍𑌯𑌤𑌿 ॥

இதன்கணன்றி, பஞ்சதந்திரப் படி வகைகளில் வேறொன்றிலும் இக்கருத்துக் காணப்படவில்லை. இதனால் பூர்ணபத்ரர் மேற்கொண்ட பஞ்ச தந்திரப்படியின் காலமாகிய கி. பி. 600 க்குப்பின் தோன்றியது சிறுபஞ்ச மூலம் என்பது தெளிவாகிறது.

சிறுபஞ்சமூலம் என்று பெயரமைத்து நூலியற்றிய இவ் ஆசிரியர்க்கு ஆயுர்வேத நூலிற் பயிற்சி இருந்திருக்க வேண்டும் என்று நாம் எளிதில் ஊகிக்கலாம்.

---

1. Charles Rockwell Lanmen: Harvard Oriental Series vol. 14. p. 2.

சிக்கர் சிதடர் சிதலைபோல் வாயுடையார்
துக்கர் துருநாமர்

என்பது 76-வது செய்யுள். இவ்வடிகளை 'தலைநோயுடையாரையும், பித்துற்றாரையும், வாய்ப்புற்றுடையாரையும், கயநோய் கொண்டாரையும், மூலநோய் கொண்டாரையும்' என்று பழையவுரை விளக்குகின்றது. சிக்கர், சிதடர்[1] என்னும் பெயர்களின் காரணம் அறியக்கூடவில்லை. க்ஷயநோய்க்கு ஒரு பெயர் 'துக்கம்' என்று சரக ஸம்ஹிதை (சிகித்ஸா. VIII, 9) கூறுகிறது. 'துர்நாமம்' என்பது மூலநோயின் ஒரு பெயர் என்று அஷ்டாங்கஹ்ருதயமும் அமரமும் தெரிவிக்கின்றன. இவற்றால் ஆயுர்வேதப் பயிற்சி யுண்மை நன்கு தெளியக்கிடக்கின்றது. இதனாலும், இந்நூல் கி. பி. 600-க்குப் பிற்பட்டதாதல் தெளிவாம். ஒழுக்கம், கொல்லாமை, பொய்யாமை, புலாலுண்ணாமை, கள்ளாமை இவ்வைந்தினையும் சிறுபஞ்ச மூல மருந்தாமென ஒருசெய்யுள்கூறும்,

ஒத்த வொழுக்கம் கொலை பொய் புலால் களவோ
டொத்த இவையல் லொரு நாலிட்—டொத்த
உறுபஞ்ச மூலந் தீர் மாரிபோற் கூறீர்
சிறுபஞ்ச மூலஞ் சிறந்து. (2)

இவ்வாசிரியர் ஜைனசமயத்தவர் என்பது முன்பே கூறப்பட்டது. கீழ்க்கணக்கினைச் சார்ந்த நீதிநூல்களில் நாலடி, முப்பால், பழமொழி, சிறுபஞ்சமூலம், ஏலாதி என்ற ஐந்தும் ஜைனர்கள் இயற்றியன. இவற்றுள் சிறுபஞ்சமூலம் பெரும்பாலும் பொது நீதிகளையே கூறுவது. ஏலாதியில் ஜைனர்களுக்குரிய சிறப்புநீதிகள் மிகுதியாகக் கூறப்படுகின்றன. இவற்றோடு ஒத்த பழமையுடையதாய்ப் பிறிதொரு நூலுண்டு. அஃது அறநெறிச்சாரம்[2]. அந்நூலில் பெரும்பான்மை ஜைனநீதிகளும் ஜைன உண்மைகளும் ஜைன ஒழுக்கங்களும் சிறுபான்மை பொதுநீதிகளும் உணர்த்தப்படுகின்றன. இக்காரணம் பற்றிப்போலும் அதனைக் கீழ்க்கணக்குக்களுள் ஒன்றாகச் சேர்த்து எண்ணாதது.

சிறுபஞ்சமூலத்திற் சிறுபான்மை ஜைன நீதிகள் உளவென்றேன். 92-ம் செய்யுளில் கற்புடைமகளிர் துன்பந்தீர்த்தற் பொருட்டு மேற்கொள்ள வேண்டும் ஐவகை நோன்புகள் கூறப்பட்டுள்ளன. இந்நோன்புகள் ஜைனப்

---

1. இங்குப் 'பித்துற்றார்' என்றதற் கேற்ப, 'செய்யாமை மேற்கோள் சிதடியிற் றுவ்வாது' (முதுமொழிக். IV, 5) என்றஇடத்து 'மையல்தன்மை' என்று பழையவுரை பொருள் கூறும். 'சிறப்பில் சிதடும்' (புறம்-28), 'துஞ்சுபுலி யிடறிய சிதடன்போல' (புறம்-73) என்ற இடங்களில் 'குருடு' 'குருடன்' என்று உரை கூறப்பட்டுள்ளது.

2. 'தலைமகனிற் றீர்ந்தொழுகல் (அறநெறிச். 94) என்ற செய்யுளை இளம்பூரணர் (கற்பு. 12) மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

பெண்பாலார்க்குரியன என்று எளிதில் ஊகிக்கலாம். குராக் குறுங்கானம் போதல் இவற்றுள் ஒன்று. மயிலைநாதர்

இருதிணை ஆண்பெணுள் ஒன்றனை யொழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பி னானே (நன்.351)

என்றதன் உரையில் ‘இன்று இவ்வூராரெல்லாம் தைந்நீராடுப, குறுங் கானம் போப எனவும்........உயர்திணை ஆணொழி வினையும் வந்தவாறு’ என்று கூறினர். இதுவும் குறுங்கானம் போதல் பெண்பாலார்க்குரிய நோன்பு என்பதனை வலியுறுத்துகின்றது. இங்ஙனமே கொலைப்பாவத்தை விவரித்துக் கூறும் 70-வது செய்யுளில், கொன்றவன், கொலையை உடம்பட்டவன், கொல்லப்பட்டதன் ஊனை விலைக்குக் கொண்டவன், அவ்வூனை அட்டவன், அதனை இட வுண்டவன் என ஐவர்மாட்டும் கொலைப்பாவம் சென்று நிற்கும் என்று உரைக்கப்படுகின்றது. ஜைனதர்ம நூல்களில், பஞ்சமஹா விரதங் களுள் ஒன்றாகிய அஹிம்ஸையின் உட்பாகுபாடுகளே ஈண்டுக் குறிக்கப் படுவன. இவை ‘கிருத, காரித, அநுமோதனம்’ என்பவற்றின் விரிவேயாம்.

இவ்வாறாக ஒருசில ஜைன நீதிகள் எடுத்துரைக்கப்பட்ட போதிலும், பெரும்பாலும் அனைவர்க்குமுரிய பொது நீதிகளே இந்நூலில் வந்துள்ளன. ஒவ்வொரு செய்யுளிலும் ஐந்து நீதிப்பொருள்கள் உணர்த்தப்பட்டுள்ளன. இந்நீதிகள் ஒன்றோடொன்று தொடர்புடையன வாதல் வேண்டும் என்ற நியதியில்லை. உதாரணமாகப் பின் வரும் செய்யுளைக் காண்க:

தக்கார் வழிகெடா தாகும்; தகாதவர்
உக்க வழியரா யொல்குவார் — தக்க
இனத்தினா னாகும் பழி, புகழ்; தத்தம்
மனத்தினா னாகும் மதி. (81)

ஆனால் சில நீதிகள் ஓரினத்தார்க்கே உரியன வாயிருத்தலைக் கருதி, அவற்றை முறைப்படுத்து அமைத்து தொடர்புடையவாக நிறுத்தும் இடங் களும் பல வுள்ளன. உதாரணமாக

மக்கட் பெறுதல் மடனுடைமை மாதுடைமை
ஒக்க உடனுறைதல் ஊணமைவு—தொக்க
அலவலை யல்லாமை பெண்மகளிர்க் கைந்தும்
தலைமகனைத் தாழ்க்கு மருந்து. (53)

கொண்டான் கொழுநன் உடன்பிறந்தான் தன்மாமன்
வண்டார்பூந் தொங்கல் மகன்தந்தை - வண்தாராய்
யாப்பார்பூங் கோதை யணியிழையை நற்கியையக்
காப்பார் கருது மிடத்து. (54)

என்பன காண்க. பிந்திய செய்யுளில் மகளிரைக் காப்பவராக ஐவர் கூறப்பட்டுள்ளனர். ஆனால் மநு ஸ்மிருதியில்

𑌬𑌾𑌲𑍍𑌯𑍇 𑌪𑌿𑌤𑍁𑌰𑍍𑌵𑌶𑍇 𑌤𑌿𑌷𑍍𑌠𑍇𑌤𑍍 𑌪𑌾𑌣𑌿𑌗𑍍𑌰𑌾𑌹𑌸𑍍𑌯 𑌯𑍌𑌵𑌨𑍇 ।
𑌪𑍁𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌂 𑌭𑌰𑍍𑌤𑌰𑌿 𑌪𑍍𑌰𑍇𑌤𑍇 𑌨 𑌭𑌜𑍇𑌤𑍍 𑌸𑍍𑌤𑍍𑌰𑍀 𑌸𑍍𑌵𑌤𑌨𑍍𑌤𑍍𑌰𑌤𑌾𑌂 ॥

எனத் தந்தை, கணவன், மகன் என்ற மூவரே குறிக்கப்பட்டுள்ளார்கள். இம்மூவரும் இல்லாதவிடத்து, கணவனது நெருங்கிய ஸபிண்டனும், அவனுமில்லாதவிடத்து அரசனும் பாதுகாக்கக்கடவர் என நாரதஸ்மிருதி கூறும். உடன் பிறந்தான், மாமன் என்ற இருவரையுங் கூட்டியது ஸ்மிருதி வழக்கிற்கு முற்றும் மாறாகும். இது ஜைனர்களுக்குத் தனிப்பட உரிய வழக்கென்று கொள்ளற்பாலது.

இந்நீதிகளை வற்புறுத்தும் முறைகளும் இங்கு நோக்கத்தக்கன. ஒருசில கூறியது கூறும் வகையால் வற்புறுத்தப்படுகின்றன. உதாரணமாக

பொருளுடையான் கண்ணதே போகம்; அறனும்
அருளுடையான் கண்ணதே யாகும். (3)

என்பது

பொருளினா னாகுமாம் போகம் நெகிழ்ந்த
அருளினா னாகும் அறம். (36)

என மீண்டும் வற்புறுத்தப்படுகிறது.

இகழ்ச்சிக்குறிப்பின் வாயிலாகச் சில நீதிகள் வற்புறுத்தப்படுகின்றன. உதாரணமாக

தேவரே கற்றவர்; கல்லாதார் தேருங்கால்
பூதரே; முன்பொருள் செய்யாதார் - ஆதரே;
துன்ப மிலேம்பண்டு யாமே வனப்புடையேம்
என்பர் இருகா லெருது. (20)

என்ற செய்யுளைக் காண்க

நல்லனவற்றை ஒருசேரத் தொகுத்து அவற்றின் நன்மையைக் குறித்தற்குரிய சொல்லொன்றனை அடுக்கிக் கூறியும், இவ்வாறே தீயன சிலவற்றைத் தொகுத்துத் தீயசொல் லொன்றனை அடுக்கிக் கூறியும் வற்புறுத்தும் முறை ஒருசில இடங்களில் காணப்படுகின்றது.

கற்புடைய பெண் அமிர்து; கற்றடங்கினான் அமிர்து;
நற்புடைய நாடமிர்து; நாட்டுக்கு - நற்புடைய
மேகமே சேர்கொடி வேந்தமிர்து; சேவகனும்
ஆகவே செய்யின் அமிர்து. (4)

கோறலும் நஞ்சு ; ஊனைத் துய்த்தல் கொடுநஞ்சு ;
வேறலும் நஞ்சுமா றல்லானைத் - தேறினால்
நீடாங்குச் செய்தலும் நஞ்சால் ; இளங்கிளையை
நாடாதே தீதுரையும் நஞ்சு. (13)

ஒருசில நீதிகள் உவமான முகத்தால் வற்புறுத்திக் கூறப்படுகின்றன.

வான்குரீஇக் கூடரக்கு வாலுலண்டு நூல்புழுக்கோல்
தேன்புரிந்த தியார்க்கும் செயலாகா—தாம்புரீஇ
வல்லவர் வாய்ப்பன வென்னார் ஒரோவொருவர்க்
கொல்காதோ ரொன்று படும்[1] (27)

என்பதைக் காண்க.

ஒன்றன் பயனாக அதனை அடுத்துவருவது விளையுமென்று சிலவற்றைக் கூறி உலகியலை வற்புறுத்துதலும் சிலவிடங்களிற் காணலாம்.

வார்சான்ற கூந்தல் வரம்புயர வைகலும்
நீர்சான் றுயரவே நெல்லுயரும் - சீர்சான்ற
தாவாக் குடியுயரத் தாங்கருஞ்சீர்க் கோவுயர்தல்
ஓவா துரைக்கும் உலகு.[2] (46)

என்பது ஓர் உதாரணம்.

---

1. இதனோ டொத்த செய்யுளொன்று ஔவையார் பாடியதெனத் தனிப் பாடற்றிரட்டுக் கூறும்.

வான்குருவி யின்கூடு வல்லரக்குத் தொல்கறையான்
தேன்சிலம்பி யார்க்குஞ் செயலரிதால்—யாம் பெரிதும்
வல்லோமே யென்று வலிமைசொல வேண்டாங் காண்
எல்லார்க்கு மொவ்வொன் றெளிது.

2. வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோலுயரும்
கோலுயரக் கோனுயரும்

என்பது மேலைச் செய்யுளை அடியொற்றிச் செல்லுகிறது. இதனை ஔவையார் இயற்றியதாக ஒரு சிலரும், ஒட்டக்கூத்தர் இயற்றியதாக ஒரு சிலரும் கதை வழங்குவர்.

ஒருசில நீதிகள் பிறமத கண்டனத்தால் வற்புறுத்தப்படுகின்றன. உதாரணமாக

போர்த்தும் உரிந்திட்டும் பூசியும் நீட்டியும்
ஓர்த்தொரு பான்மறைத் துண்பான்மேய்—ஓர்த்த
அறமறமேற் சொற்பொறுக்க அன்றேல் கலிக்கண்
துறவறம்பொய் இல்லறமெய் யாம். (67)

என்ற செய்யுள் பௌத்தர் முதலியோர்களைக் கண்டித்துப் பொறையை வற்புறுத்தியது. இங்குக் கூறிய வேடங்கள் பௌத்தருக்குரியவாதல்

போர்த்தலுடை நீக்குதல் பொடித்துகள்மெய் பூசல்
கூர்த்தபனி யாற்றுதல் குளித்தழலுள் நிற்றல்
சார்த்தரிடு பிச்சையர் சடைத்தலைய ராதல்
வார்த்தைபிற செய்தவ மடிந்தமனம் என்றான்
(புறத்திரட்டு, 288 : நீலகேசி பக். 99)

என்னும் குண்டலகேசி[1] ச் செய்யுளால் அறியலாம்.

ஒருசில இடங்களில் பழமொழிகளால் நீதிகள் வற்புறுத்தப்படுகின்றன.

பண்டாரம் பல்கணக்கு கண்காணி பாத்தில்லார்
உண்டா ரடிசிலே தோழனிற்—கண்டாரா
யாக்கைக்குத் தக்க அறிவில்லார்க் காப்படுப்பிற்
காக்கைக்குக் காப்படுத்த சோறு. (40)

என்ற செய்யுளின் இறுதியடி ஒரு பழமொழியாகும். இது பழமொழியாதல்

ஊக்கி யுழந்தொருவர் ஈட்டிய ஒண்பொருளை
நோக்குமின் என்றிகழ்ந்து நொவ்வியார் கைவிடுதல்
போக்கில்லீர் தூஉம் பொருகழித் தண்சேர்ப்ப
காக்கையைக் காப்பிட்ட சோறு. (315)

என்ற பழமொழிச் செய்யுளால் உணரலாம்.

ஓரிடத்து ஒரு பழமொழிச் செய்யுள் சிறிதும் வேறுபாடின்றி இந்நூலகத்து அமைக்கப்பட்டுள்ளது:

நட்டாரை யாக்கிப் பகைதணித்து வையெயிற்றுப்
பட்டா ரணியல்கு லார்ப்படிந்—தொட்டித்
துடங்கினு ரில்லகத் தன்பிற் றுறவா
துடம்பினு ளுய பயன். (சிறுபஞ்ச 18 : பழமொழி 398)

---

1. குண்டலகேசியின் காலம் சுமார் கி. பி. 7-ம் நூற்றாண்டின் இறுதியாகலாம் என்பது சீவகசிந்தாமணியின் (சமாஜப்பதிப்பு) முன்னுரையால் உய்த்துணரலாம். இந்நூற் செய்யுளொன்றனை அடியொற்றிச் செல்லுகின்ற செய்யுளொன்று சிறுபஞ்சமூலத்தின்கண் வந்துள்ளமை மேற்காட்டியவற்றால் உணரலாம். ஆகவே இச் சிறுபஞ்ச மூலத்திற்கு நான் குறிப்பிட்டுள்ள காலம் பிறிதொரு வகையாலும் வலியுறுகின்றது.

பிறிதோரிடத்துப் பழமொழிச் செய்யுளொன்றனைத் தந்து அதன் நெறியிலே இயன்ற பிறிதொரு செய்யுளையும் இந்நூல் அமைத்திருக்கின்றது.

பூத்தாலுங் காயா மரமுள நன்றறியார்
மூத்தாலும் மூவார்நூல் தேற்றாதார் - பாத்திப்
புதைத்தாலும் நாறாத வித்துள பேதைக்
குரைத்தாலும் தோன்றா துணர்வு (சிறுபஞ்ச 23: பழமொழி 399)

பூவாது காய்க்கும் மரமுள நன்றறிவார்
மூவாது மூத்தவர் நூல்வல்லார் - தாவா
விதையாமை நாறுவ வித்துள மேதைக்
குரையாமைச் செல்லும் உணர்வு. (22)

இவற்றை நோக்குமிடத்துப் பழமொழிநூல் இச் சிறுபஞ்சமூலத்திற்குக் காலத்தால் முற்பட்டது என்ற கருத்துப் பொருத்த முடையதாதல் காணலாம்.

பழமொழிச் செய்யுளை எடுத்தாண்டது போலவே பிறநூல்களின் கருத்துக்களையும் இந்நூல் எடுத்தாண்டுள்ளது.

மழித்தலும் நீட்டலும் வேண்டா வுலகம்
பழித்த தொழித்து விடின். (280)

என்று வள்ளுவர் கூறிய கருத்து

நெடுக்கல் குறுக்கல் துறைநீர் நீடாடல்
வடுத்தீர் பகல்வா யுறையே - வடுத்தீரா
ஆகுமந் நான்கொழித் தைந்தடக்கு வானாகில்
வேகும்பம் வேண்டா விடும். (69)

என்றதன்கண் உள்ளது.

வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியும்
துணைவலியுந் தூக்கிச் செயல். (471)

என்றதிருக்குறள்

தன்னிலையும் தாழாத் தொழினிலையும் துப்பெதிர்ந்தார்
இன்னிலையும் ஈடில் இயனிலையும் - துன்னி
அளந்தறிந்து செய்வான் அரைசமைச்சன் யாதும்
பிளந்தறியும் பேராற்ற லான். (58)

என்ற செய்யுளுக்கு மூலமாகும்.

மணிநீரு மண்ணு மலையும் அணிநிழற்
காடு முடைய தரண். (742)

எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவும்
நல்லா ளுடைய தரண். (746)

என்ற குறள்கள்

நீண்ட நீர் காடு களர்நிவந்து விண்தோயும்
மாண்ட மலைமக்க ளுள்ளிட்டு - மாண்டவர்
ஆய்ந்தன ஐந்தும் அரணு வுடையானை
வேந்தனு நாட்டல் விதி. (49)

என்றதன்கண் புலப்படுகின்றன.

யானை யுடைப்படை காண்டல் மிகவினிதே. (5)

என்று இனியவை நாற்பதில் வருங்கருத்து

படை தனக்கு யானை வனப்பாகும். (7)

என்றதனோடு ஒத்துள்ளது.

தேவ ரனையர் புலவரும்

என்ற நான்மணிக் கடிகைச் செய்யுட் பகுதி (75)

தேவரே கற்றவர் (20)

என்றதன் மூலம் எனத் தோற்றுகிறது.

தலைமகனிற் றீர்ந்தொழுகல் தான்பிறரிற் சேறல்
நிலைமையில் தீப் பெண்டிரிற் சார்தல் - கலனணிந்து
வேற்றூர் புகுதல் விழாக்காண்டல் நோன்பெடுத்தல்
கோற்றொடியார் கோளழியு மாறு. (94)

என்ற அறநெறிச்சாரச் செய்யுளும்

கள்ளுண்டல் காணிற் கணவற் பிரிந்துறைதல்
வெள்கில ளாப்பிற ரிற்சேறல் - உள்ளிப்
பிறர்கருமம் ஆராய்தல் தீப்பெண் கிளைமை
திறவது தீப்பெண் தொழில். (25)

என்ற செய்யுளும் ஒத்தியல்கின்றமை காணலாம்.

நாலடியில்

இல்லம் இளமை யெழில்வனப்பு மீக்கூற்றம்
செல்வம் வலியென் றிவையெல்லாம் - மெல்ல
நிலையாமை கண்டு நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு. (53)

எனவருஞ் செய்யுள்

வடிவிளமை வாய்த்த வனப்பு வணங்காக்
குடிகுல மென்றைந்தும் குறித்த - முடியத்
துளங்கா நிலைகாணார் தொக்கீர் பசுவால்
இளங்காற் றுறவாத வர். (24)

என்ற செய்யுட்கு அடியாதல் அமையும்.

இன்னும் இந்நாலடியில்

குஞ்சி யழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையால்
கல்வி யழகே யழகு. (131)

என வந்துள்ள செய்யுள்

மயிர்வனப்பும் கண்கவரும் மார்பின் வனப்பும்
உகிர்வனப்பும் காதின் வனப்பும் - செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு. (37)

என்றதன் மூலமெனக் கொள்ளத்தக்கது.

இச்சிறுபஞ்சமூலச் செய்யுள்

இடைவனப்பும் தோள்வனப்பும் ஈட்டின் வனப்பும்
நடைவனப்பும் நாணின் வனப்பும் - புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு. (75)

என்ற ஏலாதிச் செய்யுளுக்கும் மூலமாயமைந்ததெனத் தோன்றுகின்றது. இங்ஙனமே

ஒல்லுவ நல்ல உருவவேற் கண்ணினாய்
வல்லுவ நாட்டி வகையினாற் - சொல்லிற்
கொடையினாற் போகம் சுவர்க்கந் தவத்தால்
கிடையாத் தவத்தினால் வீடு. (77)

என்று ஏலாதியில் வருஞ்செய்யுள்

இல்லியலார் நல்லறமும் ஏனைத் துறவறமும்
நல்லியலான் நாடி யுரைக்குங்கால் - நல்லியற்
றானத்தாற் போகம் தவத்தாற் சுவர்க்கமாம்
ஞானத்தால் வீடாகும் நாட்டு. (36)

என்ற செய்யுளின் அடியாகப் பிறந்ததெனக் கொள்ளல் தகும்.

இங்ஙனமாக முன்னை நூல்களை எடுத்தாண்டும் பின்னை நூல்களுக்கு ஆதாரமாய் அமைந்தும் இயன்றுள்ளது இச் சிறுபஞ்சமூலம்.

இந்நூலில் வடமொழிச் சொற்கள் பல எடுத்தாளப்படுகின்றன. உதாரணமாக உதாரம் (12), இலிங்கி (42), சிட்டன் (93,94), சிந்தி (93), சுவர்க்கம் (36,66,99) ஞானம் (93), சத்தம் (93), தருக்கம் (93), சமயம் (93), சேவகன் (95,103), பண்டாரம் (40) என்ற வடசொற்கள் இந்நூலில் வருகின்றன. இச்சொற்கள் சங்ககாலத்திற்குப்பின் தமிழில் வந்து புகுந்தன. இங்ஙனம் வழக்கிற் புகுந்த சொற்களை விலக்காது எடுத்தாளுதலால் காலநெறியோடொத்துத் தமிழ் மொழியும் பிறமொழிகளால் வளம்பெற்று வளர்ந்து செல்லுதல் அவசியம் என்பது ஆசிரியர் கருத்தாகுமெனக் கொள்ள வேண்டும். வடசொற்களே யன்றி, தமிழ்மொழியிற் புதுவழக்காகப் பிற்காலத்துத் தோன்றியவற்றையும் ஆசிரியர் எடுத்தாண்டுள்ளார். பஞ்சம் என்ற சொல் இப்போது பெருவழக்காகவுள்ளது ;, இப்பொருளில் வேறொரு சொல் இக்காலத்துத் தமிழில் காட்டுதல் ஏலாது. வற்கடம், சிறுவிலைக் காலம், வறட்காலம், வறங்கூர்தல் என்பன முற்காலத்து வழங்கின ; அவை இப்போது வழக்கொழிந்தன. 'அருவிலைக்காலம்' என்ற ஒரு தொடரும் 'கருப்பு' என்ற ஒரு சொல்லும் இப்போது அருகிவழங்குகின்றன. பெரு வழக்காகவுள்ள 'பஞ்சம்' சங்க இலக்கியங்களிற் பிற்பட்டனவற்றிற் கூடக் காணப்படவில்லை. அப்பர் தேவாரத்தில்

> கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கடல் நீர்சுருங்கிப்
> பன்னெடுங் காலம் மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டேன்
> றென்னெடுஞ் சூளுறும் அஞ்சல் நெஞ்சே இமையாத முக்கண்
> பொன்னெடுங் குன்ற மொன்றுண்டு கண்டீர் இப்புகலிடத்தே.
> (IV, 113, 10)

என ஓரிடத்தில் வருகின்றது. இதனால் 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இச்சொல் உலகவழக்கினின்று நூல்களில் அருகி ஏறலாயிற்றென்று கொள்ளலாம். சிறுபஞ்சமூலத்தில் இச்சொல் இரண்டிடங்களில் வந்துள்ளது. உலகவழக்குச் சொற்களை மிகுதியும் போற்றுகின்ற தேவாரத்திற்குப்பின்பே இலக்கியச் சொற்களையே மிகுதியும் போற்றுகின்ற நூல்களில் இதுபோன்ற சொல் ஆளப்பெறுதல் இயற்கையாம். எனவே அப்பரது காலத்திற்குப் பிற்பட்டவர் மாக்காரியாசான் என்று கொள்ளலாம். இச்சொல் மலையாளத்திலும் காணப்படுகிறது : ஆனல் தமிழிலிருந்து அது கொள்ளப்பட்டிருக்க வேண்டும். பிற திராவிடமொழிகளுள் கன்னடத்தில் 'பஞ்ஜெ' என்ற பதம் உள்ளது ; இதன் பொருள் 'மலடி' என்பது. இக்கன்னடச் சொல்லோடு தமிழ்ச் சொல் தொடர்புடையது எனக் கருத இடமுண்டு. பூமியை நிலமகள் என்னும் வழக்கு மிக்க தொன்மை வாய்ந்தது. 'நிலமகள் அழுத காஞ்சியும்' என்பது புறப்பாட்டு (365). திருவள்ளுவரும்

> இலமென் றசைஇ யிருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும். (1040)

என்றனர். பூமிவறங்கூர்ந்ததை 'நிலமகள் மலடுபட்டாள்' என்று வழங்கியது மிகப்பொருத்தமாயுள்ளது. இங்ஙனம் மலடுபட்ட தன்மையைப் பஞ்சம் என நமது முன்னோர்கள் வழங்கினர். 'பஞ்ஜெதநெ' என்ற கன்னடச் சொல் வறுமையென்று பொருள்படும். மக்களுள் பெண்பாலர்க்குரிய சொல், இருபாலார்க்கும் இயைபுள்ள வறுமைப் பொருள்பெற்று, பின் இடம் வறங்கூர்ந்த தன்மையை புணர்த்துவதாயிற்று. இது தமிழ் மக்களது மனோபாவனையின் உயர்வை நன்கு காட்டுகின்றது. கன்னடச் சொல்லை 'வந்த்யா' என்ற வட சொல்லோடு தொடர்புபடுப்பர் கிட்டல் ஆசிரியர் (Rev. F. Kittel). ஸந்த்யா என்ற வடசொல் 'ஸஞ்ஜெ' எனக் கன்னடத்திலும், விந்தியா என்ற வடசொல் 'விஞ்சை' எனத் தமிழிலும், வருதல் இங்கு நோக்கத் தக்கது.

வேறொரு தமிழ்ச் சொல்லை நோக்குவோம். அண்டுதல் என்ற வினைச் சொல் ஓரிடத்து 'அண்டாதே வேல்வழி வெம்முனை வீழாது' (15) என வந்துள்ளது. இங்கே அண்டாதே என்பதற்குப் 'பகைவரைச் செறியாதே' எனப்பொருளுரைக்கப் பட்டுள்ளது. எனவே 'அண்டுதல்' என்பதற்குச் செறிதல், நெருங்குதல், அடுத்தல் என்பன பரியாய பதங்களாம். இக் காலத்தில் இச்சொல் மிகுதியாக வழங்கப்படுகிறது. ஆனால் சங்க இலக்கியங்களில் இச்சொல் காணப்பெறவில்லை. பிற்பட்ட காலத்தில், கி. பி. 7-வது நூற்றாண்டிற்குப் பின், இச்சொல் நூல்வழக்கிற் புகுந்திருக்கலாமென்று தோன்றுகிறது. இதன் அமைப்புச் சிறிது ஊன்றி நோக்கத் தக்கது. 'தேடு' என்பதனைத் 'தேண்டு' எனக் கம்பர் வழங்கியுள்ளார். 'தேண்டிநேர் கண்டேன் வாழி' என்று சுந்தரகாண்டத்தில் (உருக்காட்டு, 77) வருகின்றது. பூடு (திருவாசகம் I, 26) என்பது பூண்டு என வழங்குகிறது. 'ஆண்பூண்டு, கண்டாலும் பேசாமற் கட்டிட்டாள்' என்பது விறலிவிடுதூது (822). கூடு (சீவக சிந்தாமணி 2328) என்பது கூண்டு என வழங்குகின்றது. 'கூண்டுக் கிளியினைப்போல்' என்பது பாரதியார்பாடல். இங்ஙனம் ணகரம் எழுத்துப்பேறாக வருதல் பெருவழக்காகும். ஆதலால் அடுதல் என்பதன் விகாரமே அண்டுதல் எனக்கொள்ள வேண்டும். இங்ஙனம் விகாரமாய் 'அடுத்தல்' என்பதன் பொருளையும் ஏன்றுள்ளது. இச் சொல்வழக்காறு மிகப்பிற்பட்டதென்பது சொல்லாமலே அமையும். இங்குக்காட்டிய சொற்கள் சிறுபஞ்சமூலத்தின் காலத்தை அறுதியிடுவதற்கு உதவுவனவாகும்.

இந்நூலின் பழைய வுரையினைக் குறித்துச் சில சொல்லவேண்டுவது அவசியம். மூலத்திலுள்ள சொற்களை விடாது தழுவிச் செல்வதாயுள்ளது இவ்வுரை. பழைய வுரைகளுக்கெல்லாம் இது சிறப்பியல்பு என்னத்தகும். இதனால் சொற்பொருள் துணிவுபெறுகின்றது. ஐயம் நேர்ந்த இடங்களில் உரையினைக்கொண்டும், மூலத்திலுள்ள எழுத்துக்களைக் கொண்டும், மூல பாடத்தை நிச்சயித்தல் இயலுவதாகின்றது. ஓர் உதாரணம் தருகின்

றேன். இந்நூலின் 92-ம் செய்யுளின் முதலடியும் இரண்டாம் அடியின் முற்பகுதியும் பிரதிகளிற் கிடைக்கவில்லை. ஆனால் மறைந்துவிட்ட பகுதிக்கு உரைகிடைக்கின்றது.

'இராவிருக்கை யென்பதொரு நோன்பும் [1] அமிது பொலிவு பெருததாய வைகலை யுடைய நோன்பும், பனிக்குள் முழுகுதலும், குராமரத்தை யுடைய குறுங்கானம் போதலும்.'

என இவ்வுரைப்பகுதி யுள்ளது. கிடைக்கும் வெண்பாப் பகுதியில் 'உராய்த்தன' என்பது தனிச்சொல்லாகக் காணப்படுவதால், இதற்கு இணங்க மூலத்தின் முதலடியும் இரண்டாம் அடியும் முறையே 'இரா விருக்கை' எனவும் 'குராக்கான்' எனவும் தொடங்குதல் வேண்டுமென ஊகிக்கலாம். இரண்டாமடியில் இரண்டு குறில்களே இன்னும் மறைந்து கிடப்பன. உரையில் 'போகுதலும்' என இருத்தலால் 'புகல்' என்பது பாடமாதல் வேண்டுமெனக் கொள்ளல் தகும். இனி, முதலடியில் 'அமிது பொலிவு பெருதவைகலை யுடைய நோன்பும் பனிக்குள் மூழ்குதலும்' என்ற உரைக்குரிய மூலப்பகுதி வேண்டும். இதற்கு அவசியமான சொற்களை மோனையும் தளையும் பிழையாது அமைத்து 'ஏலாதவைகல் பனிமூழ்கல்' எனப் பூர்த்திசெய்யப்பெற்றது.

இங்ஙனம் செய்யுளை நிரப்பி யமைத்தற்குப் பழையவுரை உதவுவதோடு, சிதைந்த இடங்களில் உண்மைப்பாடம் துணிதற்கும் பயன் படுகிறது. மேலும் இவ்வுரைகள் வரலாற்று முறையில் பலதிறப்பட்ட கல்வியும் நெடுங் காலம் பயின்று பெற்ற ஆழ்ந்த தமிழுணர்ச்சி யுடைய பெருமக்களால் இயற்றப்பட்டனவாக உள்ளன. அன்றியும் பௌத்த முதலிய சமயங்கள் உயிர்த்தத்துவத்தோடு தமிழகத்தில் வாழ்ந்து உலவியகாலத்தில் பண்டை நூல்கள் பல இயற்றப்பெற்றனவாம். இவற்றிற்கு உரை யெழுதுவோரும் இச்சமய நூல்களிற் பயிற்சியுள்ளாராயும் இச்சமயங்களைச் சார்ந்தவராயும் இருக்கவேண்டுவது அவசியம். பழைய வுரைகாரர்களுள் பலர் இத்தகுதி வாய்ந்தவர்கள். எனவே மூலநூலின் பொருளைச் செவ்வனே உணர்தற்கு இவர்கள் எழுதிய உரைகள் இன்றியமையாக் கருவிகளாயுள்ளன.

சிறுபஞ்ச மூலத்தின் பழைய வுரையும் இந்நெறியான் நோக்கு மிடத்து மிகச்சிறந்த உரையாம். உரையின் நயமும் நுட்பமும் மிகவும் பாராட்டத்தக்கன. ஆணுக்கம் (29) என்பதற்குப் 'பிரமசரியம்' எனப் பொருள் வரையப்பட்டுள்ளது. 'சிறிதெனினும் மாணுமை மாண்டார் மனை' (39) என்பதற்கு 'மாட்சிமைப் பட்ட தவசிகள் சிறிதாயினும் மனைவாழ்க்கையின்கண் மீள்கைக்கு மாணுதொழிகை (நன்று) என நுட்ப

1. 'இதுபோ லிப்பெற்றித்தாய' என்பது பிரதிபேதம்,

மாகச் சென்று உரை வகுக்கப்பட் டிருக்கின்றது. 'புல்மேய்ந்தார்' (41) என்பது 'புல்லினைப் பறித்து வாயிலிட்டார் எனப் பண்டைநூல் வழக்கினை நன்குணர்ந்து பொருள் எழுதப்பட்டுள்ளது. புல்லைத்தின்னுதல் தோல்விக்கு அறிகுறியான ஒரு மரபு; 'பகைவர் புல்லார்க' (4) என ஐங்குறுநூறு கூறும்; வடமொழியில் இதனை 'த்ருண பக்ஷணந்யாயம்[1] என வழங்குவர். 'கரம்போலக் கள்ளநோய் காணும் அயல்' (62) என்பதற்கு 'மாறாய், தமக்கிடமாய் நின்று [2] கர்மம்போல் மாயநோயைச் செய்யும் அயலிருப்பு' என விளக்கப்பட்டுள்ளது. இங்கே கரம் என்பது கர்மம் என்னும் பொருட்டாம்; 'கர்மம்' என்பதே கரம் எனத் திரிந்ததெனக்கோடலும் அமையும். இப்பொருள் மிகவும் பொருத்தமாயுள்ளமை எளிதின் அறியக்கிடக்கின்றது. ஐயம் (64) என்பது 'உண்டோ இல்லையோ என்று ஐயப்படும் பிச்சை' என்று தெளிவுறுத்தப்படுகிறது. இது சொற்காரணங் கூறுவதாய் அமைந்து நமது மொழியியல் அறிவைப் பெருகச்செய்கிறது. 'துக்கர் துருநாமர்' என்பன முன்னமேயே விளக்கப்பட்டன. தக்கம் (77) என்பது பற்று (தல்) எனப் பொருள் விரிக்கப்படுகிறது. பழமொழி நூலில் (199) 'தக்கமில் செய்கைப் பொருள் பெற்றால்' என்ற இடத்து 'நிலைத்தல்' என உரைதரப்படுகிறது. தங்குதல் என்ற வினையடியாகத் தோன்றிய பொருள்கள் இவையென்பது எளிதின் உணரலாம். இங்ஙனம் புதிதாய் அமைந்த சொற்களுக்கும் இலக்கண நெறியும் மொழியியல் நெறியும் ஒப்பத்தக்க முறையில் பழையவுரை அமைந்திருப்பது மிகுதியும் போற்றத்தக்கது.

இங்ஙனமிருப்ப, இவ்வுரையினைப் பின்பற்றாது தத்தமக்குத் தோற்றிய வகையில் பொருளெழுதிச் சிறுபஞ்ச மூலத்தை ஒருசிலர் வெளியிட் டிருக்கின்றனர். இது பெரிதும் வருந்தத்தக்கது. இன்னோர் மூலபாடத்தையும் தமக்கு வேண்டியவாறே திருத்தி விடுகின்றனர். தளை சிதைதல் முதலிய குற்றங்களையும் நோக்குவதில்லை. உதாரணமாக 'வழீஇய பிறர் பொருளை வௌவார்' எனத் தவறான பாடங்கொண்டு உரை யெழுதப்பட்டுளது. 'வழீஇய' என்பது விளச்சீராம். இதனை யடுத்து நேர்ச்சீரன்றோ வருதல் வேண்டும்? 'பிறர்பொருள்' என நிரை வருதல் கூடுமோ? அளபெடை அல்கு பெறுமெனக்கூறி யமைப்பர் போலும். அலவலை என்பதற்கு 'அற்பக் காரியங்கள்' எனப்பொருள் வகுத்துள்ளார். இதுபோன்ற உரைகள் உண்மைத்தமிழுணர்ச்சிக்குப் பெரிதும் இடையூறு விளைவிக்கின்றன.

இங்கு வெளியிடும் பதிப்பில்'வைதானொருவன்' என்பது 86 எனவும் 'நெடியமண்ணூராய்த்தன' என்ற பகுதியையுடையது 92 எனவும் எண்ணிடப்

---

1. Col. Jocob : A Handful of Popular maxims—III. p. 58

2. நூலினகத்து உரைப்பகுதியில் 'கர்மம்போல் மாய' என்னு மிடத்தி 'மாயா என்பது மட்டும் காணப்படும். இங்குக்குறித்த பாடம் அச்சிட்ட பின்னர்க் கிடைத்த சுவடியால் தெரியவந்தது.

பெற்றுள்ளன. எனவே இடையே ஐந்து செய்யுட்கள் மறைந்தொழிந்தன. ஏட்டுப் பிரதிகளில் இச் செய்யுட்களுக்கு இடம் விடப்பட்டுள்ளது. இவற்றுள் மூன்று செய்யுட்கள் புறத்திரட்டினால் தெரியவந்தன. அவை இப்பதிப்பில், 87, 88, 89-ம் செய்யுட்களாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஏனை இரண்டு செய்யுட்களும் ஒருவாற்றானும் புலப்படவில்லை.

இவற்றுள், 86-ம் செய்யுள் பாடம் பிறழ்ந்துள்ளது. எனினும் 'நொய்தா' எனவும் 'தக்கரே' எனவும் பாடங்கொள்ளல் நலம். 'வைதானொருவனை அறியா ஆள் ஆண்டு என நொய்தாகச் சுட்டிப் பலரும் இகழ்ந்துரைப்பர். தன்செவிக்கு எட்டாத இவ்வுரையை அங்ஙனம் வைதான் அறிவானாயின், ஈகையை இனிதாக மேற்கொள்ளும் பொருட்டு அவனை வாழ்த்திய வாழ்த்துரையாகக் கொள்ளுவன்: தச்சர்கள் தம் வாயுள்ளே தமது உளி கொண்டே எறிந்துகொள்ள மாட்டார்கள், ஆதலின்' என ஒருவாறு பொருளுரைத்தல் கூடும். 87-ம் செய்யுள் அச்சம், நன்மை (புகழ்), அறம் (புண்ணியம்), கைம்மாறு, அருள் என்ற ஐந்துவகையால் ஈகை நிகழும் எனக் கூறுகின்றது. 88-ம் செய்யுள் இவ்வகைகளுள் அச்சம், நன்மை, கைம்மாறு என்ற மூன்றும் பாராட்டத்தக்கனவல்ல என்றும் ஏனை இருவகையாலும் இன்சொல் முதலிய ஐந்தும் பொருந்தி ஈதலே சிறந்த ஈகையாம் என்றும் கூறுகின்றது.

இனி எனக்குக் கிடைத்துள்ள பிரதிகளைக் குறித்துச் சில சொல்ல வேண்டுவது அவசியம். ஒருசுவடி மிகப் பழைமையானது; சுமார் 225 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பெற்றது. இச்சுவடியில் தண்டியலங்காரமும் சிறுபஞ்சமூலமும் திவாகரம் தெய்வப்பெயர்த் தொகுதியும் உள்ளன. தண்டியலங்காரத்தின் இறுதியில்

'[2] சங்கரலிங்கம் துணை. சத்தியவாகீசுவரலிங்கம் துணை. ஆவுடையம்மன் துணை. குமரன் துணை. சரசோதியே நம: 895-ம்-ஞு விகாரிஞு சித்திரைமீ 28உ ஞாயிற்றுக்கிழமை நாழிகை 39 $\frac{7}{8}$ சிவநாமயோகம் நாழிகை 37; பவகரணம் நாழிகை 8; சவுசத் தியாச்சியம் நாழிகை 3; ராத்திரி நாழிகையில் தியாச்சியம் 2 ஆக இப்படிக்கு (சங்கர?) நயினார் கோயிலிலிருக்கும் திருமூலம் பண்டாரத்தின் குமாரன் சிற் (றம்ப) லவன் எழுதிப்படித்த அலங்காரம். கணபதி துணை. திருவெண்ணெய் நல்லூர் தென்காசி காவை அம்பலவாண மெய்கண்ட தேசிகன் பாதமே துணை. பரஞ்சோதி சிவாச்சாரியார் திருவடிகளே சரணம். சங்கரன் துணை. சிங்கலக்கினத்தில் எழுதி முகிந்தது. குருவே துணை.'

எனக் காணப்படுகின்றது. எனவே இச்சுவடி கி. பி. 1719-ல் ஏப்பிரில் 26-ல் எழுதி முடிந்ததாதல் தெள்ளிது. இதிலுள்ள சிறுபஞ்சமூலப் பிரதி 'நாணிலனாய்' (95) என்ற செய்யுள் முடியக்கொண்டுள்ளது; ஆனால் 'வைதா

---

2. பிரதியிலுள்ள தமிழ்-எண்களுக்குப் பதிலாக, இங்கே ஆங்கில-எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

ஒருவன்' (86) என்பது தொடங்கி 'இராவிருக்கை' (92) என்பதில் 'நெடியமண்' வரையுள்ள பகுதி காணப்பெறவில்லை. பிரதியின் இறுதியிலே

குறியுரு வறிவுதான் இறைவிதன் கோலமே
குறுகுவா ருளமெல்லாம் அவள்பெருங் கோயிலே
அறிஞர்வா ழிடமலா தழல்நெடும் பாலையே
அறிவிலா ரவையெலா மடையவெம் பேய்களே.

கல்லுங் கயவர் மனமே யவர்தங்
கண்ணே மரமு மவர்தண் மையறச்
சொல்லு முரையே சுடுதீ யிடர்சேர்
சூழுவளிமற் றவர்தங் தொழிலே.

என்ற இரண்டு அழகு மிக்க செய்யுட்கள் எழுதப்பட்டிருக்கின்றன. இச்சுவடியை உதவியவர் எனது நண்பர் திரு T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள்.

ஏனை இரண்டு சுவடிகளும் காலஞ்சென்ற திரு. தி. த. கனகசுந்தரம் பிள்ளையவர்களுக்குரியன. பிள்ளையவர்கள் குமாரராகிய திரு. T. K. இராஜேஸ்வரன் B. A., அவர்கள் இவற்றை உதவினார்கள். இவற்றுள் ஒன்றில் நாண்மணிக் கடிகை, சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி என்ற மூன்று நூல்கள் உள்ளன. நான்மணிக்கடிகை பரிதாபி௵ சித்திரை 3-௳ மங்களவாரத்திலும், முதுமொழிக் காஞ்சி விரோதிகிருது பங்குனி 29-௳ அமாவாசையிலும், எழுதி முடிந்தன. சிறுபஞ்ச மூலம் முற்றுப்பெறவில்லை. 'கலங்காமைக்காத்தல்' (74) என்ற செய்யுள்முடிய வுள்ளது. இச்சுவடி மிகுதியாகச் செல்லரித்துள்ளது. இஃது எழுதப்பெற்றது சுமார் 90 ஆண்டுகளுக்கு முன்பாகலாம்.

பிறிதொரு சுவடியில் சிறுபஞ்சமூலம், இன்னா நாற்பது, இனிது நாற்பது, கார்நாற்பது, களவழி நாற்பது, முதுமொழிக்காஞ்சி, ஆசாரக் கோவை என்ற ஏழு கீழ்க்கணக்கு நூல்களும் உரையுடன் உள்ளன. சுவடியும் நல்ல நிலைமையில் இருக்கிறது. எழுத்துக்களும் செம்மையாக அமைந்துள்ளன. ஆனால் இதன்கண்ணுள்ள சிறுபஞ்சமூலப் பிரதியிலும் 'வைதானொருவன்' (86) என்பது தொடங்கி 'நெடியமண்' வரையுள்ள பகுதிஇல்லை. கடைசிச் செய்யுள் 'வழிப்படரல்' என்றது 104-ம் செய்யுளாக எண்ணிடப் பெற்றுள்ளது. இறுதியில் 'மல்லிவர் தோள்' என்ற செய்யுளும் காணப் படுகிறது.

இப்பிரதிகள் தவிர, சென்னை அரசாங்கநூல்-நிலையத்துப் பிரதியொன்றும் இப்பதிப்பில் உபயோகிக்கப்பட்டது. ஐய மேற்பட்ட இடங்களில் மதுரைத் தமிழ்ச் சங்கப்பிரதியை நோக்கிக் குறிப்புக்கள் எழுதி அன்பர்

திரு. T. K. இராமாநுஜ அய்யங்கார் அவர்கள் உதவினார்கள். சிறுபஞ்ச மூலத்தைச் சார்ந்தனவாகப் புறத்திரட்டில் தொகுக்கப்பட்ட செய்யுட்களும் பாட பேதங்களும் இப்பதிப்பிற்குப் பெரிதும் பயன்பட்டன. சென்னை சிந்தாதிரிப்பேட்டை கொ. சண்முகசுந்தர முதலியாரவர்களால் புவனேந்திர மேடாவியில் (1875 ஏப்ரல்-மேமீ) இந்நூல் பழைய வுரையுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்த அச்சுப்பிரதியும் தமிழ்ச்செல்வப் பதிப்பு மூலப் பிரதியும் ஒப்புநோக்கப்பட்டன.

இப்பதிப்பிற்கு ஏட்டுப் பிரதிகள் கொடுத்துதவிய அன்பர்களுக்கும் ஏட்டுப்பிரதிகளைப் பார்வை யிடுதற்கு அனுமதியளித்த நூல்-நிலயங்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றி உரித்தாகின்றது. செந்தமிழ் உதவிப் பத்திராசிரியர் திரு. T.K. இராமாநுஜ அய்யங்காரவர்கள் மிக்க சிரமமெடுத்துப் பாடபேதங்களைக் குறித்தனுப்பி என்னை ஊக்குவித்தார்கள். வடமொழி விஷயங்களைப் பற்றிச் சென்னைப் பல்கலைக்கழகத்து வடமொழி ஆராய்ச்சித் துறையில் இருக்கும் டாக்டர் T. R. சிந்தாமணி அவர்களும், டாக்டர் V. ராகவன் அவர்களும் அன்போடு உதவிபுரிந்து வந்தார்கள். தமிழ் ஆராய்ச்சித்துறையில் முன்பு மாணவர்களா யிருந்த திரு. மு. அருணாசலம் பிள்ளை M. A., A. V. மயில்வாகனம் M. A., ஞானம்பாள் M. A. இம்மூவரும் சொல்லகராதிகளைத் தொகுத்து உதவினார்கள். இப்பொழுது மாணவராயிருக்கும் வித்வான் திரு. M. சண்முகம்பிள்ளை பின்னர்க்கிடைத்த பிரதிகளை ஒப்பு நோக்கியும், பெயர்த்தெழுதியும், பலவகை அகராதிகள் தொகுத்தும், பல்வேறு வகைகளில் மிக்க திறமையுடன் உழைத்து உதவி வந்தனர். இவர்கள் அனைவர்க்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

சென்னைப் பல்கலைக்கழகம்
20—10—43.

S வையாபுரிப் பிள்ளை.

உலகிற் கடுகம் உடலினோய் மாற்றும்
அலகில் அகநோய் அகற்றும்—நிலைகொள்
திரிகடுகம் என்னுந் திகழ்தமிழ்ச் சங்கம்
மருவுநல் லாதன் மருந்து.

செல்வத் திருத்துளார் செம்மல் செருவடுதோள்
நல்லாதன் என்னும் பெயரானே—பல்லார்
பரிவொடு நோயவியப் பண்ணியா ராய்ந்து
திரிகடுகஞ் செய்த மகன்.

திரிகடுகம்

(பழைய உரையுடன்)

கடவுள் வாழ்த்து

1. கண்ணகன் ஞாலம் அளந்ததூஉங் காமருசீர்த்
தண்ணறும் பூங்குருந்தஞ் சாய்த்ததூஉம்—நண்ணிய
மாயச் சகடம் உதைத்ததூஉம் இம்மூன்றும்
பூவைப்பூ வண்ண னடி.

எ-து: *இடம் அகன்ற ஞாலத்தை அளந்ததூஉம், கர்தலைச் செய்யா நின்ற புகழையுடைய தண்ணறும் பூங்குருந்தத்தைச் சாய்த்ததூஉம், கஞ்சனால் விடப்பட்ட வஞ்சனைச் சகடத்தை உதைத்ததூஉம்: என இம் மூன்று செய்கையும் காயாம் பூவின் நிறம்போன்ற நிறத்தையுடையவனது அடிகளின் செய்கை எ-று.*

நூல்

2. அருந்ததிக் கற்பினார் தோளுந் திருந்திய
தொல்குடியின் மாண்டார் தொடர்ச்சியுஞ்—சொல்லின்
அரிலகற்றுங் கேள்வியார் நட்புமிம் மூன்றும்
திரிகடுகம் போலு மருந்து.

எ-து: *அருந்ததி போன்ற கற்பினையுடைய மகளிர் தோளும், திருந்திய பழைய குடிப்பிறப்பின் கண் மாட்சிமைப்பட்டு வந்தார் நட்பும், ஒருவரைச் சொல்லுஞ் சொல்லின்கண் பிணக்கை யகற்றுங் கேள்வியாரோடு கொள்ளும் நட்பும்: என இம்மூன்றும் திரிகடுகம் போலும் மருந்துகளாம் ஒருவற்கு.* (க)

3. தங்குணங் குன்றாத் தகைமையுந் தாவில்சீர்
இன்குணத்தார் ஏவின செய்தலும்—நன்குணர்வின்
நான்மறை யாளர் வழிச்சேலவும் இம்மூன்றும்
மேன்முறை யாளர் தொழில்.

எ-து: *தம் குலத்திற்கும் நிலைமைக்கும் ஏற்ற குணத்தின் வழுவாத தன்மையும், கேடில்லாத சீர்மையுடைய இனிய குணத்தார் ஏவினவற்றைச் செய்தலும், மிக்க உணர்வினையுடைய நான்மறையாளர் சொல்லிய வழியே ஒழுகுதலும்: என இம் மூன்றும் மேலாய நெறியினை யுடையார் செயல்.* (உ)

4. கல்லார்க் கினனா வொழுகலுங் காழ்க்கொண்ட
இல்லாளைக் கோலாற் புடைத்தலும்—இல்லம்
சிறியாரைக் கொண்டு புகலுமிம் மூன்றும்
அறியாமை யான்வருங் கேடு.

---

1. 6 *பூங்குருந்து*; 8 *நண்ணரிய.* **2.** 1 *அருந்ததிக்.* **3.** 1 *தன்குணங்*; 8 *நன்குணர்ந்த.* **4.** 3 *காழ்கொண்ட*; 11 *புகுதலுமிம்.*

எ-து : கற்றறியாதார்க்கு இனனாய் ஒழுகுதலும், திண்மை கொண்ட வலிய இல்லாளைக் கோலாற் புடைத்தலும், சிறிய குணத்தாரைத் தம்மனை யின்கண் கொண்டு புகுதலும் : என இம் மூன்றும் தம் அறியாமையால் தமக்கு வருங் கேடாம். (ங)

5. பகைமுன்னர் வாழ்க்கை செயலுந் தொகைநின்ற
பெற்றத்துட் கோலின்றிச் சேறலு—முற்றன்னைக்
காய்வானைக் கைவாங்கிக் கோடலும் இம்மூன்றும்
சாவ வுறுவான் றொழில்.

எ-து : தன் பகைவரிடத்துக்கு அணித்தாகத் தான் வாழ்க்கையினைச் செய்தலும், தொகையாய் நின்ற பெற்றத்தின் நடுவே கோலின்றிச் சேறலும், முன்பு தன்னைக் காய்வானைப் பின்பு தனக்கு உறவாகத் தேறித் தன்மாட்டுக் கோடலும் : என இம் மூன்றும் சாவ வேண்டுவானுடைய செய்கைகள். (ச)

6. வழங்காத் துறையிழிந்து நீர்ப்போக்கும் ஒப்ப
விழைவிலாப் பெண்டிர்தோட் சேர்வும்—உழந்து
விருந்தினனாய் வேற்றூர் புகலுமிம் மூன்றும்
அருந்துயரங் காட்டும் நெறி.

எ-து : பலரும் இழிந்துபோகாத் துறையின்கண் இழிந்து நீரானே போகுதலும், தனக்குப் பொருந்த அன்பில்லாத பெண்டிர் தோளைச் சேர் தலும், வருந்திப் பிறர்க்கு விருந்தாய் அயலூரின்கண் புகுதலும் : என இம் மூன்றும் தனக்கு அருந்துயரத்தைக் காட்டும் நெறி. (ரு)

7. பிறர்தன்னைப் பேணுங்கால் நாணலும் பேணார்
திறன்வேறு கூறிற் பொறையும்—அறவினையைக்
காராண்மை போல வொழுகலும் இம்மூன்றும்
ஊராண்மை யென்னுஞ் செருக்கு.

எ-து : பிறர் தன்னைப் புகழுமிடத்து நாணுதலும், தன்னைப் பிறர் பேணாது தகுதி வேறுபடக் கூறும்பொழுது பொறுத்தலும், அறமாகிய செய்கையைக் கைம்மாறு வேண்டாத மேகம் போல வளர்த்தலும் : என இம் மூன்றும் ஊராண்மை யென்னுஞ் செருக்கு. (சு)

8. வாளைமீன் உள்ளல் தலைப்படலும் ஆளல்லான்
செல்வக் குடியுட் பிறத்தலும்—பல்சவையின்
அஞ்சுவான் கற்ற அருநூலும் இம்மூன்றும்
துஞ்சுமன் கண்ட கனா.

எ-து : வாளைமீனை உள்ளல் என்னும் புள் தலைப்படலும், ஆள்வினையில் லாதான் செல்வமுடைய குடியின்கண் பிறத்தலும், பல சவையின்கண் புக்கு, கற்ற தொன்றைச் சொல்ல அஞ்சுவான் கற்ற அரிய நூலும் : என இம் மூன்றும் உறங்கிய ஊமன் கண்ட கனாவோடு ஒக்கும். (எ)

---

5. 5 பெற்றத்துக்; 10 கைதாங்கிக்; 13 லுறுவான், துறுவான். **7.** 11 வொழுகுதலும். **8.** 8-9 பல்லவையு ளஞ்சுபவன்.

9. தோல்லவையுட் டோன்றுங் குடிமையுந் தொக்கிருந்த
நல்லவையுள் மேம்பட்ட கல்வியும்—வெல்சமத்து
வேந்துவப்ப அட்டார்த்த வென்றியும் இம்மூன்றும்
தாந்தம்மைக் கூறுப் பொருள்.

எ-து: *பழையவாய் வருகின்ற அவையின்கண் விளங்கித் தோன்றுந் தமது குடிப்பிறப்பும், பலரும் கூடியிருந்த நல்லவையின்கண் மேம்பட்ட கல்வியும், வெல்லும் போரின்கண் தம்மை ஆண்ட வேந்தன் உவப்பக் கொன்றுார்த்த வென்றியும்: என இம் மூன்றும் தம்மை மதித்துத் தாம் பிறர்க்குக் கூறுத பொருள்கள்.* (அ)

10. பெருமை யுடையா ரினத்தின் அகறல்
உரிமையில் பெண்டிரைக் காமுற்று வாழ்தல்
விழுமிய வல்ல துணிதலிம் மூன்றும்
முழுமக்கள் காத லவை.

எ-து: *பெருமைக் குணத்தை யுடையார் இனத்தை நீங்குதலும், தமக்கென உரிமையில்லாத பெண்டிரைக் காதலித்து ஒழுகுதலும், சீர்மையில்லாத செய்கைகளைத் துணிந்து செய்யத் தொடங்குதலும்: என இம் மூன்றும் அறிவுபுக வொரு புரையில்லாத மக்கள் காதலிப்பன.* (கூ)

11. கணக்காய ரில்லாத ஊரும் பிணக்கறுக்கு
மூத்தோரை யில்லா அவைககளனும்—பாத்துண்ணுத்
தன்மையி லாள ரயலிருப்பும் இம்மூன்றும்
நன்மை பயத்த லில.

எ-து: *ஓதுவிப்பார் இல்லாத ஊரும், பிணக்கினைக் கெடுக்கும் அறிவுடையாரை யில்லாத அவைக்களனும், பகுத்துண்ணுத குணமில்லாதார்க்கு அயலாக இருக்கும் இருப்பும்: என இம் மூன்றும் தனக்கு நன்மை பயத்தல் இல.* (க0)

12. விளியாதான் கூத்தாட்டுக் காண்டலும் வீழக்*
களியாதான் காவா துரையும்—தெளியாதான்
கூரையுட் பல்காலுஞ் சேறலும் இம்மூன்றும்
ஊரேலாம் நோவ துடைத்து.

எ-து: *பாடமாட்டாதான் ஆடுங் கூத்தைக் காண்டலும், தளர்ந்து வீழும்படி கள்ளினை நுகர்ந்து களியாதா னொருவன் பாதுகாவாது உரைக்கும் உரையும், தன்னைத் தெளியாதான் மனையின்கண் பலகாலும் சேறலும்: என இம் மூன்றும் உறையும் ஊரெல்லாம் தனக்குத் துன்பமாக உடைத்து.* (கக)

13. தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க உண்ணுதான்
கோளாள னென்பான் மறவாதான் இம்மூவர்
கேளாக வாழ்த லினிது.

எ-து: *தாளாண்மையை யுடையான் என்று சொல்லப்படுவான் பிறன் மாட்டுக் கடன் கொள்ளாது வாழ்பவன்; உபகாரி என்று சொல்லப்படுவான் விருந்தொழிய உண்ணுதான்; பிறர் அறிவித்ததனை மனத்தின்கண் கொள்ள*

---

11. 3 *பாத்துண்ணுங்.* **12.** 3 *காணலும்.* **13.** 3 *கடன்படான்.*

வல்லவன் எனப்படுவான் பின்பு அதனை மறவாதான் : இம் மூவரும் தனக்கு நட்பாக வாழ்தல் இனிது. (கஉ)

14. சீலம் அறிவான் இளங்கிளை சாலக்
குடியோம்ப வல்லான் அரசன்—வடுவின்றி
மாண்ட குணத்தான் தவசி யெனமூவர்
யாண்டும் பெறற்கரி யார்.

எ-து : தனக்கு இளங்கிளை ஆவான் தன்மனத்திற் சீலம் அறிந்து ஒழுகுவான் ; அரசன் ஆவான் மிகவும் குடிகளை ஓம்பவல்லான் ; தவசி ஆவான் வடுவின்றி மாட்சிமைப்பட்ட குணத்தினை யுடையான் : என இம் மூவரும் எவ்விடத்தும் பெறுதற்கு அரியார். (கங)

15. இழுக்க லியல்பிற் றிளமை பழித்தவை
சொல்லுதல் வற்றுகும் பேதைமை யாண்டுஞ்
செறுவோடு நிற்குஞ் சிறுமையிம் மூன்றுங்
குறுகார் அறிவுடை யார்.

எ-து : முறைமைகெடச் செய்தலை இயல்பாக வுடையார் இளமைப் பருவத்தை யுடையார் ; நல்லார்பழித்த சொற்களையே சொல்லவல்லார் பேதைமை யுடையார் ; எக்காலத்துஞ் செற்றத்தோடு நிற்பார் சிறிய குணத்தினை யுடையார் ; ஆதலால் இம்மூவரையும் தமக்கு இனமாகச் சென்று குறுகார் அறிவுடையார். (கச)

16. பொய்வழங்கி வாழும் பொறியறையுங் கைதிரிந்து
தாழ்விடத்து நேர்கருதுந் தட்டையும்—ஊழினால்
ஒட்டி வினைநயம் பார்ப்பானும் இம்மூவர்
நட்கப் படாஅ தவர்.

எ-து : பொய் சொல்லி யொழுகுந் திருவற்றானும், மிக்கா னொருவன் தன்பதந் தாழ்ந்தவிடத்து முன்பு அவற்குச் செய்யும் ஆசாரமுஞ் செய்யாது மற்று அவனைத் தன்னோடு ஒக்கக்கருதும் வேய்த்தண்டுபோலப் புரைப்பட்ட மனத்தானும், ஒருவனைச் சேரு முறைமையாற் சேர்த்துவைத்துச் சேரப் பட்டவனது கருமம் பாராது தன் கருமத்துக்கு நன்மை பார்ப்பானும் : என இம்மூவர் யாவரானும் நட்புக்கொள்ளப் படாதார். (கரு)

17. மண்ணின்மேல் வான்புகழ் நட்டானு மாசில்சீர்ப்
பெண்ணினுட் கற்புடையாட் பெற்றானும்—உண்ணுநீர்க்
கூவல் குறைவின்றித் தொட்டானும் இம்மூவர்
சாவா வுடம்பெய்தி னார்.

எ-து : மண்ணுலகத்தின்கண் மாட்சிமைப்பட்ட புகழை நிறுத்தினானும், பெண்களுள் வைத்துக் குற்றமில்லாத சீர்மையையுடைய கற்புடையாளை மனையாளாகப் பெற்றானும், உண்ணுநீர்க் கூவல்கள் குறைபடாமல் தோண்டினானும் : என இம்மூவர் சாவாத தேவர்கள் யாக்கையைப் பெற்றார்கள். (கரு)

---

14. 5 குடியோம்பல் ; 11-12 தவசியென் றிம்மூவர் ; 12 யெனவிவர்.
16. 5-6 தாழ்விடத்தொக்கக்கருதுந் ; 10 வினை நலம்.

18. மூப்பின்கண் நன்மைக் ககன்றானுங் கற்புடையாட்
பூப்பின்கண் சாராத் தலைமகனும்—வாய்ப்பகையுட்
சொல்வென்றி வேண்டும் இலிங்கியும் இம்மூவர்
கல்விப் புணைகைவிட் டார்.

எ-து: *இளமைப் பருவங் கழிந்தகாலத்துத் துறவறத்தை நீங்கினானும், கற்புடைய தன்மனைவி பூத்தகாலத்து அவளைச் சாராத கொழுநனும், நாவின் வலத்தான் மாறுகொண்டவிடத்துப் பொருள் வென்றியொழியச் சொல்வென்றி வேண்டுந் தவவேடத்தானும்: என இம்மூவர் கல்வியாகிய புணையைக் கைவிட்டு அழுந்துவார்.* (கஎ)

19. ஒருதலையான் வந்துறூஉ மூப்பும் புணர்ந்தார்க்
கிருதலையு மின்னாப் பிரிவும்—உருவினை
உள்ளுருக்கித் தின்னும் பெரும்பிணியும் இம்மூன்றும்
கள்வரி னஞ்சப் படும்.

எ-து: *மெய்யாக வந்தணையு மூப்பும், தம்முட்கூடினார்க்கு இருவர் மாட்டும் இன்னாத பிரிவும், உடம்பினை யுள்ளுடற்றித் தின்னும் பெரும்பிணி யும்: என இம் மூன்றும் கள்வரை அஞ்சினாற்போல அஞ்சப்படும்.*

'ஒருதலையான் வந்துறூஉ மூப்பு' என்பதற்குப் புணர்ந்தார் இருவர்க்கு ஒருதலையான் வந்துறும் மூப்பு என்றுமாம். (கஅ)

20. கோல்யானைக் கோடுங் குணமிலியும் எல்லிற்
பிறன்கடை நின்றொழுகு வானும்—மறந்தெரியா
தாடும்பாம் பாட்டும் அறிவிலியும் இம்மூவர்
நாடுங்காற் றூங்கு பவர்.

எ-து: *கொல்யானைக்கு முன் ஓடுங் குணமிலியும், இரவிற் பிறன் இல்லின்கண் சென்று அவன்மனையாளைப் பார்த்து நின்று ஒழுகுவானும், மறத்தை ஆராய்ந்து தெளியாது ஆடும் பாம்பினை யாட்டி இரந்துண்ணும் அறிவிலியும்: என இம் மூவர் தங்கள்வாணாள் தங்களிடை நின்று நீங்கிப் போக ஒழுகுவார்.* (கக)

21. ஆசை பிறன்கட் படுதலும் பாசம்
பசிப்ப மடியைக் கோளலும்—கதித்தொருவன்
கல்லானென் றெள்ளப் படுதலும் இம்மூன்றும்
எல்லார்க்கும் இன்னா தன.

எ-து: *பிறனொருவன்மாட்டுத் தனத்துக்கு ஆசைப்படுதலும், தன் சுற்றம் பசிக்கும்படி சோம்புதலும், வெகுண்டுதன்னை யொருவன் கற்றிலனென்று இகழப்படுதலும்: என இம் மூன்றும் எல்லார்க்கும் இன்னாதன.* (உ௦)

22. வருவாயுட் கால்வழங்கி வாழ்தல் செருவாய்ப்பச்
செய்தவை நாடாச் சிறப்புடைமை—எய்தப்
பலநாடி நல்லவை கற்றலிம் மூன்றும்
நலமாட்சி நல்லவர் கோள்.

---

20. 6 *நின்றுழல்.*

எ-து : *தமக்கு வருவாயுள்ள இடங்களிலே மடிந்திராது சென்று வாழ்தலும், போரின்கண் வெற்றி வாய்ப்பத் தாம் செய்தமையைப் பிறர் ஆராய் வேண்டாவகை யாவர்க்கும் விளங்கித் தோன்றுஞ் சிறப்புடைமையும், நிரம்பப் பல நூல்களையும் ஆராய்ந்து அவற்றுள் நல்லனவற்றைக் கற்றலும் என இம் மூன்றும் நலத்தான் மாட்சிமையுடைய நல்லவர் செய்கை.* (உக)

23. பற்றேன்னும் பாசத் தளையும் பலவழியும்
பற்றறு தோடும் அவாத்தேருந்—தேற்றெனப்
பொய்த்துரை யென்னும் பகையிருளும் இம்மூன்றும்
வித்தற வீடும் பிறப்பு.

எ-து : *மனைவாழ்க்கை என்று சொல்லப்படும் அன்புத்தளையும், பல பொருள்களினும் பற்றறுதேயோடும் ஆசையாகிய தேரும், தெளியப் பிறர்க்குப் பொய்த்துரைக்கும் உரையாகிய பெரிய இருளும் : என இம் மூன்றும் பிறப்பிற்கு வித்தாம். இவ்வித்துக்கள் அறப் பிறப்பு வீடும்.* (உஉ)

24. தானங் கொடுக்குந் தகைமையும் மானத்தாற்
குற்றங் கடிந்த வொழுக்கமும்—தேற்றெனப்
பல்பொருள் நீங்கிய சிந்தையும் இம்மூன்றும்
நல்வினை யார்க்குங் கயிறு.

எ-து : *பிறர்க்குத் தானமாகப் பொருள் கொடுக்கும் பெருமையும், மானமுடைமையாற் குற்றத்தை நீக்கிய ஒழுக்கமும், தெளியப் பல் பொருள் மேலுமுள்ள பற்றினை நீக்கிய நினைவும் : என இம் மூன்றும் நல்வினையைப் போகாமல் தன்மாட்டே பிணிக்குங் கயிறும்.* (உங)

25. காண்டகு மென்றோட் கணிகைவா யின்சொல்லும்
தூண்டிலி னுட்பொதிந்த தேரையும்—மாண்டசீர்க்
காழ்த்த பகைவர் வணக்கமும் இம்மூன்றும்
ஆழ்ச்சிப் படுக்கும் அளறு.

எ-து : *காணத்தக்க மெல்லிய தோளினையுடைய கணிகைவாயிற் பிறந்த இனிய சொல்லும், தூண்டிலினுள்ளே மீனுக்கு இரையாகப் பொதியப்பட்ட தேரையும், திண்ணென்ற பகைவருடைய மாட்சிமைப்பட்ட வணக்கமும் : என இம்மூன்றும் உயிர்களை அழுந்துவிக்கும் அளறு.* (உச)

26. செருக்கினல் வாழுஞ் சிறியவனும் பைத்தகன்ற
அல்குல் விலைபகரும் ஆய்தொடியும்—நல்லவர்க்கு
வைத்த அறப்புறங் கொண்டானும் இம்மூவர்
கைத்துண்ணார் கற்றறிந் தார்.

எ-து : *மனக்களிப்பினானே முறைகெடச் செய்து வாழுஞ் சிறியவனும், பரந்தகன்ற அல்குலை விலைக்கு விற்கும் ஆய்தொடியும், நல்ல அருந்தவர்க்கு வைத்த அறப்புறங்களை வௌவினானும் : என்று இம் மூவர் கைப்பொருள் களையுக் கொண்டுண்ணார் அறிவுடையார்.* (உரு)

23. 14 *வீழும்.* **24.** 4 *மானத்தார்* ; 10 *நீக்கிய.* **26.** 3 *சிறியவரும்* ; 11 *கொன்றானும்.*

27. ஒல்வ தறியும் விருந்தினனும் ஆருயிரைக்
கோல்வ திடைநீக்கி வாழ்வானும்—வல்லிதிற்
சீல மினிதுடைய ஆசானும் இம்மூவர்
ஞால மெனப்படு வார்.

எ-து: *தன்னால் நச்சிச்செல்லப்பட்டார்க்கு இயல்வதறிந்து பெற்று அதனன் இன்புறும் விருந்தினனும், அரிய உயிரைப் பிறர் கொல்வதனை இடை நீக்கி வாழ்வானும், வலியுடைத்தாக நீதியைத் தான் மேற்கொண்ட ஒழுக்கம் இடையூறுபடாமல் ஒழுகும் ஆசாரியனும்: என இம் மூவர் உலகமென்று சொல்லப்படுவர்.* (உகூ)

28. உண்பொழுது நீராடி யுண்டலும் என்பெறினும்
பால்பற்றிச் சொல்லா விடுதலும்—தோல்வற்றிச்
சாயினுஞ் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றும்
தூஉய மென்பார் தொழில்.

எ-து: *உண்ணும் பொழுது நீராடி யுண்டலும், எல்லாப்பயன் பெறினும் ஒருவர்க்காகப் பாங்கோடிச் சொல்லாது நடுவுசொல்லுதலும், பசியான் உடம்புவற்றி யிறந்துபடினும் சான்றாண்மையிற் குன்றாவகை செய்தலும்: என இம் மூன்றும் மனமொழிமெய்களால் தூயமென்று தம்மைக் கருதுவார் செய்கை.* (உஎ)

29. வெல்வது வேண்டி வெகுண்டுரைக்கு நோன்பிலியும்
இல்லது காமுற் றிருப்பானும்—கல்விச்
செவிக்குற்றம் பார்த்திருப் பானுமிம் மூவர்
உமிக்குற்றுக் கைவருந்து வார்.

எ-து: *சொல்வென்றி வேண்டிப் பிறனோடு வெகுண்டுரைக்குந் தவசியும், தனக்கில்லதனை ஆசைப்பட்டிருப்பானும், ஒருவன் கற்ற கல்வியைச் செவி குற்றம் பார்த்திருப்பானும்: என இம்மூவர் உமிக்குத்திக் கைவருந்துவாரோ டொப்பர்.* (உஅ)

30. பெண்விழைந்து பின்செலினுந் தன்செலவிற் குன்றாமை
கண்விழைந்து கையுறினுங் காதல் பொருட்கின்மை
மண்விழைந்து வாழ்நாள் மதியாமை இம்மூன்றும்
நுண்விழைந்த நூலவர் நோக்கு.

எ-து: *பெண்கள் விரும்பி ஒருவன்பின் சென்றாலுந் தன் ஒழுக்கத்திற் குன்றுதொழிதல், கண் விரும்பிச்சென்று கையுற்றனவாயினும் அப்பொருள் தன் மனத்தின்கட் காதலியாமை, இம் மண்ணுலகத்தின்கண் ணிருந்து வாழும் வாழ்வை விரும்பி மதியாமை: என இம மூன்றும் நுண்விழைந்த நூலவர் கருத்து.* (உகூ)

31. தன்னச்சிச் சென்றாரை யெள்ளா வொருவனும்
மன்னிய செல்வத்துப் பொச்சாப்பு நீத்தானும்
என்றும் அழுக்கா றிகந்தானும் இம்மூவர்
நின்ற புகழுடை யார்.

28. 3 *புண்ணுதல்*; 7 *விடுதல்தர்.* **31.** 11 *நிகழ்ந்தானும்.*

எ-து: தன்னை நச்சிச் சென்றாரை யிகழாத ஒருவனும், நிலைபெற்ற செல்வம் பெற்ற காலத்தின்கண் கடைப்பிடி யில்லாமையை நீத்தானும், எஞ்ஞான்றும் பிறர்மாட்டுத் தன் மனச்சழக்கினை விட்டானும் என இம் மூவர் நிலையுடைய புகழினையுடையார். (௩௰)

32. பல்லவையுள் நல்லவை கற்றலும் பாத்துண்டாங்
கில்லற முட்டா தியற்றலும்—வல்லிதில்
தாளி னொருபொரு ளாக்கலும் இம்மூன்றும்
கேள்வியு ளெல்லாந் தலை.

எ-து: பல்லவைகளினும் நல்ல என்று சொல்லப்பட்ட நூல்களைக் கற்றலும், பகுத்துண்டு இல்லறத்தை யிடையுறாமற் செலுத்தலும், தான்வல்ல வகையால் தாளாண்மையால் யாதானு மொரு பொருளை யுண்டாக்குதலும் என இம்மூன்றுந் தான் கேட்ட நற்பண்புகளுள்ளுந் தலையாய பண்புகள். (௩௧)

33. நுண்மொழி நோக்கிப் பொருள்கொளலும் நூற்கேலா
வெண்மொழி வேண்டினுஞ் சொல்லாமை—நன்மொழியைச்
சிற்றின மல்லார்கட் சொல்லலும் இம்மூன்றும்
கற்றறிந்தார் பூண்ட கடன்.

எ-து: நூல்களிற் சொல்லும் நுண்ணிய பொருள்களை யாராய்ந்து பொருளைக் கோடலும், இருந்த கோட்டிக்குத் தகுதியாகிய நூற்கேலா வெள்ளிய சொல் வேண்டிற்றாயினுஞ் சொல்லா தொழிதலும், நல்ல உறுதியாகிய மொழிகளை நல்லினத்தார் மாட்டுச் சொல்லித் தங்குவித்தலும்: என இம் மூன்றுங் கற்றறிவினையுடையா ராயினார் பூண்ட கடப்பாடாயின செயல். (௩௨)

34. கோலஞ்சி வாழுங் குடியுங் குடிதழீஇ
ஆலம்வீழ் போலும் அமைச்சனும்—வேலின்
கடைமணிபோற் றிண்ணியான் காப்புமிம் மூன்றும்
படைவேந்தன் பற்று விடல்.

எ-து: மன்னவன் செங்கோலையஞ்சி வாழுங் குடியையும், அக்குடிகளை மேவிக்காத்து ஆலம் வீழ் போலத் தாங்க வல்ல அமைச்சனையும், வேலின் கடைமணி போலத் திண்ணியோன் காவலையும்: என இம்மூன்றையும் படை வேந்தன் பற்றுவிடாது ஒழுக. (௩௩)

35. மூன்று கடன்கழித்த பார்ப்பானும் ஓர்ந்து
முறைநிலை கோடா அரசும்—சிறைநின்
றலவலை யல்லாக் குடியுமிம் மூவர்
உலக மெனப்படு வார்.

எ-து: தேவர் முனிவர் தென்புலத்தாரென்னு மூவர்க்குஞ் செய்யுங் கடன் மூன்றுங் கழித்த பார்ப்பானும், ஆராய்ந்து தான் செய்யும் முறை நிலையிற் கோடாத அரசனும், அரசன் காவலைக்கடவாத அலவலையல்லாக் குடியும்: என இம்மூவர் உலக மென்று சொல்லப்படுவர். (௩௪)

---

33. 11 சொல்லுதல். 34. 15 விடான்.

36. முந்நீர்த் திரையி னெழுந்தியங்கா மேதையும்
நண்ணூற் பெருங்கேள்வி நூற்கரை கண்டானும்
மைந்நீர்மை யின்றி மயலறுப்பான் இம்மூவர்
மெய்ந்நீர்மை மேனிற் பவர்.

எ-து : *கடலினூடு போய் ஒரு கருமம் முடிப்பே னென்னாத அறிவுடையானும், நுண்ணிய நூற்பெருங் கேள்விகளால் அந்நூலின் கரையைக் கண்டானும், குற்றத்தன்மையின்றி மனப்பாசம் அறுப்பானும் : என இம்மூவர் உண்மைத் தன்மையின்க ணின்றே ஒழுகுகின்றார்.* (௩௫)

37. ஊனுண் டுயிர்கட் கருளுடையே மென்பானும்
தானுடன்பா டின்றி வினையாக்கு மென்பானும்
காமுறு வேள்வியிற் கொல்வானும் இம்மூவர்
தாமறிவர் தாங்கண்ட வாறு.

எ-து : *ஒன்றனுடைய ஊனைத் தின்றுவைத்து உயிர்கட்கு அருளுடையேம் என்பானும், ஒருவன் தன் மனத்தால் உடன்பாடின்றிச் செய்த வினைகள் அவனைச் சென்று பற்றும் என்பானும், தான் காதலித்த யாகத்தின் பொருட்டு ஒன்றனைக் கொல்வானும் ; என இம்மூவரும் தம் அறிவால் வந்த அறிவை அறிகின்றார் ; உண்மை அறிகின்றாரல்லர்.* (௩௬)

38. குறளையுள் நட்பளவு தோன்றும் உறலினிய
சால்பினில் தோன்றுங் குடிமையும்—பால்போலுந்
தூய்மையுள் தோன்றும் பிரமாணம் இம்மூன்றும்
வாய்மை யுடையார் வழக்கு.

எ-து : *ஒருவன் குறளையுடைமையான் நட்பினது அளவு தோன்றும் ; சார்தற்கினிய சால்புடைமையால் தோன்றும் அவன் குடிப்பிறப்புடைமையும் ; பால்போலும் மறுவற்ற மனமொழி மெய்களின் தூய்மையாலே தோன்றும் ஒருவனைப் பிறரால் தேறப்படுதல் : என இம்மூன்று செய்கையும் உண்மை யுணர்வுடையார் செய்கைகள்.* (௩௭)

39. தன்னை வியந்து தருக்கலும் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலும்—முன்னிய
பல்பொருள் வெஃகுஞ் சிறுமையும் இம்மூன்றுஞ்
செல்வ முடைக்கும் படை.

எ-து : *தன்னை மதித்துச் சொல்லி அகங்காரமாதலும், ஒரு பயனின்றியே பிறர்மேற் சினத்தை வளர்த்தலும், தான் நினைத்த பிறருடைய பல பொருள்களையும் தனக்காக விரும்புஞ் சிறுமைக் குணமும் : என இம்மூன்றும் தனது செல்வத்தைக் கெடுக்கும் படையாம்.* (௩௮)

40. புலைமயக்கம் வேண்டிப் பொருட்பெண்டிர்த் தோய்தல்
கலமயக்கம் கள்ளுண்டு வாழ்தல்—சோலைமுனிந்து
பொய்மயக்கம் சூதின்கண் தங்குதல் இம்மூன்றும்
நன்மையி லாளர் தொழில்.

---

38. 2 *நண்பளவு.*

எ-து : தீண்டப்படாதவற்றோடு கலத்தலாவது பொருட் பெண்டிரை விரும்பித் தோய்தல், எச்சில் கலந்த கலங்களோடு எச்சில் கலவாத கலங்கள் கலத்தலாவது கள்ளுண்டு வாழ்தல், சொல்லை வெகுண்டு பொய்யோடு கலத்தலாவது சூதாடலின் கண்ணே எப்பொழுதுந் தங்குதல்: என இம் மூன்று தொழிலும் நன்மை பெறக் கடவரல்லாதார் தொழில். (௩௯)

41. வெகுளி நுணுக்கும் விறலும் மகளிர்கட்
கோத்த வொழுக்க முடைமையும் பாத்துண்ணும்
நல்லறி வாண்மை தலைப்படலும் இம்மூன்றுந்
தொல்லறி வாளர் தொழில்.

எ-து : தன் மனத்தின்கண்ணுள்ள வெகுளியைச் சுருக்கும் மிகுதிக் குணமும், மகளிர்திறத்துத் தமக்குப் பொருந்தும் ஒழுக்கமுடையனுதலும், பகுத்துண்ணும் நல்லறிவுநிலைமையைத் தலைப்படுதலும்: என இம் மூன்றும் பழையதாக நல்லாரறிந்து வருகின்ற அறிவினையுடையார் தொழில். (௪0)

42. அலந்தார்க்கோன் றீந்த புகழும் துளங்கினுந்
தன்குடிமை குன்றாத் தகைமையும்—அன்போடி
நாளும் நட்டார்ப் பெருக்கலும் இம்மூன்றுங்
கேள்வியு ளெல்லாந் தலை.

எ-து : வறுமையால் இரந்தார்க்கு ஒன்றை ஈந்த புகழும், தான் வறுமையால் துளங்கிய விடத்தும் தன் குடிப்பிறப்புக்குத் தக்க தகுதி குன்றாத் தகைமையும், அன்பு சென்று நாடோறும் நட்டாரை வளர்த்தலும் : என இம் மூன்றும் தான்கேட்ட நற்செய்கைகளெல்லாவற்றுள்ளும் தலையாய நற்செய்கைகள். (௪௧)

43. கழகத்தால் வந்த பொருள்கா முறுமை
பழகினும் பார்ப்பாரைத் தீப்போல் ஒழுகல்
உழவின்கட் காமுற்று வாழ்தலிம் மூன்றும்
அழகென்ப வேளாண் குடிக்கு.

எ-து : சூதாடும் கழகத்தால் வந்த பொருளை விரும்பாதொழிதலும், பல நாள் பழகியொழுகினும் பார்ப்பாரைத் தீப்போலச் சென்று சாராதொழிதலும், உழவின்கண்ணே காதலித்து வாழ்தலும்: என இம்மூன்றும் வேளாண்குடிக்கு அழகாவது. (௪௨)

44. வாயின் அடங்குதல் துப்புரவாம் மாசற்ற
செய்கை யடங்குதல் திப்பியமாம்—பொய்யின்றி
நெஞ்ச மடங்குதல் வீடாகும் இம்மூன்றும்
வஞ்சத்திற் றீர்ந்த பொருள்.

எ-து : வாயால் சொல்லுஞ் சொல்லை யடங்குதல்செய்வது செல்வத்தைத் தரும்; குற்றமற்ற தொழிலால் அடங்குதல் தெய்வப் பிறப்பைத்தரும்; பழுதிலா நெஞ்சத்தால் அடங்குதல் வீட்டினைத்தரும்: இம்மூன்றும் பொய்யின்றியே மெய்யாகப் பயக்கும் பொருள்கள். (௪௩)

---

44. 14 றேர்ந்த.

45. விருந்தின்றி யுண்ட பகலும் திருந்திழையார்
புல்லப் புடைபெயராக் கங்குலும்—இல்லார்க்கொன்
றீயா தொழிந்தகன்ற காலையும் இம்மூன்றும்
நோயே உரனுடை யார்க்கு.

எ-து : விருந்துதவிர உண்ட நாளும், திருந்திய இழையினையுடையார் முயங்கப் புடைபெயராத இரவும், வறியார்க்கு ஒன்றைக் கொடாது கழிந்த நாளும் : என இம்மூன்றும் தாளாண்மையுடையார்க்கு நினைக்குந்தோறும் நோயாம். (சச)

46. ஆற்றுனை யாற்றென் றலைப்பானும் அன்பின்றி
ஏற்றார்க் கியைவ கரப்பானும்—கூற்றம்
வரவுண்மை சிந்தியா தானுமிம் மூவர்
நிரையத்துச் சென்றுவீழ் வார்.

எ-து : ஒன்றனைச் செய்யும் ஆற்றலிலாதானைச் செய்யவேண்டு மென்று நலிவானும், இரந்தேற்றார்க்கு அன்பின்றித் தனக்கு இயல்வன செய்யாது கரப்பானும், கூற்றம் வருதல் மெய்ம்மை என்று நினையாதானும் : என இம் மூவர் நிரையத்தின்கட் சென்றுவீழக் கடவார். (சரு)

47. கால்தூய்மை யில்லாக் கலிமாவும் காழ்கடிந்து
மேல்தூய்மை யில்லாத வெல்களிறும்—சீறிக்
கறுவி வெகுண்டுரைப்பான் பள்ளியுமிம் மூன்றும்
குறுகார் அறிவுடை யார்.

மடவாய்	... 38
மடன்	... 53
மண்	...1, 65
மண் (வினை).	... 92
மண்ணை	... 80
மண்ணைப்புற்று	... 80
மதம்	... 17
மதி	... 81
மதித்து	... 73
மந்திரம்	85, 102
மயிர்	11, 37

சொல்	எண்
மயிரும்	... 30
மயில்	... 87
மரம்	22, 23, 62
மருந்து	53, 74
மலர்	... 99
மலர்க்கண்ணாய்	... 99
மலை	... 49
மற்று	... 6
மறத்தல்	... 32
மறந்து	... 57
மறந்தேயும்	... 89
மறந்தொழிந்து	... 57
மறுத்தல்	... 98
மறுத்து	... 21
மறைக்கும்	... 96
மறைத்து	... 67
மன்	15, 97
மன்று	... 47
மன்னராய்	... 71
மன்னவர்	... 73
மனத்தான்	... 97
மனத்தினான்	... 81
மனம்	... 55
மனை	6, 39, 47, 100
மனையாள்	... 42
மனைவாழ்க்கை	... 100
மா	... 57
மாட்டும்	... 47
மாண்ட	... 49
மாண்டவர்	..., 49
மாண்டார்	... 39
மாண்பு	... 17
மாணாக்கன்	29, 30
மாணாமை	... 39
மாது	... 53
மாந்தர்க்கு	... 1
மாமன்	... 54
மாயம்	... 57

சொல்	எண்
மார்பின்	... 37
மாரி	... 2
மாவிற்கு	... 11
மாற்றி	... 57
மாறல்லானை	... 13
மாறாய்	... 62
மாறு	13, 50, 52, 62, 87, 88
மானத்தான்	... 57
மிசை	... 48
மீது	... 96
முகிழ்	... 30
முடிய	... 24
முதல்வன்	... 8
முது	72, 85
முதுநூலார்	... 72
முதுநூலுள்	... 85
முயிறு	... 98
முரண்	... 50
முலை	... 45
முலையாய்	... 48
முலையார்	... 95
முழுது	... 1
முழுதுணர்ந்து	... 1
முழுதும்	... 51
முழுதேத்தி	... 1
முற்றனைத்தும்	... 71
முற்று	... 71
முற்றாமை	... 50
முற்றினான்	... 8
முன்	10, 20, 35, 39, 56, 76, 79
முன்பு	... 72
முன்பெற	... 56
முன்னர்	... 17
முன்னாளில்	... 76
முன்னே	... 51
முனை	... 15
மூங்கில்	... 55
மூத்தார்	73, 85

சொல்	எண்
மூத்தவர்	... 22
மூத்தாலும்	... 23
மூலம்	... 2
மூவாதான்	... 1
மூவாது	... 22
மூவார்	... 23
மூழ்கல்	... 92
மூழ்த்தம்	... 44
மூன்று	... 1
மூன்றும்	... 29
மெச்சிய	... 87
மெய்	67, 88, 93, 99
மெய்ஞ்ஞானம்	... 93
மெய்ம்மாறு	... 88
மெய்ம்மை	... 89
மெல்லியார்	... 19
மெலிவிடத்தும்	... 102
மெலிவு	73, 102
மெழுகு	... 65
மென்	48, 82, 97
மென்சொல்லான்	... 97
மென்மொழியால்	... 82
மேகமே	... 4
மேதைக்கு	... 22
மேய்	... 67
மேய்ந்தார்	... 41
மேலும்	... 79
மேல்	... 102
மேவரு	... 101
மேவாதாரோடு	... 101
மை	... 99
மைத்தக	... 99
மையார்	... 99
மொழி	7, 82
மொழிந்தவை	... 82
மொழிந்தார்	... 72
மொழிப்பட்ட	... 104
மொழியாமை	... 51

சொல்	எண்
மொழியால்	... 82
மொழியும்	... 3
யாக்கைக்கு	... 40
யாண்டும்	... 68
யாத்தார்	... 85
யாது	... 31
யாதும்	... 58
யாதொன்றும்	... 31
யாப்பு	... 54
யாம்	... 61
யாமே	... 20
யார்	42, 47
யார்க்கும்	... 27
யார்மாட்டும்	... 47
யார்யார்	... 42
யாழினொடு	... 94
யானை	... 7
யோகம்	... 44
வகை	... 41
வகையின்	... 87
வசை	11, 35
வடக்கிருந்தார்	... 73
வடக்கு	... 73
வடிவு	... 24
வடு	... 69
வண்	... 54
வண்டு	... 54
வணக்கம்	... 35
வணங்கல்	... 30
வணங்கா	... 24
வந்து	... 30
வயல்	... 66
வரம்பு	... 46
வருந்தாமை	... 104
வரும்	26, 76
வருவாய்க்கு	... 43
வரை	45, 80
வரைவில்லாப் பெண்	.. 80

சொல்	எண்
வரைவு	... 80
வல்	... 59
வல்லவர்	... 27
வல்லாமை	... 75
வல்லார்	... 22
வலங்கொண்டு	... 30
வலம்	11, 30
வலி	... 73
வலியழிந்தார்	... 73
வவ்வன்மின்	... 26
வவ்வார்	... 38
வழக்கு	26, 43, 103
வழங்கார்	... 80
வழங்குவான்	... 34
வழி	15, 66, 80, 81, 104
வழிப்படர்	... 104
வழிபடுவான்	... 29
வழிபாடு	... 43
வழியாய்	... 81
வழீஇ	... 38
வள்ளல்	... 34
வளர்தொட்டு	... 66
வளம்	... 66
வளர்ப்பருமை	... 75
வளர்ப்பு	... 75
வன்	... 97
வன்கண்	... 7
வன்சொல்லான்	... 97
வனப்பு	7, 9, 20, 24, 37, 98
வனப்பும்	... 37
வனப்பே	... 37
வாட்டான்	... 9
வாடாத	... 7
வாணிகன்	... 34
வாதி	... 56
வாய்	17, 26, 55, 76, 86, 89, 104
வாய்ச்சொல்	... 26
வாய்த்த	... 24

சொல்	எண்
வாய்ப்ப	75, 104
வாய்ப்பன	... 27
வாயான்	... 99
வாயில்	... 17
வாயுடையார்	... 76
வாயுள்	17, 86
வாயுறையே	... 69
வார்	19, 46, 55
வார்குழலார்	... 19
வார்புருவம்	... 55
வாரம்	... 85
வாரா	... 82
வால்	... 27
வாழ்க்கை	... 100
வாழ்க	... 68
வாழ்த்தியது	... 86
வாழ்தல்	15, 68
வாழ்ந்தார்களே	... 100
வாழ்ந்து	... 78
வாழ்வதும்	... 16
வாழ்வன	... 84
வாழ்வார்	71, 76, 100
வாழ்வான்	... 79
வாழ்வு	... 99
வாழான்	... 68
வான்	... 27
விட்டார்	... 41
விட்டெழி	... 80
விடுதல்	... 104
விடும்	69, 97, 98
விடுவான்	... 32
விடுவானாயின்	... 32
விண்	... 49
விண்ணோரால்	... 82
வித்தகர்	... 93
வித்து	22, 23
விதம்	.. 17

சொல்	எண்
விதி	... 49
விதையாமை	... 22
விரதம்	... 14
விருந்து	43, 52
விலங்காமை	... 74
விலங்கிற்கு	... 11
விழைவு	... 32
விளங்கிழைக்கு	... 33
விளங்கு	... 33
வீடாய்	... 97
வீடு	36, 93, 97
வீவு	... 97
வீழ்	... 43
வீழாது	... 15
வெகுளி	... 32
வெண்ணெய்	... 65
வெண்பா	... 1
வெந்தீ	... 65
வெம்	15, 65
வெருட்டாமை	... 74
வெருவாமை	... 43
வெள்கிலள்	... 25
வெளி	... 57
வெளிப்படுத்து	... 57
வே	... 69
வேட்டவன்	... 33
வேண்டா	... 62
வேண்டாதான்	... 29
வேண்டார்	... 85
வேண்டான்	... 69
வேண்டின்	... 6
வேண்டுமேல்	... 6
வேண்டேல்	... 6
வேந்தன்	9, 49, 80
வேந்தனால்	... 59
வேந்து	... 4
வேல்	15, 59
வேலி	... 34

சொல்	எண்
வேளாண்மை	... 48
வேறலும்	... 13
வை	18, 60
வைகல்	... 92
வைகலும்	... 46
வைத்தல்	... 72
வைத்தால்	... 103
வைத்தனான்	... 35
வைதான்	... 86
வைப்பானே	... 34
வையாமை	... 19
வையார்	... 80

அவிழின்மீது அம்பு பறத்தலரிது 96
இருகா லெருது 20
இழைத்த தீங்கெண்ணி யிருத்தல் சிறுமை 16
இன்று காறு யாங்கண்டிலம் 61
உள்ளநோய் வேண்டா வுயிர்க்கு 62
எண்பதின் மேலும் வாழ்வான் 79
எழுத்தினைக் கல்லாமை தீது 51
ஒருவன் எல்லாம் அறிவானும் இல் 31
ஒரோவொருவர்க் கொல்காதோ ரொன்றுபடும் 27
கங்கைக்கரைப் பூசை போறல் 102
கவரிமானுக்குக் கூற்றம் மயிர் 11
காக்கையைக் காப்படுத்த சோறு 40
காத்துண்பான் காணுன் பிணி 8
காதிரண்டு மில்லாதாள் ஏக்கழுத்தம் செய்தல் 5
குரைத்தெழுந்த நாய்வாயுள் நல்ல தசை 17
கொடும்புலிகொட்கும் நெறிவழங்கார் 80
கொண்டான் வழியொழுகல் பெண் 15
கோல்வழி வாழ்தல் குணம் 15
சிலம்பிக்குக் கூற்றம் சினை 11
சிறிதெனினுங் குன்றுபோற் கூடும் பயன் 65
செம்மை செத்தால் அறிக சிறந்து 103
சொல்லின் வனப்பே வனப்பு 37
தந்தையா ணுகும் குலம் 33
நண்டுக்குக் கூற்றம் அதன் பார்ப்பு 11
நல்லார்கள் கேட்பின் நகை 5
நல்லா ரினத்து நகை 56
நாவகமேய் நாடின் நகை 12
நிழற்கண் முயிறு 98
நிற்பனைத்தும் நெஞ்சிற்கோர் நோய் 29
படைக்கு வனப்பு யானை 7
பருத்தி பகர்வுழி நாய் 95
பல்லார் நகைகெட வாழ்வது நன்று 16
பாத்திப் புதைத்தாலும் நாறுத வித்துள 23
பிழைத்த பொறுத்தல் பெருமை 16
பிறர்தாரம் பிறந்த தாய் 83
பிறர் பொருள் ஓடுபோல் 83
புல் மேய்ந்தார் 41
பூத்தாலுங் காயா மரமுள 23
பூவாது காய்க்கும் மரமுள 22
பெற்றனைத் தெய்வமாத் தேறுமால் தேர்ந்து 92
பேதைக்குஉரைத்தாலும் செல்லா துணர்வு 23
மனத்தினு ளுகும் மதி 81
யாதொன்றும் ஒருவன் அறியாதவனு மில் 31
வரம்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடியுயரும்
குடியுயரக் கோவுயரும் 46
வருவாய்க்குத் தக்க வழக்கறிதல் 43
வாய்ச் சொல்லே யன்று வழக்கு 26
வாயுள் தறி யெறியார் தக்கரேதாம் 86
விதையாமை நாறுவ வித்துள 22
விலங்கிற்குக் கூற்றம் கோடு 11

[உரையின்கீழ் வரியின் எண்ணிற்கு எதிராக அச்சுப்பாடமும் பிரதிபேதமும் Hyphen இடையிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளன.]

செய்யு ளெண்	சீரெண்	உரை : வரி	பாட பேதம்
4	7		நாட்டிற்கு
6	14		இசையும்
7	12		சேவகர்க்கு
,,		3	செங்கோலுக்கு - அரசற்கு
10	5		நன்றுணர்வான்
,,		4	தனிசு கொடுத்தானைக் கண்டால்-தனிசு வேண்டி வருந் தானொருவனைக் கண்டால் தனிசு
13	11		நஞ்சாம்
14	6		நள்ளார்கண்
,,		4	நிரம்பாதே - நிரம்ப முடியாதே
15	11-12		வீழ்வது தன்னொடு
16	11-12		பல்பொருளால் நல்லார்
,,		4	உதவிப் பல - உதவிய நல்லா
17	6		மாண்பில்லார்
18	6		ரகலல்கு
,,	13		உடம்பினு
,,	3		கொள்ளாமை
19	4		மெல்லியலார்
20	10		மிலம்பண்டு
,,	12		வனப்புடையம்
,,	13		என்பார்
21	8		நள்ளானுய்
22	7		நூல்வலவர்
23	4		வென்றறியார்
,,	9-10		விதைத்தாலும் நன்றுகா
24		4	கூடியொரு - கடிதொரு
25	6		ராய்ப்பிற
,,	13		திறமது
,,	14		பெண்ணின்
26	3		பிறர்பொருள்வவ்

செய்யுளெண்	சீரெண்	உரை வரி	பாட பேதம்
27	4		கோற்றருதல், கோற்புழுத், பொற்புழுத்
,,	14		ரொன்றும்
28	1		அறனட்டான்
,,	5-8		புறனட்டான்
29	6		என்பான்
30	12		ஞக்கர்
33	11-12		சிறந்ததுலகினுட்
,,		5	யானேயாம் - யழகாலேயாம்
36	5		நல்லியலின்
,,	14		வீடாக
40	7-8		தோழரிற் கொண்டாரா
41	1		உடைவிட்டார்
,,	3		ரோடிநீர்
,,	5		படை விட்டார்
,,	6		பற்றேது
,,	8		நடையிட்டார்
43	9		தெய்வதையும்
,,	12		தெற்ற
44	2-4		மூர்த்த மவற்றொடு நன்றாமக்
45	7		நன்றாகப், நன்றாய
46	12		கோவுயரும்
47	8		ஒளியாமை
,,	12		செய்யாமை
49		1	உயர்ந்துவான் - கிளர்ந்து விண்
54	12		நன்கியையக்
55	13		கொடுங்குழையைப்
57	8		ஒல்லுமெனின்
,,	11		மாற்றுக
,,	14		ஞெழித
59	11		கூர்வல்வேல்
60	3-4		நாளுமாடேர் போற்றி
,,	4		ஏர்போக்கிப்
,,	8		இன்புலத்தின்
61	15		டிலேம்

செய்யு ளெண்	சீரெண்	உரை வரி	பாட பேதம்
62	15		ஒழி
,,	3		பெண்வியக்கத், பெண்வியந்த
64	8		டடுத்துச்
65	5		பந்தன்
66	11		டென்றிவ்வைம்
70		3	இட - அட
71	10		உண்ணு
,,	12		மன்னவராய்க்
73	9		இன்னவராம்
77	4		பாடேற்றல்
,,	11-12		பசித்தார்க ணீதல்
78	8		கண்கண்பட்
79	2-4		பொழுதகத்தே பாத்துண்பான் காவாதான்
80	5		புரையில்லார்
,,		5	நிகரொவ்வா - நிகரொல்லா
81	7		யொல்குவர்
84	9		ஏற்றுவவா (தி)
,,	13		கூற்றுவப்பச்
92		1	மிதுபொலிவு பெருத - இது போல் இப்பெற்றித்தாய
93	4		சமயமே
94	7-8		யிலை நறுக்கிட் டெண்ணுத (வி)
96	2		பெண்மை
,,	11-12		இடையா யளியன்மீ
97	5		வன்சொல்லி
,,	8		மென்சொல்லின்
,,	9		ஒய்வில்லா
,,	12		நன்மனத்தால்
99	4		யம்பொருள்
,,	5		மடந்தையால்
,,	12		தீதன்றால்
100	7		நடக்கலாம்
101	14		தவநிற்கும்
103	3		பொத்தில்
,,	9-12		வைத்தா ரதுவழக்குஞ் சான்றவர்தஞ் செம்மை
104	1		வழிப்படரல்
	2-4		வாயல் வருந்தாமை வாய்மை
	5		குழிப்படரல்

[திருத்தத்தில் கேள்விக்குறி யிட்டுள்ளன உத்தேச பாடங்களாகும்.]

செய்யு ளெண்	சீரெண்	உரை வரி	பிழை	திருத்தம்
12	13		நாவகமே	நாவகமேய்
17		4	தசையின்	தசையும்
18		1	கண்ணே	கண்ணோ
30	12		ஞுக்கன்	ஞுக்கர்
		1	குடுமித்தலையின்	குடுமி ; தலையின்
32		1	தமக்குப்	தனக்குப்
34		2	டொக்கும் ;	டொக்கும்,
,,		3	கோடலான்,	கோடலான் ;
40	7		தோழுணிற்	தோழுரிற்
43	11		தேற்ற	தெற்ற
,,		1	பகுதியின்	புகுதியின் ?
47	5		பழியாமை	பழியாமைப்
,,	12		செய்யற்க	செய்யாமை
53	7		ஊணமைவு	ஊணமர்வு ?
55	11		நியமத்தா	எனவிகழ்ந்தா
58	6		ஈடில்	வீடில் ?
59	4		போர்த்த	போத ?
60	(அடிக் குறிப்பு 10-12)		யென்றிவை பாற்படுப் பானுழலோன்	யென்றிவை பாற் படுப்பா னுழவோன்
62		3	மாயா	கர்மம் போல மாய
64	1		பிடிப்பிச்சைப்	பிடிப்பிச்சை
,,	(அடிக்குறிப்பு 5)		டெடுத்திரந்த	டடுத்திரந்த
76	8		தொக்க	தொக்கு ?
86	8		நொய்த	நொய்தா ?
98		4	முயிற்றோடு	முயிற்றோடு அழலை

இப்பதிப்பில் காட்டிய மேற்கோள் நூல்கள்

தமிழ் நூல்கள்

அருங்கலச் செப்பு
கம்ப ராமாயணம்
சங்க இலக்கியங்கள்
சிந்தாமணி
சிலப்பதிகாரம்
தனிப்பாடற்றிரட்டு
திருவாசகம்
திவாகரம்
தேவாரம்
தொல்காப்பியம்
நன்னூல்
நாலாயிரப்பிரபந்தம்
நிகண்டு சூளாமணி
நேமிநாதம்
பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள்
பாரதியார் பாடல்
பிங்கலந்தை
புறத்திரட்டு
மணிமேகலை
முத்தொள்ளாயிரம்
ராமப்பய்யன் அம்மானை
விறலிவிடுதூது
வீரசோழியம்

வடநூல்கள் (மூலம் அல்லது மொழிபெயர்ப்பு)

அஷ்டாங்க ஹ்ருதயம்
ஆசாராங்க சூத்திரம் முதலியன
ஆபஸ்தம்ப க்ருஹ்ய சூத்திரம்
உஶனஸ் ஸம்ஹிதை
(சுக்ரஸ்மிருதி)
கவி கல்பலதா
சரக ஸம்ஹிதை
சுச்ருதம்
ஸங்கியாஸ தர்மம்
ஸுபாஷித ஸங்தோஹம்
தந்திராக்யாயிகம்
தன்வந்தரி நிகண்டு
பஞ்சதந்திரம்
(Harvard University series)
மனுஸ்மிருதி
யோகஶாஸ்த்ரம்
(ஹேமசந்த்ராசார்யர்)
லகு அத்திரி ஸ்மிருதி
லகு ஹாரீத ஸ்மிருதி
வசிஷ்ட தர்மசூத்திரம்

பிறநூல்கள்

ராமாயணம் - எழுத்தச்சன் (மலையாளம்)
History of Dharmasastra by P. V. Kane Vol. I & II
Jaina Penance by C. R. Jain
Antagada Dasao

ஒரு குறிப்பு

முன்னுரை 23-ம் பக்கத்தில் கீழ்க்கணக்கு நூல்கள் தோன்றிய கால முறை ஒருவாறாகத் துணிந்து கொடுக்கப்பட்டுள்ளது. இம்முறையில் சில திருத்தங்கள் வேண்டுமெனப் பிற்பட நிகழ்ந்த ஆராய்ச்சியால் விளங்கிற்று. இத்திருத்தங்களை அமைத்துக் கீழே காட்டியிருக்கின்றேன்.

இ. பி. 450 - 500 களவழி
முப்பால்
முதுமொழிக்காஞ்சி

இ. பி. 550 - 650 கார் நாற்பது
இன்னா நாற்பது
ஐந்திணையைம்பது
நாலடி
நான்மணிக்கடிகை
பழமொழி

இ. பி. 650 - 750 திரிகடுகம்
ஐந்திணையெழுபது
திணைமொழியைம்பது
கைந்நிலை
ஏலாதி
திணைமாலை நூற்றைம்பது
சிறுபஞ்சமூலம்
இனியது நாற்பது
ஆசாரக்கோவை

இம்முறைக்குத் தக்கபடி 24-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள காலப் பகுதியைத் திருத்திக் கொள்ளுதல் வேண்டும். அங்கே 9-வது எண்ணாகக் கொடுக்கப்பட்டுள்ள திணைமொழியைம்பது என்ற நூலின் ஆசிரியர் பெயரைச் சாத்தந்தையார் மகனார் கண்ணஞ் சேந்தனார் என்று திருத்திக் கொள்க. சிறுபஞ்சமூலத்தின் ஆசிரியர் பெயர் மாக்காயனார் மாணாக்கன் மாக்காரியாசான் எனச் சில பிரதிகளில் உள்ளது, ஏலாதியின் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் மாக்காயனார் மாணாக்கர் கணிமேதாவியார் எனவும், இனியது நாற்பதின் ஆசிரியர் மதுரைத் தமிழாசிரியர் மகனார் பூதஞ்சேந்தனார் எனவும், சில பிரதிகளில் காணப்படுகின்றன. கார்நாற்பது இயற்றியவர் மதுரைக் கண்ணங்கத்தனார் எனச் சிலபிரதிகளில் குறிக்கப் படுகிறது. முன்னுரை 28-ம் பக்கத்தின் அடிக்குறிப்பில் ‘ கருங்குழலாதனார் (புறம்-7) ’ என்பதனைச் சேர்க்க.

பிற்சேர்வு

பழைய தமிழ் நூல்களின் காலத்தைத் துணிவதற்குரிய சரித்திரச் சான்றுகள் ஓரோவழியன்றிக் கிடைப்பன வாகா. இச்சான்றுகள் கிடையாத வழி, நூல்களின் அகச்சான்று கொண்டே காலந்துணிதல் இயலும். இவ்வகைச் சான்றுகளுள் முக்கியமானது சொல்லாராய்ச்சியாம், சொல்லாராய்ச்சி காலந் துணிதற்குரிய கருவியாதலை ஒருசில உதாரணங்களால் விளக்குகின்றேன்.

I

பொழுது என்ற சொல்லை எடுத்துக் கொள்வோம். தமிழிலக்கியத்தில் முதன் முதலில் காணப்படும் வடிவம் இதுவே யாகும். புறநானூற்றில்,

> கடந்தடு தானைச் சேர லாதனை
> யாங்கனம் ஒத்தியோ வீங்குசெலல் மண்டிலம்
> பொழுதென வரைதி புறக்கொடுத் திறத்தி
> மாறி வருதி மலைமறைந் தொளித்தி
> அகலிரு விசும்பி னானும்
> பகல் விளங் குதியாற் பல்கதிர் விரித்தே. (8)

என வருகின்றது. இச்சொல்லை அழுத்திக் கூறவேண்டும் இடங்களில் 'பொழுது' எனக் கற்றறிந்தோர் அனைத் தொலிகளையும் அழுத்திக் கூறியே வந்தனர். ஆனால் சாதாரண மக்கள், 'போழ்து' என முதலசையை நீட்டி அழுத்தம் பெற வைத்தனர். இந் நிலையில் பழங்கன்னடத்திலுள்ள 'பொழ்து' என்பதும் தெலுங்கிலுள்ள 'பொர்து' என்பதும் தோன்ற லாயின. உலக வழக்கில் முதலில் தோன்றிய 'போழ்து', பின் நாளடைவில் இலக்கியங்களிலும் ஏறத் தொடங்கி விட்டது. கலித்தொகையில் எட்டு இடங்களில் (4, 82, 93, 94, 108, 117, 143, 145) இது வருகின்றது. உதாரணமாக,

> இப்போழ்து போழ்தென் றதுவாய்ப்பக் கூறிய
> அக்கடவுள் மற்றக் கடவுள். (93)

என்ற பகுதியைக் காண்க. திருக்குறளில் ஐந்து இடங்களிலும் (412, 539, 569, 930, 1229), நான்மணிக் கடிகையில் மூன்று இடங் களிலும் (45, 76, 93) இச்சொல் வந்துள்ளது. ஒருதாரணம் தருகின்றேன் :

> பதிமருண்டு பைத லுழக்கு மதிமருண்டு
> மாலை படர்தரும் போழ்து. (குறள், 1229)

வழக்கில் இச்சொல் நிலைத்துவிட்ட பின்னர் அத்துச் சாரியை முதலியன பெற்றும் வரலாயிற்று.

'பூமி நடுக்குறாஉம் போழ்தத்து' (9, 20)

எனவும்,

'போதித் தலைவனொடு பொருந்திய போழ்தத்து' (15, 26)

எனவும், மணிமேகலையில் ஆட்சி யுளது.

நாலடியாரிலும் இச்சொல் உருபு பெற்று வந்துள்ளது :

நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉம் ;
கல்லாரே ஆயினுஞ் செல்வர்வாய்ச் சொற்செல்லும் ;
புல்லீரப் போழ்தின் உழவேபோல் மீதாடிச்
செல்லாவாம் நல்கூர்ந்தார் சொல். (115)

காலஞ் செல்லச் செல்ல, 'போழ்து' என்பது இடையிலுள்ள ழகர வொற்று நழுவி யுச்சரிக்கப்பட்டது. சில பிரதேசங்களில் இறுதியிலுள்ள 'து' நழுவி யுச்சரிக்கப்பட்டது. எனவே 'போது' என்றொரு வடிவும், 'போழ்' என்றொரு வடிவும் உலக வழக்கில் வரலாயின. இவ் விரண்டனுள் 'போழ்' என்பது பிராந்திய வழக்காகவே நின்று திசைச் சொல்லாய் முடிந்தது. மலையாள மொழியில் 'போழ்' என்றே இன்றும் வழங்குகின்றது. அம்மொழியிலுள்ள இலக்கிய வழக்கிலும் பண்டுதொட்டு உள்ளது. எழுத்தச்சனது இராமாயணத்தில்,

'அப்போழே கங்க கடந்நீடினான் விஶ்வாமித்ரன்'

என வருகின்றது. ஆனால் 'போது' என்பது தமிழ் நாட்டில் உலக வழக்கொடு நில்லாது இலக்கிய வழக்கினும் புகுந்து விட்டது. வழக்குச் சொற்களை மிகுதியாய் ஆண்ட நூல்களின்கண்ணேதான் முதன்முதலில் இச்சொல் புகுந்திருத்தல் கூடும். இவ்யூகத்திற் கேற்ப, பக்தி நூல்களாகிய தேவாரம், நாலாயிரம் முதலியவற்றில் இச் சொல் காணப்படுகின்றது. உதாரணமாக அப்பர் தேவாரத்தில்,

எப்போதும் இறையும் மறவாது நீர்
முப்போதும் பிரமன் தொழ நின்றவன்
செப்போதும் பொனின் மேனிச் சிவனவன்
அப்போதைக் கஞ்சல் என்னும் ஆரூரனே. (V, 6, 1)

என வருகின்றது. திருமங்கை மன்னன் பெரிய திருமொழியில்,

எப்போதும் பொன்மல ரிட்டிமையோர் தொழுது தங்கள்
கைப்போது கொண்டிறைஞ்சிக் கழல்மேல் வணங்க நின்றாய்
இப்போதென் னெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போக லொட்டேன்
நற்போது வண்டு கிண்டும் நறையூர் நின்ற நம்பியோ, (7. 2. 8)

என முதலடியிலும் மூன்றா மடியிலும் வருகிறது.

உரைமேற்கொண் டென்னுள்ள மோவாதெப் போதும்
வரைமேல் மரகதமே போலத்—திரைமேற்
கிடந்தானைக் கீண்டானைக் கேழலாய்ப் பூமி
இடந்தானை யேத்தி யெழும் (இயற் I, 26)

என முதலாழ்வார்களுள் ஒருவராகிய பொய்கையார் வாக்கிலும் வருகின்றது. பக்தி நூல்களிலன்றி, பிற இலக்கியங்களிலும் இவ்வழக்குக் காணப்படுகிறது. முத்தொள்ளாயிரத்தில்,

நெடுவீதி நேர்பட்ட போது (புறத்திரட்டு 1525)

என வந்துள்ளது.

'பொழுது' என்ற சொல், தனிப்பட நின்று காலகதியில் அடைந்த வேற்று வடிவங்கள் மேலே உணர்த்தப்பட்டன. இச் சொல் அகர இகர மாகிய சுட்டெழுத்துக்களோடும், எகரமாகிய வினாவெழுத்தோடும் புணர்ந்து வருங்கால் அடைந்துள்ள வேறுபாடுகள் இனிக் கவனிக்கற்பாலன. அப்பொழுது, இப்பொழுது, எப்பொழுது என வருதல் சாமானியம். அப்போழ்து, இப்போழ்து, எப்போழ்து என வருதல் பண்டை இலக்கியங்கள் சிலவற்றிற் காணலாம். அப்போது, இப்போது, எப்போது என வருதலும் முன் காட்டிய உதாரணங்கள் கொண்டு தெளியலாம். இவற்றின் மேலாக, அப்போ, இப்போ, எப்போ என்ற உருவங்களும் நாளடைவில் வழக்கிற் புகுந்தன; உலக வழக்கி லிருந்து சாமானிய நூல்களிலும் ஏறின.

ஆண்டவனே இப்போ அழைத்த பணிவிடை யேன்!

என்று ராமப்பய்யன் அம்மானையில் (1039) வந்துள்ளது. சில காலத்துக்கு முன் இயற்றப்பெற்ற கீர்த்தனங்களிலும், பதங்களிலும், நாடகங்களிலும், இது போன்ற சொற்கள் மிகுதியாய் வழங்கப்பட்டுள்ளன. உதாரணமாக,

எப்போ தான் இரங்குமோ ஏதோ உன் திருவுள்ளம்

என்ற கீர்த்தனையைக் கூறலாம். இக்காலத்து 'அப்போ' முதலிய சொல்லுருவங்களே உலக வழக்கிற் கற்றாரிடையும் மற்றாரிடையும் மிகுதி

யாகக் காணப்படுகின்றன. ஒலி முயற்சியின் எளிமை காரணமாக இவ் வழக்கு ஏற்பட்டுள்ள தெனத் தெள்ளிதின் உணரலாம். இச்சொற்கள் தாமும் 'அப்பொ, இப்பொ, எப்பொ' என ஈற்று நெடில் குறுகியும், 'அப்ப, இப்ப, எப்ப' என ஈற்றுயிர்மெய் பகர அகரமாய்த் திரிந்தும், 'அப்பவும், இப்பவும், எப்பவும்' என உம் என்ற இடைச் சொற் பெற்றும் பேச்சு முறையில் வழங்கி வருதல் யாவரும் அறிவர்.

ஆகவே, பொழுது, போழ்து, போது; அப்போ, இப்போ, எப்போ; அப்ப, இப்ப, எப்ப; அப்பவும், இப்பவும், எப்பவும்: என்ற சொல்லுருவங்கள் கால அடைவில் முறையே தோன்றி யுள்ளன. தொல்காப்பியர்

> முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
> இயல்பென மொழிவர் இயல்புணர்ந் தோரே (அகத். 4.)

எனப் 'பொழுது' ஒன்றையே எடுத்தாண்டுள்ளார். திவாகரரும் 'பொழுது' என்ற உருவமொன்றனையே காலப் பெயர்களுள் தந்துள்ளார். இதனை,

> வேலையும் அமையமும் காலையும் எல்வையும்
> பதமும் காலமும் பொழுதெனப் படுமே. (I, 108.)

என்ற சூத்திரத்தால் அறியலாம். பிங்கலர் தமது நிகண்டில்

> போழ்தும் கொன்னும் பொழுதும் செவ்வியும்
> எல்வையும் வேலையும் அமையமும் காலையும்
> காலும் பதமும் காலம் ஆகும். (II, 187.)

எனக் கூறியமையால் 'போழ்து' என்ற சொல்லுருவத்தையுங் கொண்டனர். மண்டலபுருடரும் (16-ம் நூற்றாண்டு) மேலைச் சூத்திரத்திலுள்ள 'கால்' என்பதற்கு மாறாகப் 'பாணி' என்ற ஒரு சொல்லைக் கொண்டு, 'பொழுது' 'போழ்து' என்ற இரண்டனையுமே உடம்பட்டனர். இதனை,

> வேலையே அமையஞ் செவ்வி யெல்வையே பொழுது பாணி
> காலைகொன் பதமே போழ்து காலப்பேர் ஈரைந்தாமே (I, 80)

என்று அவர் கூறுவதனால் அறியலாம். இங்குக் காட்டியவற்றால் 'போது' என்பது காலப் பொருளில் வருதல் பிற்பட்ட வழக்கென்பது விளங்கும். 12-ம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றிய நேமிநாதம்

> அன்ன பொழுது போதாம் (35)

என்று கூறுவதனால் 'பொழுது' என்பதே 'போது' எனத்திரிந்த தென்பதும், திரிந்துவந்த புதுச்சொல் வழுவமைதியாகக் கொள்ளற்பால

தென்பதும் நேமிநாதமுடையார் கருத்தாகும். ஆனால் நிகண்டுக்காரர்கள் சுமார் 1000-ஆண்டுகளாக இச் சொல்லை உடன்படவில்லை. மலர் என்ற பொருளுடைய 'போது' என்பதனோடு இதனை மயங்கவைத்தல் கூடா தெனக் கருதியமை ஒரு காரணமாகலாம். இங்ஙன மிருப்ப, 'கூதிர் நின்றன்றாற் போதே மாதிரம்' என நெடுநல்வாடை (72) யிற் பயின்று வருவதாகப் பதிப்பித்து, அகநானூற்றுச் செய்யுளொன்றும் (264) ஒப்புமைப் பகுதியாக மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதைய ரவர்களாற் காட்டப்பட்டுள்ளது. அகநானூற்றில் 'கூதிர் நின்றன்றாற் பொழுதே காதலர்' எனவே வருகின்றது. ஆதலால் 'போதே' என்ற பாடம் ஆதாரம் யாதுமின்றித் தனித்து நிற்கின்றது. இஃது ஏடெழுது வோரால் நேர்ந்த பிழை யெனவும், 'பொழுதே' என்பதுவே பாடமாதல் வேண்டு மெனவும் கொள்ளத்தக்கன. 'போதே' என்று பாடங்கொள்ளின் ஒரூஉ வெதுகையின் நலங்கெடுதலும் உணரற்பாலது.

மேற்குறித்த பல்வேறுவடிவங்களுள், 'போது' என்பது அப்பர்தேவார முதலியவற்றிலே முதன் முதற் காணுதலால், அச்சொல் காலம் என்னும் பொருளில் வந்துள்ள நூல்களெல்லாம் அவர் வாழ்ந்த 7-வது நூற்றாண்டினை அடுத்துள்ளனவாதல் ஒருதலை. முதலாழ்வார்களுள் ஒருவராகிய பொய்கை யாழ்வார் இச்சொல்லை ஆளுதலால், அவரும் அந் நூற்றாண்டுக்கு மிக முன்பு வாழ்ந்தவரல்லர்; 6-ம் நூற்றாண்டின ராகலாம். இவரைக் கடைச் சங்க காலத்தவர் என்றும் களவழியின் ஆசிரியராவர் என்றும் கூறுதல் சிறிதும் ஏற்புடைத்தன்று. திணைமாலை நூற்றைம்பது என்ற நூலில்,

காணவெப் போதுமே கண்

என வருகின்றது. எனவே இக்கீழ்க்கணக்கு நூல் ஆழ்வார்கள் நாயன்மார்கள் காலத்தில் தோன்றியதாதல் வேண்டும்.

போது என்பதற்கு நேரே முற்பட்ட உருவமாக வுள்ளது போழ்து. இது வழங்கியுள்ள நூல்களை இருகூறாகப் பகுக்கலாம். இச்சொல் தனித்த நிலையில் வருவது ஒரு கூறு; சாரியை முதலியன பெற்றுவருவது மற்றொரு கூறு. இது தனித்துவரும் நூல்கள் தேவாரம் முதலியவற்றிற்கு நேரே முற்பட்டவையாதல் வேண்டும். எனவே இவைகள் 4-ம், 5-ம் நூற்றாண்டு களில் எழுந்தனவாகலாம். இந்நூல்களுக்கு எடுத்துக்காட்டாக வுள்ளன கலித்தொகை, திருக்குறள் முதலியன. சாரியை பெற்ற வழக்காறுள்ள நூல் கள் அப்பர் தேவாரத்துக்கும் பிற்பட்டன வாதலும் கூடும். எனவே இவை 7-ம் அல்லது 8-ம் நூற்றாண்டுகளில் இயற்றப் பெற்றன வாகலாம். இந்நூல் களுக்கு எடுத்துக் காட்டாக வுள்ளன நாலடியார், மணிமேகலை முதலியன.

போழ்து என்பதன் பூர்வ ரூபமாயுள்ளது பொழுது. இவ்வுருவம் மட்டும் காணப்பெறும் நூல்கள் 'போழ்து' தனித்து வந்த காலத்திற்கும் முற்பட்டனவாதல் வேண்டும். எனவே இவைகள் கி.பி. முதல் இரண்டு நூற்றாண்டுகளில் தோன்றியனவாகலாம். இவற்றிற்கு எடுத்துக்காட்டு எனக் கொள்ளத் தக்கது புறநானூறு. ஆனால், இன்றும் இச்சொல் வழக்கிலுள்ளமையால் காலவரையறை செய்வதற்கு இது பயன்படுமாறில்லை.

'அப்போ' முதலியன, ராமப்பய்யன் அம்மானையில் வருதலாலும் முன்னூல்களிற் காணப் பெறுமையாலும் இச் சொற்கள் பயின்று வரும் நூல்களெல்லாம் 17-ம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டன என்று கொள்ள வேண்டும். 'அப்ப' முதலியனவும் 'அப்பவும்' முதலியனவும் நூல்களில் இன்னும் ஏறவில்லை. ஆனால் பேச்சு வழக்கிலிருந்து கடிதங்களில் இச் சொற்கள் ஏறி விட்டன. 'இப்பவும் இவ்விடத்தில் யாவரும் சேமம்' என்று கடிதங்களில் காணலாம்.

'பொழுது' என்ற சொல்லாராய்ச்சியினால் இலக்கியங்கள் தோன்றிய காலம் வரையறைப்பட்டு, இலக்கிய சரிதம் நமக்குப் புலப்படுகின்ற முறையை மேலே விளக்கினேன். இது முதற்படி. ஒரு மொழியில் மாத்திரம் ஒரு சொல் அடைந்துள்ள உருவ வேறுபாடுகளைக் கால முறையில் நோக்கி ஆராய்வதுடன் இம் முதலாராய்ச்சி நின்றுவிடுகிறது. இதற்கு மேலாக இம்மொழியின் கிளை மொழிகளிலே இச் சொல் வழங்குமாற்றையும் அதன் உருவ வேறுபாடுகளையும் அறிதல் வேண்டும். இது இரண்டாவது படி. இவ்வாராய்ச்சியால் இச் சொல்லின் பூர்வ சரித்திரம் நுண்ணிதின் விளங்குதலோடு கிளை மொழிகளின் சரித்திரக் கூறுபாடுகள் சிலவும் புலப்படுவனவாம். இங்ஙனமே இவ்வாராய்ச்சி மேலும் மேலும் செல்ல வேண்டுவதாகும். தமிழறிஞர்கள் இந் நெறியில் ஆராய்ந்து உண்மை காண முயல்வார்களாயின், தமிழாராய்ச்சி மிக்க பயன் விளைப்பதாகும்.

II

இனி 'உன்' முதலிய சொற்களை நோக்குவோம். இது 'நீ' என்னும் முன்னிலை யொருமைச்சொல் வேற்றுமை யுருபேற்குமிடத்துத் திரிந்துவரும் வடிவமாகும். தன்மை முதலிய இடப்பெயர்கள் வேற்றுமை கொள்ளுமிடத்துத் திரிந்து வருதல் மொழிகள் பெரும்பாலனவற்றிற்கு ஒத்த வழக்காம். வடமொழியில், அஹம் என எழுவாய் வேற்றுமையிலும், மாம் மயா, மஹ்யம் முதலியனவாகப் பிற வேற்றுமைகளிலும் வருகின்றன. லத்தீன் மொழியில் ego என்பது எழுவாய்; me, mei, mihi, me என்பன பிற வேற்றுமைகள். ஜெர்மன் மொழியில், ich என்பது எழுவாய்; mein

(er), mir, mich என்பன பிற வேற்றுமைகள். பிரஞ்சு மொழியில் je என்பது எழுவாய்; me, moi, mon என்பன பிற வேற்றுமைகள். ஆங்கிலத்தில் I எழுவாய்; me, my என்பன பிற வேற்றுமைகள். திராவிட மொழிகளிலும் இங்ஙனமே வேற்றுமையில் எழுவாய்கள் திரிந்துவரும். இவ்வழக்கினோடு ஒத்துத் தமிழிலும் நீ என்பது நின் எனத் திரிந்துவரும். தொல்காப்பியர்

நீ யென் ஒருபெயர் நெடுமுதல் குறுகும்
ஆவயின் னகரம் ஒற்றாகும்மே (உருபியல். 7.)

என்றனர். பவணந்தி முனிவரும் இங்ஙனமே கூறினர்:

யான் யாம், நீ நீர், என் எம் நின்நும் ஆம்பிற (உருபு. 8.)

என்பது நன்னூல். இங்குக் கூறிய நின் என்பதுவே பழைமையான வடிவம். பிற திராவிட மொழிகளில் முன்னிலை யொருமைப் பெயர்களை நோக்கி இதனை அறியலாம். சங்க இலக்கியங்களிலும் தொல்காப்பியர் காட்டும் சொல்வழக்கே காணப்படுகிறது. இவ்விலக்கியங்களில் 'நின்' என்பதுவே யாண்டும் வழங்கப்பட்டுள்ளது. சங்ககாலத்து இறுதியில் தோன்றிய கலித்தொகை, பரிபாடல் என்ற நூல்களிலும் இவ்வழக்கே யுள்ளது.

நீ என்பதன் பன்மை நீயிர் எனவே தொல்காப்பியர் கூறினர். 'நீயிர் நீயென வரூஉங் கிளவி' (பெயர், 34) என்பது சொல்லதிகாரச் சூத்திரம். ஆனால், இவ்வாசிரியர் கருத்தின்படி நும் என்பது நீயிர் எனத் திரிந்ததெனல் வேண்டும்.

அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை
உக்கெட நின்ற மெய்வயின் ஈவர
இ இடை நிலைஇ ஈறுகெட ரகரம்
நிற்றல் வேண்டும் புள்ளியொடு புணர்ந்தே. (புள்ளிமயங். 31)

இச் சூத்திரத்தின் கருத்து ஊன்றி நோக்கற்பாலது. நும் என்பது 'நீம்' என்றாகிப் பின் நீயிர் என முடிந்ததெனல் அதன் கருத்து. இதனால் நும் என்பது முற்கால வழக்காயிருந்து அதன் பிற்பாடு நீஇர் என்பது கால அடைவில் தோன்றியதென்று தொல்காப்பியர் கொண்டனர். தொல்காப்பியர் கருத்து அமைதி யுடையதென்பது மேற்கூறுவதனானே உணரலாகும். நன்னூலார் இச்சொல் வரலாற்றை நுனித்து நோக்கினாரில்லை 'எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே' என்னும் பொது நியதியை மனத்துட் கொண்டு நீயிர் என்பதன் பிற்கால வடிவமாகிய நீர் என்பது 'நும்' எனத் திரிந்தது என்றனர். கால முற்பிற்பாடுகளை அவர் பொருட்படுத்த வில்லை என்பது இதனால் தெளிவாகின்றது. இந் நுண்பொருளில் அவர் பிழைபட்டனர்

என்றுதான் கூறவேண்டும். ஆசிரியர் தொல்காப்பியர் நீம் என நிறுத்தியது வெறுங்கற்பிதமன்று. கன்னடத்திலும் கோதமொழியினும் நீம், நீமெ என்பன முறையே காணப்படுதலால், தமிழிலும் ஒருகாலத்து நீம் வழங்கியிருத்தல் வேண்டுமென ஊகிக்கலாம். ஆனால் தொல்காப்பியர் காலத்து அவ்வழக்கு வீழ்ந்து 'நீயிர்' என்பது உலகவழக்கில் புகுந்திருத்தல் வேண்டும். தம் காலத்து வழங்கிய நும் என்ற சொற்கொண்டு வழக்கு வீழ்ந்த சொல்லினைப் புலப்படுத்தி, பிற்கூறிய சொல்லி னின்றும் நீயிர் என்பது தோன்றிற்று எனக்காட்டுதலே தொல்காப்பியர் கருத்தாம். கால அடைவை நோக்கி இவர் உண்மை வரலாற்றைக் கூறியுள்ளது பெரிதும் பாராட்டற் பாலதாம். சீவக சிந்தாமணியில் (1932)

'நீமே, வென்றிக் களிற்றானுழைச் செல்வது வேண்டும் என்றான்'

என வருகின்றது. இங்கே நச்சினார்க்கினியர் 'நும் என்னும் சொல் நீயிர் என முழுவதுந் திரியாது மகரம் நிற்பத்திரிந்து நீம் என நின்றது' எனக் குறிப்பெழுதினர். செந்தமிழ் வழக்கொழிந்த நீம் கொடுந்தமிழ் நாடொன்றில் திசைச்சொல்லாய் வழங்கலுற்று எஞ்சிநின்றதனை ஆசிரியர் எடுத்தாண்டனர் என்று கொள்ளுவதே நேரிதாகும். இதுபற்றியே 'இனி நீமென்று ஒருதிசைச் சொல்லுமாம்' என்று பக்ஷாந்தரமாக அவர் எழுதிய தென்க.

தொல்காப்பியர் அமைத்த நீயிர் என்பதனைத் தவிர நன்னூலார் (12-ம் நூற்றாண்டி னிறுதி) நீர், நீவிர் என்ற இரண்டனையும் முன்னிலைப் பன்மைகளாகத் தந்துள்ளார்.

தான்யான் நான் நீ யொருமை ; பன்மைதாம்
யாம் நாம் எலாமெலீர் நீயிர் நீர் நீவிர் (நன். பெயரியல் 30)

என்பது சூத்திரம். 11-ம் நூற்றாண்டில் தோன்றிய வீரசோழியத்தில் நீர் என்பது குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் இதன் உரை 'நீர் என்பது நீயிர் நீவிர் என ஆதேசமாம்' எனக் கூறுகிறது. 13-ம் நூற்றாண்டினதாகிய நேமிநாதம்

பேராம்பெயர் ; பெயர்த்துப் பேர்த்தாம் ; ஒடுவோடாம் ;
நீராகும் நீயிர் ; எவனென்ப—தோருங்கால்
என் என்னை யென்றாகும் ; யாமுதற்பேர் ஆமுதலாம் ;
அன்ன பொழுது போதாம். (35)

எனத் தெரிக்கின்றது. நீயிர் என்பது நீர் எனத் திரிந்தது. 'பழையவாய் நடைபெற்று வருஞ்சொற்களில் திரிந்து கடப்பனவற்றை வழுவல்லவென்று அமைத்தலே உணர்த்துதல் நுதலிற்று' என்பது பழையவுரை. இதனால் 'நீர்' என்பது வழுவமைதியாதல் தெளியப்படும். முதன் முதல் உலக

வழக்கிலே இச்சொல் தோன்றுதல் இயற்கை. ஐயப்பாடின்றிக் காலவரையறை செய்யக்கூடிய இலக்கியங்களை நோக்குவோமானால், கி. பி. 7-ம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து முன்னிலைப் பன்மையில் நீர்[1] வழங்கப்பட்டுள்ளது. உதாரணமாக, அப்பர் தேவாரத்தில்

அரும்பற்றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற்றப் படத் தூவித் தொழுமினோ (V. 12)

என வந்துள்ளது. உலகவழக்குச் சொற்களை மிகுதியாக எடுத்தாண்டுள்ள தேவாரம் திவ்யப்பிரபந்தம் முதலியவை தவிர ஏனை இலக்கியங்களில் இச்சொல் வருமாயின், இவற்றை அத்தேவாரம் முதலியனவற்றிற்குப் பிற்பட்டன வென்று கொள்ளுதல் சொல்வழக்காற்றோடு பொருந்துவதேயாம். கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்றாகிய திணைமாலை நூற்றைம்பதில்,

வாடாத சான்றோர் வரவெதிர் கொண்டிராய்க்
கோடாது நீர்கொடுப்பி னல்லது—கோடா
எழிலு முலையும் இரண்டிற்கும் மூக்நீர்ப்
பொழிலும் விலையாமோ போந்து.

என வருகின்றது. இந்நூலினை 8-ம் நூற்றாண்டினதாக் கொள்ளுதலே நேரிது. சிலப்பதிகாரத்தில் 'அடிகள் நீரே அருளுக' (பதிகம், 62) எனவும் 'அடிகள் நீரே அருளுதிராயின்' (X, 62), 'இட்ட சித்தி யெய்துவிர் நீரே' (XI 103), 'பெறுதிர் போலு நீர்' (XI, 123) எனவும் வருதல் இங்குக் கருதத் தக்கது. [2]பஞ்சகாவியங்களுள் ஒன்றாகிய இது பிற்காலத்த தென்பதற்கு இப்பிரயோகங்களும் சான்றாயமையும். பிற்காலத்து வழக்கு 'நீர்' என்பதனோடு அமைந்து விடவில்லை. நீர்கள் என்பதனை

அக்கும் ஆமையும் பூண்டன லேங்கிஇல்
புக்குப் பல்பலி தேரும் புராணனை
நக்கு நீர்கள் நரகம் புகேன்மினோ
தொக்க வானவரால் தொழுவானையே (V, 97, 14)

என அப்பர் வழங்கியுள்ளார். நீங்கள் என்பதனை

---

1. குன்று முண்டு நீர் பாடினிர் செலினே (110) எனவும், நீரும் மண்முழா அமைமின் பண்யாழ் நிறுமின் (152) எனவும், புறநானூற்றுப் பதிப்பில் காணப்படுகின்றன. முற்செய்யுளில் 'குன்று முண்டு பாடினிர் செலினே' என்பது பாடமாதல் வேண்டும். பிற்செய்யுளில் நீயிரும் என்றிருத்தல் வேண்டும். நீர் என்ற பிற்கால வழக்குப் புறநானூற்றில் வருதல் அசம்பாவிதமாம்.

2. வடமொழியிலும் 'பஞ்சகாவ்யம்' என்ற வழக்குக் காணப்படுகின்றது. 'பஞ்ச மஹா காவ்யாநி ராமாயண ரகுவம்ச குமாரஸம்பவ மாக கிராதார்ஜுநீய ரூபாணி' (கவிகல்பலதா, 78).

'நூலவையார் போல் நீங்கள் நோக்குமினே யென்றான்' (1045) எனத் திருத்தக்க தேவரும்,

பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பா நின்ற
புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள் (VI, 27, 1.)

என அப்பரும் வழங்கினர். ஆகவே முன்னிலைப் பன்மைப் பெயர்களைக் காலஅடைவில்

நீம், நீயிர், நீவிர், நீர், நீயிர்கள், நீவிர்கள், நீர்கள், நீங்கள்

என நிறுவலாம். இவற்றுள் நீயிர் சங்க இலக்கியக் காலத்தது. நீர், நீங்கள் என்பன 6-ம் நூற்றாண்டளவில் வழக்கிற் புகுந்து இன்றளவும் நிலைத்து நிற்கின்றன. நீம், நீயிர், நீவிர், நீர்கள் இந்நான்கும் வழக்கொழிந்து விட்டன; நீயிர்கள், நீவிர்கள் என்பன வீரசோழியத்திற்கு உரைவகுத்த பெருந்தேவனாரால் கொள்ளப்பட்டன. இவற்றுள் சிலவற்றை மீண்டும் வழக்கில் புகுத்துதற்கு ஸ்ரீ வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார் முதலியோர் சில ஆண்டுகட்கு முன்னர் முயன்றனர்.

இனி நும் என்பதை நோக்குவோம். இது சங்க இலக்கியங்களுள் பெருவரவிற்றாயுள்ளது. இதுவே முன்னிலைப் பெயர்களுள் காலத்தால் முற்பட்டதென்பது மேலே குறிக்கப்பட்டது. முதலில்நின்ற நகரவொற்றுக் கெட்டு 'உம்' எனப் பிற்காலத்தாரால் ஆளப்பட்டது:

ஒன்றாலுங் குறைவில்லை யூர்தி வெள்ளே
றேற்றியூர் உம்மூரே யுணரக் கூறீர் (அப்பர். VI, 9, 8.)

காலவியாப் பொன்விளக்குந் தந்தும்மைக் கைதொழுவேன் (சீவக. 1045).

இவ்வாறு நகரவொற்றுக் கெடுதற்கு இரண்டு காரணங்கள் கூறுதல் கூடும். முதலாவது நகரவுகரத்திற்குரிய ஒலியை உச்சரிப்பது சிறிது சிரமமாகும். இவ்வெழுத்தில் தொடங்கும் சொற்களில் பெரும்பாலன உலக வழக்கில் சாதாரணமாய்க் காணப்படுவனவல்ல. காணுமவற்றுள்ளும் ஒரு சில நகரவொகரம் முதலியனவாகத் திரித்து உச்சரிக்கப்படும். இதனால் சிரமமுண்மை அறியலாம். இரண்டாவது சந்தியில் 'உம்' எனப் பிரிக்கத் தக்கபடி நும் அமைந்து விடுதலும் உண்டு. உதாரணமாக 'நின்னுமாம்பிற' (நன். உருபுபுணர் 8) என்றது நின் நும் என்றேனும் நின் உம் என்றேனும் பிரிக்க இடங்கொடுக்கும். இதுபோன்று பிரிந்து நகரவொற்றுக் கெட்டு உகரமாத்திரையாய் நின்று 'உம்' என வருதலும் கூடும். ஆங்கிலத்தில் 'orange' என்ற சொல்லின் சரிதத்தை உணர்ந்தார் இதனை எளிதில் ஒப்புவர்.

உருபேற்றவழி முன்னிலைப் பன்மைவடிவங்கள் மேலே இரண்டனோடு அமைந்துவிடவில்லை. நுங்கள், உங்கள் என்பனவும் தொடர்ந்தன.

நுங்கட்கு யானுரைக்கேன் வம்மின் யான்வளர்த்த கிளிகாள்
(திருவாய் 6, 8, 5)

எனவும்,

உன்னுருவிற் சுவை யொளியூறோசை நாற்றத்
துறுப்பினது குறிப்பாகு மைவீர் நுங்கள் (அப்பர் VI, 27, 4)

எனவும்,

பொங்குமத மானமே ஆர்வச் செற்றக்
குரோதமே யுலோபமே பொறையே நீங்கள்
உங்கள்பெரு மாநிலத்தி னெல்லை யெல்லாம்
உழறுமிது குறைமுடிப்பீர்க் கரிதேயானேல் (அப்பர் VI, 27, 9)

எனவும் வரும் மேற்கோள்களால் இதனை உணரலாம். இங்குக் கவனிக்கத்தக்கது பிறிதொன்றுளது. நீர்கள் நீங்கள் நுங்கள் உங்கள் என்ற சொற்களில், அஃறிணைப் பன்மைக்குரியதாகத் தொல்காப்பியர் கூறிய 'கள்' விகுதி பன்மைச் சொற்களோடு சார்த்தி வழங்கப்பட்டுள்ளது. எனவே நும், உம் என்பன பன்மை என்ற உணர்ச்சி மறையத்தொடங்கிய காலத்து இவ் விகுதி புணர்க்கப்பட்டதாகல் வேண்டும். உருபேற்கும் நிலையில் முன்னிலைக்குரிய சொற்கள் நும், உம், நுங்கள், உங்கள் என்ற நான்குமாம். இவற்றுள் [1]நும் ஒன்றே மிகப்பழமையானது. மற்றைய மூன்று சொற்களும் பெருந்தேவனாரால் வீரசோழிய வுரையில் (காரிகை. 37) காட்டப்பட்டன. மயிலைநாதர் உம் என்றதனை மட்டும் தம் உரையில் கூறினர். 'உம்' முதலியன 6-ம் நூற்றாண்டளவில் வழக்கில் வந்தன வெனக் கொள்ளலாம்.

இனி முன்னிலை யொருமையில் உருபேற்று வரும் வடிவினை நோக்குவோம். 'நின்' என இது வருமென்பது முன்பே குறிக்கப்பட்டது. இதுவே பண்டை இலக்கியங்களிலும் இலக்கணங்களிலும் பயின்றுவருவது.

1. ஒருவீர் தோற்பினும் தோற்பதுங் குடியே (புறம்-45) எனப்பதிப்பித் துள்ளது பிழையாதல் வேண்டும். உரையில் 'நுங்குடி யன்றே' என வருதலால் 'தோற்பது நுங்குடியே' என்பதே பாடமெனக் கொள்க. இங்ஙனமே நற்றிணையில் 'கோடேந்தல்குல் தழையணிந்தும்மோடு' (368) என்பதும் 'கோடேந்தல்குல் தழையணிந்து நும்மோடு' என்றிருத்தல் வேண்டும்.

ஆனால் இதுவும் நாளடைவில் உருமாறத் தொடங்கி விட்டது. உன் என்பது பிற்காலத்துத் தோன்றி இன்றுவரையும் நிலைத்திருக்கிறது.

ஒருவனே எம்பிரானே உன்திருப் பாதங் காண்பான்
(அப்பர் IV, 26, 10)
அவ்வைக்கு மூத்த மாம னொருமகற் கின்றுன் தாதை
(சீவக. 1046)

என்பனவற்றில் 'உன்' னும்

பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேல் புகழ்தக்க பொருளே யுன்னை (அப்பர் VI, 95, 7)

என்பதில் 'உன்னை' யும்

உனையுனு முணர்வை நல்கா யொற்றியூ ருடைய கோவே
(அப்பர் IV, 46, 2)

என்பதில் 'உனை' யும்

உன்னோ டுடனே யொருகடலில் வாழ்வாரை
(நாச்சி. திருமொழி 7, 5)

என்பதில் 'உன்னோடு' ம்

உன்னை யெப்போது மறந்திட் டுனக்கினி தாயிருக்கும்
(அப்பர் IV, 112, 4)

என்பதில் 'உனக்கு' ம்

கருவாய்க் கிடந்துன் கழலே நினையுங் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
(அப்பர் IV, 94, 6)

வந்துன தடியேன் மனம் புகுந்தாய்
(பெரிய திருமொழி III, 5, 1)
உத்தமனுனது நாம மல்ல தொன்றுரைத்தல் தேற்றான்
(சீவக. 1048)

என்பனவற்றில் 'உனது' ம்

உன்னுடைய விக்கிரம மொன்றொழிய யாமெல்லாம்
(பெரியாழ் V, 4, 6)

என்பதில் 'உன்னுடைய' வும் வருதல் காணலாம்.

மேற்காட்டியவற்றுள் உருபுகள் பலவும் ‘ உன் ’ என்பதனைச் சார்ந்து வந்தமை நோக்கத்தக்கது. இங்ஙனம் பெருவழக்காகவரும் இச் சொல்லினை வீரசோழியம்தான் முதன் முதற் கூறுகின்றது. நன்னூல் இதனைக் கூறாதே விடுத்தொழிந்தது. இதற்குரிய காரணம் யாதென்று நோக்குதற் குரியது. இலக்கண ஆசிரியர்கள் வழக்கும் செய்யுளும் என்னும் இரண்டினையும் ஆராய்ந்து நூலியற்றுதல் கடமை. தொல்காப்பியர் இம்முறையில் தமது பேரிலக்கணத்தை இயற்றினார் என அந்நூற்பாயிரம் தெரிவிக்கின்றது. செய்யுள் வழக்கை ஆராய்தல் தானும் எளிதில் இயலுவதன்று. தம் காலம் வரை தமது மொழியில் இயன்றுள்ள நூல்கள் அனைத்தையும் கற்றறிதல் எத்துணை அரியகாரியம் என்பது சொல்லித் தெரியவேண்டா. நூல்கள் கிடைப்பதற்கு இக்காலத்தில் வாய்த்திருக்கும் வசதிகள் முற்காலத்தில் இல்லை. நூற்றுக்கணக்கில், வேண்டுமானால் ஆயிரக் கணக்கில், பிரதிகளை வெளியிடுதற்கு வேண்டும் அச்சு யந்திரம் முற்காலத்தில் கிடையாது. பிரதிகளைப் பல இடங்களிலும் பரவச் செய்வதற்கு வேண்டும் போக்குவரவு வசதிகளும் இல்லை. இவை போன்றன இல்லாத காலத்து நூல்வழக்கை முற்ற அறிதல் என்பது இயலாத காரியமாம். இதுவே இயலாததாயின், உலக வழக்கை வேண்டிய அளவு அறிதல்தானும் கூடாததொன்றாகவே இருக்கும். என்றாலும் ஓராசிரியர் இவ்விரண்டின் இன்றியமையாமையையும் உணர்ந்து இவற்றை அறிய ஒருவாறு முற்படுவாராயின், அதுவே நமக்கு வியப்பை விளைக்கவல்லது, தொல்காப்பியர் இங்ஙனம் செய்தவர். நன்னூலார் முதலியோரெல்லாம் முன்னோர் நூலின் வழியே சென்றனரே அன்றிப் புதுவதாகத் தம் காலத்துத் தமிழை வேண்டுமளவு ஆராய்ந்தா ரென்று கூறுதற்கு இயலவில்லை.

உலகவழக்கை முந்து நூலோர்கள் நன்கு ஆராயவில்லை யென்பது ஒருபுறமிருக்க, ஆராயவேண்டும் அவசியமில்லை என்ற கருத்தும் கொண்டிருந்தார்கள். ‘ உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே ’ என்ற ஒரு நியதியை மேற்கொண்டு விட்டார்கள். தம் கருத்தின்படி உயர்ந்த நூலாசிரியர்களது வழக்குத்தான் இவர்களால் கொள்ளப்பட்டது. பக்திநூல்களோ இதற்கு முற்றும் மாறான கொள்கையுடையன. தமிழசமுதாயத்தில் பல்வேறு திறத்தினரும் எளிதில் உணர்ந்து ஈடுபடும்படி இந்நூல்கள் அமைந்தன; இன்னிசையோடு பாடுதற்கு அமைந்தன. எனவே சாதாரண மக்களது சொல்வழக்காற்றைப் பெரிதும் பின்பற்றியன. ஆதலால் கல்வியாளர்கள் வழங்காத வழக்குக்கள் இவற்றிற் பெரும்பான்மையாய்க் காணப்படும். இவற்றுள் ஒன்று உன், உன்னை என்ற வரிசை. எனவே இலக்கணநூலோர் இவற்றைப் புறக்கணித்து வந்தனர். உயர்ந்த இலக்கிய ஆசிரியர்களும் இவற்றைக் கையாளாது விடுத்தனர். இவ்வழக்குக்களுக்குக் கால அடைவில் தகுதி யேற்பட்டதன் பின்னரே, உயர்ந்த இலக்கிய ஆசிரியர்கள் இவற்றை

ஆளத்தொடங்கினர். ஆகவே சீவக சிந்தாமணி போன்ற ஓர் உயர்தர இலக்கியத்தில் இவை காணப்படுமாயின் அவ்விலக்கியங்கள் தேவாரம் முதலியவற்றிற்கு மிகப் பிற்பட்டன என்று எளிதில் கூறிவிடலாம். இவ் வகைச் சொல்லாராய்ச்சி யின்றியே சீவக சிந்தாமணி காலத்தாற் பிற்பட்ட தென வேறு சரித்திரக் காரணங்களால் துணியப்பட்டிருப்பது இச்சொல் லாராய்ச்சியையும் முடிபையும் வலியுறுத்துகின்றது. கீழ்க்கணக்கு நூலாகிய திணைமாலை நூற்றைம்பதில்

முலையாலும் பூணாலும் உன்கண்தாஞ் சேர்ந்த
இலையாலும் இட்ட குறியை—உலையாது
நீர்சிதைக்கும் வாய்ப்புதல்வன் நிற்கும் உனைமுலைப்பால்
தார்சிதைக்கும் வேண்டா தமூஉ. (152)

என்ற செய்புளில் உன், உனை என்பவை வந்துள்ளன. ஒருகால் இச் செய்புளில் ஏதேனும் ஐயப்பாடிருப்பின், திணைமொழி யைம்பதில் பின்வரும் செய்புளைக் காண்க:

செந்தா மரைமலரும் செய்வயல் நல்லூர
நொந்தால்மற் றுன்னைச் செயப்படுவ தென்னுண்டாம்
தந்தாயும் நீயே தரவந்த நன்னலம்
கொண்டாயும் நீயாயக் கால். (36)

இங்கே உன்னை என்ற சொல்லை ஆசிரியர் வழங்கி யிருக்கிறார் என்பதில் சிறிதும் ஐயமில்லை. கீழ்க்கணக்கைச் சார்ந்தனவாகப் போற்றப்படுதலாலே இவை உயர்ந்த இலக்கியங்களாகும். மேற்கூறிய நெறியே நோக்கின், இவற்றின் காலம் அப்பரது காலத்திற்கு ஒரு நூற்றாண் டளவாவது பிற்பட்டிருக்கலாம்.

III

காலப்பெயராயும் ஏழனுருபு தொக்க பெயராயும் வருவது பொழுது என்னும் சொல். முன்னிலைப் பெயராயுள்ளது உன் முதலியன. இனி வினையெச்சமாய் நின்று இடைச் சொல்லை நிகர்த்து வரும் 'ஆனல்' என்ப தனைக் கவனிப்போம். இவ்வடிவில் இதற்குச் சொல்லமைதி கூறுதல் ஏலாது. இது முழுவடிவம் அன்று என்பது எளிதில் உணரலாம். ஆயினன் என்பது ஆனன் எனக்குறைந்து நின்றது.

அருமறையோ டாறங்கம் ஆயினனை (அப்பர் VI, 1, 6)
நல்வினையும் தீவினையும் ஆனன்றன்னை (அப்பர் VI, 11, 2)

என இரண்டுவடிவங்களும் வந்துள்ளன. ஆயினர் என்பது ஆனர் எனக் குறைந்து நின்றது.

ஆயர் மத்தெறி தயிரி ஞயினர் (சீவக 421)
முற்ற மதிச்சடையர் மூவ ராஞர் (அப்பர் VI, 10, 7)

என இரண்டு வடிவங்களும் வந்துள்ளன. இச் சொல் வடிவங்களின் வாயிலாக நோக்கினல், ஆனல் என்பதன் முழுவடிவம் ஆயினல் என்பதாதல் தெளிவாகும்.

ஒன்றனும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றகா தாகி விடும்.

என்றவிடத்து ஆயினும் என்பது ஆனும் எனக்குறைந்து நின்றது என்றனர் நச்சினர்க்கினியர் (தொல்-சொல், 230 உரை). இந் நெறியால் நோக்கினும் ஆயினல் என்பது ஆனல் எனக் குறைந்து நின்றமை வெளிப்படை.

ஆயினன் என்றதன் அமைதிக்கும் ஆயினல் என்றதன் அமைதிக்கும் ஒரு வேறுபாடு உண்டு. முதலது 'ஆ' என்ற வினையடியும் 'இன்' என்ற இறந்தகால இடைநிலையும் 'ஆன்' என்ற படர்க்கை ஆண்பாலொருமை விகுதியும் சேர்ந்துள்ளது. இதன் தன்மையை மயிலைநாதர் 'போயினன் சொல்லினன் எனவரும் சொற்கள் இறந்தகாலந் தரும் இன் இடைநிலை பெறுது போனன் சொன்னன் என வருவனவும்' (நன். 256) எனக்கூறுவது கொண்டு உணரலாம். இரண்டாவது 'ஆ' என்ற வினையடியும் இன் என்ற எச்சவிகுதியும் 'ஆல்' என்ற எச்ச விகுதியும் கூடியமைந்தது. இங்கு இருவேறு எச்சவிகுதிகள் உள்ளமை கூர்ந்து நோக்கத்தக்கது. 'இன்' என்ற எச்சவிகுதி ஒன்றனே அமைந்து ஆயின் என்பது போன்று வரும் வழக்கு மிகப் பழைமையானது. தொல்காப்பியரும் தாம் கூறும் ஒன்பது வகை வினையெஞ்சுகிளவிகளுள் 'செயின்' என்றதனைக் கொண்டனர் (தொல், சொல் 220). பண்டைக்காலந் தொட்டு இன்றுவரையும் இவ்வாய்பாட்டு வினையெச்சங்கள் வழக்கில் உள்ளன

பாஅல் புளிப்பினும் பகலிருளினும்

என்ற புறநானூற்று அடியில் (62) இவ்வெச்சவீறு உம்மை பெற்று வந்தது.

வாலறிவன், நற்றுள் தொழாஅ ரெனின் (குறள், 2)

என்று வள்ளுவரும் வழங்கினர்.

திருமால் குன்றத்துச் செல்குவி ராயின் (XI, 91)

என்பது சிலப்பதிகாரம். இவ்வழக்குப் பெருவாவிற்றுதலின் மேற்கோள் காட்டும் அவசியம் இல்லை.

'ஆல்' என்னும் எச்சவிறு மட்டும் வந்துள்ள இடங்களும் பலவாம். இது யாண்டும் 'செய்து' என்னும் இறந்த கால வினையெச்சத்தின் மேல் வருவதாகும். உதாரணமாக

இறுதியில் இன்பம் எனக்கீங் குரைத்தால் (சிலப் XI, 122)

என இளங்கோவடிகளும்,

உமக்காட் செய்து வாழலுற்றால் (IV, 1, 7)

என அப்பர் சுவாமிகளும்,

அற்றால் அளவறிந் துண்க (குறள், 943)

எனத் திருவள்ளுவரும்,

சென்றாற் குடையாம் இருந்தாற்சிங் காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற்கு அரவு (முதல் திருவந்தாதி 53)

எனப் பொய்கை ஆழ்வாரும்,

என் செய்தால் என்படோம் யாம் (இயற் - பெரிய திருவந். 6)

என நம்மாழ்வாரும் வழங்கியுள்ளார்கள். இவ்வாய்பாட்டுச் சொற்கள் தொல்காப்பியத்திலும் சங்க நூல்களிலும் காணப்படாமையால் பிற்பட்டுத் தோன்றிய வழக்கெனவே கொள்ளற்பாலன. இப்பிற்பட்ட வழக்குத் தோன்றி நிலைத்த பின்னரே செயின் வாய்பாட்டு எச்சத்தின்மேல் இதனைச் சேர்த்தல் நிகழத்தக்கது. இவ்வாறு சேர்ந்து வருவதும் நாயன்மார்கள் காலத்திலும் பின்பும் நல்வழக்கா யிருந்ததெ தென நினைக்க இடமுண்டு.

ஆடினாலும் அரனுக்கன் பில்லையேல் (அப்பர் V, 99, 9)
பழகினால் வரும் பண்டுள சுற்றமும் (அப்பர் V, 77, 9)

என அப்பரும்,

ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்தன் நாமங்கள்
தானத்தால் மற்றவன்பேர் சாற்றினால் (இரண்டாந் திருவந். 2)
காணக் கழிகாதல் கைமிக்குக் காட்டினால் (ஷை-56)

எனப் பூதத்தாழ்வாரும் இவ்வழக்கை அமைத்தருளி யிருக்கிறார்கள். ஈண்டெல்லாம் குற்றுகரவீற்று வினையடி இகரமூர்ந்து இறந்தகால எச்சமாகி, பின் 'இன்' 'ஆல்' என்பன சேர்ந்து வந்துள்ளன. இவ் வெச்சங்களிலன்றி, நக்கு, உண்டு, வந்து, சென்று என்பன போன்று உகரம் கடதறவூர்ந்து, இயல்பான எச்சங்கள் ஒழிந்த பிற எச்சங்களிலும் மேலே விகுதிகள் இணைந்து வருகின்றன.

தமக்கு நல்லது தம்முயிர் போயினால் (அப்பர் V, 43, 4)

என்றதில் வரும் 'போயினால்' இதற்குத்தக்கதோர் உதாரணமாம். இச்சொல் 'போனால்' எனவருதல் பிரசித்தம். இதனோடு முற்றும் ஒத்துள்ளது 'ஆயினால்' என்பது. இரண்டும் நெடிலீற்று முதனிலை முன்னர் [1]யகரம் வந்து இறந்தகாலம் பற்றியன; இரண்டும் முறையே 'போயின்', 'ஆயின்' என நின்று காரணம் முதலியபொருளில் வருவன; இரண்டும் ஆல்விகுதி பெற்றும் வழங்குவன; இரண்டும் இக்காலத்துப் பெருவழக்கா யுள்ளன.

இவ்விரண்டு சொற்களிலும் வரும் 'இன்' என்பதனை இறந்தகால இடைநிலை யெனக்கொண்டால் வரும் இழுக்கு யாதெனச் சிலர் வினவலாம். முதலாவது இடைநிலையோடு நிற்பின் எச்சப்பொருள் தருமாறில்லை. இரண்டாவது எச்சமுணர்த்தும் உறுப்பு யாதுமில்லாமலொழியும். மூன்றாவது இறந்தகாலத்தை யுணர்த்திய பின்னரே காரண முதலிய பொருள்களில் வரும் விகுதி சேர்தற்பாலன. 'அற்றால்' முதலியனவாக முன்புகாட்டியன வற்றைக் காண்க. மலையாள மொழியில் 'போயால்' 'ஆயால்' என வருவனவும் ஈண்டு நோக்கற் பாலன.

மேற்கூறியவற்றால் 'போனால்', 'ஆனால்' என்பன சொல்வரலாற்றில் மிகப்பிற்பட்ட வழக்கென்பதும், இலக்கிய வழக்கும் இப் பிற்பாட்டினை நன்கு தெளிவுறுத்துகின்றதென்பதும் அறியலாகும். 'ஆயின்', 'ஆயினால்' என்பன அதன் மூதாதைகள் என்னலாம். இப்பிற்பட்ட வழக்கினை

தமக்கவர் தாம் சார்வரிய ரானால் (பெரிய திருவந். 9)

என நம்மாழ்வாரும் (சுமார் 9-ம் நூற்றாண்டு)

ஆகி யவரும் அதுவானால் தாய்த்தாய்க் கொண்டு
ஏகு மளித்திவ் வுலகு (15)
எத்துணையும் ஆற்றப் பலவானால் (37)

---

1. இவ் யகரம் பற்றிச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் வேறுபட்ட கருத்துடையாராய்ச் சில குறிப்புக்கள் எழுதியுள்ளனர் (தொல். சொல். சேனா 228: நச் 230 உரை).

என நாலடியாசிரியரும் (சுமார் 7-ம் நூற்றாண்டு) எடுத்தாண்டுள்ளார்கள். இவ் ஆட்சியும் மிக அருகியே காணப்படுகின்றது. இங்ஙனமிருப்ப, வள்ளுவர்

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை. (53)

எனத் தம் பொய்யாமொழியிற் கூறுகின்றார். இங்குவரும் 'ஆனால்' என்னுஞ் சொல் இத் தெய்வப்புலவரது காலம் நாலடியாரின் காலத்தை ஒட்டியதாகலாம் என்றுகொள்ள இடந்தருகின்றது; இக்காலத்திற்கு மிக முற்பட்டதாகா தென்பது உறுதி. ஆகவே, 5-ம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் வள்ளுவர் வாழ்ந்தனரெனக் கொள்வோமாயின், அது பெரும்பாலும் உண்மையாயிருக்கலா மெனத் தோன்றுகிறது.